சுதேசமித்திரன்



இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை ஸ்ரீ பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd.No.2221.

Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

"விஜய ரக்ஷணி"

(மூலகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை சமாதானம் உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிபபிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 7—8—0
விஜய ரக்ஷணி ப்ரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு, அதிருஷ்ட நாள், எண், நிறம், மறறும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜனன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செயயும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோகாம்சம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமந்துபாளி, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்
ஆசை நிறைவேறியது	'கௌசிகன்'	5
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	11
உங்கள் காலபலன்	பி வி ராவ்	18
கலாமண்டபம்	'சாண்டில்யன்'	23
பறந்துபோன சுதந்திரக் குயில்	லக்ஷ்மி அம்மாள்'	27
பெரிய புராணம்	பி ஸ்ரீ.	32
ரமாவைக் கேளுங்கள்!	'குங்குமம்'	35
தேர்த்தட்டு வார்த்தை	'வாரன்'	39
குடும்ப வைத்தியம்	'குச்சா மாமா'	41
பழிக்குப் பழி (சிறுவர் கதை)	'ராசு'	46

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XX] ஸர்வதாரிஸு மாசிமீ 30உ ★ 1949-ஸு மார்ச்மீ 13உ No. 6

சர்க்காரும் தொழில்களும்

சென்ற வாரம் வெளியான மத்திய சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நாட்டின் பல்வேறு தரப்பினரும் அபிப்ராயங்கள் வெளியிட்டு வந்திருக்கின்றனர். இதைப் பணக்காரர்கள் வரவுசெலவுத திட்டம்; முதலாளிகளுக்குச் சாதகமான 'பட்ஜட்' என்பதுபோன்ற கருத்துக்களெல்லாம் தெரிவிக்கப்பட்டன இந்நிலையில் தான் சென்ற 3, 4 தேதிகளில் புதிய டில்லியில் இந்திய தொழில் வர்த்தக சம்மேளனத்தின் கூட்டமும் நடைபெற்றிருக்கிறது.

சொற்ப காலத்துக்குள் இந்திய பொருளாதார நிலைமையை எவ்வாறு சீர்படுத்துவது என்பதில் இன்றை நேரு சர்க்கார் முழு மனதுடன் ஈடுபட்டிருக்கின்றனர் சர்க்காரைப்போலவே பொது மக்களின் நாட்டமும் ஏதேனும் ஒரு வழியில் இதில் திரும்பவேண்டிய அவசியமுண்டு. எனவே பொருளாதாரத துறையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் கைத்தொழில் வர்த்தகர்கள் சம்மேளனம் இதில் அதிக சிரத்தை கொள்வது இயற்கையே. அரசியலில் அடைந்த சுதந்திரத்தை பொருளாதாரம், சமூகம் இவற்றிலும் பிரதிபலிக்கும்படியான நிலைமை ஏற்பட்டால்தான் சுதந்திரம் என்ற சொல்லுக்கு அர்த்தமுண்டு தேசிய வாழ்வுக்கு அஸ்திவாரமான விஷயமிது.

தொழில் வர்த்தக சம்மேளனக் கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீ லால்ஜி தமது பிரசங்கத்தில் பல்வேறு அம்சங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார். சர்க்காரும் தனிப்பட்ட பேர்களும் இந்நாட்டு தொழில் அபிவிருத்திக்கு அயல்நாடடு மூலதனம் வர வகைசெய்ய வேண்டுமென்பது அவர் வெளியிட்ட யோசனைகளில் ஒன்று. இதில் அபிப்ராயபேதத்துக்கு இடமுண்டு. இந்த நாட்டில் அயல் நாட்டின் மூலதனத்தில் ஈடுபடுத்துவதில் சந்தேகம் துளிர்க்க இடமேற்படுவதும் தெளிவு. இப்போது தேசிய சர்க்கார் இயங்குவதால் இதனால் ஏற்படக்கூடிய கெடுதிகளைச் சமாளித்துக் கொள்ளலாமென்பது அவருடைய எண்ணம். முதல் போடுபவர்கள் யாராகவிருந்தபோதிலும் துணிவோடு முன் வந்து அங்ஙனம் செய்வதற்கு வாடடமாகச் சர்க்காருடைய கொள்கைகளும். விதிகளும் இல்லை என்று அவர் கலக்கத்தைக் காட்டியிருக்கிறார். ஊன்றிக் கவனித்தவர்களுக்கு உண்மை புலப்படாமற் போகாது பிரதம மந்திரி பண்டிதநேரு சமீப காலமாகத் திரும்ப திரும்ப என்ன சொல்லி வந்திருக்கிறார்? உதவிப் பிரதம மந்திரி ஸர்தார் வல்லபாய்படேல் சென்ற சில வாரங்களாகச் சொல்லிவருவதன் பொருள் என்ன? முதலீடு செய்பவர்களுக்கு மேற்படி இரு தலைவர்களும் சொல்லும் உறுதியைவிட வேறு என்ன வேண்டுகின்றனர்? தற்போதைய நிலையில் எல்லாத் தொழில்களையும் சர்க்கார் தாங்களே ஏற்று நடத்தமுடியாதென்பதை ஸர்தார் படேல் சென்னை வந்திருந்தபொழுது பட்டவர்த்தனமாக்கி அதற்கான காரணங்களையும் சந்தேகத்துக்குச் சிறிதும் இடம் வைக்காமல் பேசி சென்றிருக்கிறார். எனவே சர்க்கார் கொள்கைகள், சடட திட்டங்கள் இவற்றின் காரணமாக முதலீடு செய்வதற்குப் பயமாயிருக்கிறது. சந்தேகமாக இருக்கிறது என்றெல்லாம் தயக்கம் காட்டுவது தேச க்ஷேமத்தில் அக்கறைகொண்டவர்கள் கூறும் வாதமாகாது. ஆகவே வீண் சந்தேகம். அர்த்தமற்ற அச்சம் இவற்றைவிடடு ஏற்கனவே உள்ள தொழில்களிலும் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதிலும் முதலாளி

—அடுத்த பக்கம்.



இந்திய வர்த்தக தொழில் சபைகளின் சம்மேளனம் சென்ற 3, 4 தேதிகளில் புது டில்லியில் கூடியது.

கள் பணத்தைப்போட முன் வர வேண்டும். வர்த்தகர் சம்மேளனத்தில் பேசிய பண்டித நேரு மேற்கொண்டும் சர்க்காருடைய அபிப்ராயத்தைத் தெளிவுபடுத்திப் பேசியுள்ளார். பழைய, பெரிய தொழில்களைத் தாங்கள் ஏற்று நடத்துவதற்குப் பதிலாகப் புதிதாகவுள்ள தொழில்களை ஆரம்பிப்பதே மேல் என்று சர்க்கார் கருதுவதாயும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். முதலாளிகள் செய்ய வேண்டிய முக்கிய கடமை என்னவென்பதைப் பண்டித நேரு மிக்க வியக்தமான பாஷையில் தெரிவித்துள்ளார் தனிப்பட்ட தோரணையில் அதிகாரிகளும், மந்திரிகளும் எதைச் சொல்லி வந்திருந்தபோதிலும் ஒரு விஷயத்தைமட்டும் மறப்பதற்கில்லை. தொழில் வளர்ச்சியில் சகல விதமான உதவிகளையும் செய்வதற்கு இந்திய சர்க்கார் உறுதிகொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும் இதை ஆதாரமாகக் கொண்டு நடப்பதுதான் நேர்மை

தேசீய உற்பத்தி நிலைபற்றி சம்மேளனத் தலைவர் காட்டியுள்ள புள்ளி விவரங்கள் கவனிக்கத் தக்கவை. யுத்த காலத்தில் உச்ச நிலையடைந்திருந்த பொருள் உற்பத்தி இப்போது குறைந்து விட்டது. முக்கியமாக ஜவுளி, இரும்பு, சிமெண்டு போன்றவைகளில் உற்பத்தி அளவு வெகுவாகக் குறைந்துவிட்டதை அவர் விளக்கியிருக்கிறார். உற்பத்தி குறைந்து வரும்போது கூலி விகிதம் உயர்ந்துகொண்டே வருகிறதென்றார் கூலியை உயர்த்திக்கொண்டே போவதனால் பண வீக்கம் அதிகரிப்பதுடன், தொழிலாளர் தன்மைபற்றியும் அவர் முக்கியமாக ஒரு குறை கூறினார். கூலி உயர்வுக்கு ஏற்ப தொழிலாளர் வேலைத் திறன் அதிகரிக்கவில்லை. அதிகரிக்காததுமட்டுமின்றி 1939-ம் வருஷத்துடன் ஒப்பிட்டுப் பார்க்குமளவில் நெசவு, நிலக்கரி முதலிய பல தொழில்களில் வெகுவாகக் குறைந்தும் விட்டதென்று அவர் சில புள்ளி விவரம் அளித்துள்ளார் தொழிலாளர் தொகை அதிகரித்திருக்க மொத்த உற்பத்தி குறைந்திருக்கிறது. தொழிலாளர் இத்தகைய குறைக்கு இடமளிப்பது தேசீயத்தொழில் அபிவிருத்தியில் அவர்கள் ஒத்துழைப்பதாகாது.



கந்தன் புல் தரையில் உட்கார்ந்துகொண்டு சுவாரஸ்யமாக தினப் பத்திரிகையைப் படிப்பதில் முனைந்திருந்தான். அவன் தோழன் சடையன் பக்கத்தில் ஒரு சருகு கத்தையைப் பாய்ந்து பாய்ந்து கௌவிப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தான் கந்தன் அவனுக்கு நினைவு தெரிந்ததிலிருந்து பாளையங்குடியிலிருந்து பத்திரிகை வாங்கிக்கொண்டு போகிறான் ஆனால் ஒரு நாளானாலும் அதைப் படிக்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டானதில்லை. வரப்புகளில் குதித்தோடியும், தோப்புகளில் புகுந்து மாங்காய் அடித்துக்கொண்டும் போவானே தவிர கையிலுள்ள பத்திரிகையைப் பிரிக்கமாட்டான் ஆனால் இன்று நாயுடுசொன்ன விஷயம் வெகு நாளாக அவன் மனதில் துளிர்விட்டிருந்த எண்ணத்தை ஒரு நிமிஷத்தில் எரு விட்டுச் செழித்து வளரச் செய்துவிட்டது!

நாயுடு சொன்னது ஒன்றும் பிரமாதமான விஷயமல்ல இந்தியா தேசம் சுதந்திரமடையப்போகிறது என்றுதான் சொன்னார். சுதந்திர தினக் கொண்டாட்டத்தைக் காணத்தான் பட்டணம் போகப் போவதாகவும் சௌகரியமுண்டானால் அவன் அப்பனையும் வரச் சொல்லி நாளைக்கு வந்து பார்த்துப் போகும்படி சொன்னார். அன்று பட்டணம் காட்சி அளிக்கும் அழகையும் அலங்காரத்தையும்பற்றி பிரமாதமாகச் சொன்னார். அதைக் கேட்கக் கேட்கக் கந்தனுக்கு அப்படியே பறந்து பட்டணம் போய்விடமாட்டோமா என்றிருந்தது கடைசியில் நாயுடு "கந்தா நீயுந்தான் இந்தப்பட்டிக்காட்டிலேயே இருந்தா எப்படி? நாலு இடத்துக்குப் போனாத்தானே உலவ விவகாரம் தெரிஞ்சுக்கலாம்? கிணத்துத் தவக்களையா இருக்கப்படாதப்பா! ஒருவேளை அப்பாருக்குவரமுடியாட்டி போனாக்கூட நீ கட்டாயம் வா. நான் கூட்டிப்போறேன். பட்டணத்தைப் பாக்கணும்னா இப்பத்தான் பாக்கணும் ரொம்ப ஜோரா இருக்கும்'' என்று தூபம் வேறு போட்டுவிட்டார்.

பட்டணம் போய்ப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் அவன் மனதில் வெகு நாளாகவே அரித்துக்கொண்டிருந்தது இப்போது சுதந்திர தினமும் நாயுடுவின் வார்த்தைகளும் சேரவே அது தீவிரமாயிற்று அதனால்தான் பத்திரிகையைப் படித்துப் பார்க்கவேண்டுமென்றும் தோன்றிற்று திருப்புகழ், திருவாசகம், குறள் படித்திருந்த கந்தனுக்குப் பத்திரிகையைப் படிக்கவும் ஒரே வியப்பாக இருந்தது அதுவும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தைப் பற்றி படிக்கப் படிக்க எங்கோ ஒரு மாயா உலகில் சஞ்சரிப்பதாகவே இருந்தது தான் பட்டணத்திலேயே இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டான்

அங்கு மோட்டாரும், சைக்கிளும். டிராம் வண்டியும் ஓயாமல் போய்க்கொண்டிருக்கிறது தினம் திருவிழா போல அவ்வளவு கூட்டம். கட்டிடங்களெல்லாம் மலை மலையாக விதவித வர்ணங்களில் கம்பீரமாக நிற்கின்றன அவைகளைக் கண்டு பிரமித்து நிற்கிறான் பட்டிக்காட்டுக் கந்தன் தார் ரோட்டில் நடப்பதே தனி ஆனந்தமாக இருக்கிறது அவனுக்கு வேடிக்கையும் விநோதமும், பொருட்காட்சி சாலையின் ஆர்ப்பாட்டங்கள் வேறு? அடேயப்பா!.........பயாஸ்கோப் காட்டும் இடந்தான் எவ்வளவு - கடற்கரையில்தான் எவ்வளவு ஆனந்தமாக விளையாடலாம்! சாதாரண நாளிலேயே இப்படி எல்லாம் இருக்கும்போது சுதந்திரதினத்தன்று 'ஏ அப்பா! தோரணமும் வாணவேடிக்கையும் ஊர்வலமும். பட்டணம் முழுதும் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்படப் போவதாகப் பேப்பரில் போட்டிருக்கு. அப்படியானால் அது எவ்வளவு அழகாக இருக்கும்?

எப்போதோ ஒரு தடவை ஆத்தூரில் 'டெண்ட்' கொட்டகையில் பார்த்த ஒரு ஆங்கிலப் படத்தின் ஞாபகம் வந்தது கந்தனுக்கு. "பட்டணத்தில் சட்டைக்காரர்களை எல்லாம் நிறையப் பார்க்கலாம். கோட்டு. பூட்ஸ். தொப்பி போட்டுக்கொண்டு-பெண்கள் கவுன் போட்டுக்கொண்டு-ஸைக்கிள் மோட்டார் கூட விடுவார்களாமே!''

சட்டென்று கந்தனுக்கு ஒரு யோசனை குறுக்கிட்டது "நாயுடு இனிமே வெள்ளைக்காரன் ஆட்டமெல்லாம் அடங்கிப் போகும்னாரே... அப்படியானா அவங்கள்ளாம் இந்தியாவை விட்டுப் போயிட்டாங்கன்னா...! அவங்க போனா அப்புறம் என்ன இருக்கு! பயாஸ்கோப், எலட்டிவிளக்கு இது எல்லாம் அவங்களதுதானே! போகும்போது அதெல்லாம் கொண்டு போயிடுவாங்களே!'' கந்தனுக்கு இதை நினைத்தபோது என்னவோ போலிருந்தது. "இங்கிலீஸ்காரன் போய்விட்டால் பிறகு பட்டணத்தில் அழகே இருக்காது'' என்றுதான் அவன் மனம் கற்பனை செய்தது. அதோடு அவனுக்குத் துரையையும் லேடியையும் பார்க்கவேண்டுமென்று ரொம்ப ஆசை! இப்போது சுதந்திரம் வந்துவிடப்போவதால் அவர்களை எல்லாம் பார்க்கவே முடியாதே என்று அவன் மனம் வருந்திற்று.

இப்படி ஏதேதோ பட்டணத்துச் சிந்தனையில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தான் கந்தன் படபடவென்று மழைத்துளிகள் விரிந்த பேப்பரில் விழவும்தான் எழுந்து ஓட ஆரம்பித்தான் கந்தன் சடையன் அவனுக்கு முன்னால் ஓடினான்?

* * * *

கந்தன், அரசூர் காங்கிரஸ்கார சுப்பையாவின் ஒரேமகன், பத்து

வயதிருக்கும். இயற்கையின் மடியில் தவழ்ந்து விளையாடி வளர்ந்திருந்த அவன் அழகைப்பற்றியோ உடலமைப்பைப்பற்றியோ அதிகம் சொல்லவேண்டியதில்லை. அரசூர் ஒரு சிறிய குக்கிராமம். ஜில்லா போர்டு ரஸ்தாகூட அதைச் சீந்தவில்லை. அரசூர் போகவேண்டுமானால் ஜில்லா போர்டு ரஸ்தாவை விட்டுக் கிழக்குப் பக்கமாக மாமரங்கள் நிறைந்த வாய்க்கால் கரை மீது வண்டிச் சக்கரங்கள் உருண்டு உருண்டு பள்ளம் செய்திருக்கும் வண்டித் தடத்திலேயே கண்ணை மூடிக்கொண்டு நடக்கவேண்டும். இடை இடையே தான்தோன்றியாகப் பல ஒற்றையடிப் பாதைகள் பிரியும். எந்த வழியாகச் சென்றாலும் அரசூர் எல்லைக்குள் வந்துவிடலாம்! ஏன் நாகரீகமும் சூது வாதும் நிறைந்த உலகத்திலிருந்து விலகி வெகு தூரம் வந்துவிடலாம்!

ஊர் வந்துவிட்டது என்பதற்கு அடையாளம் மிகவும் பாழடைந்து மதில்கள் இடிந்து மொட்டைக் கோபுர அலங்காரத்துடன் காட்சியளிக்கும் கிழக்கே பார்த்த சிவன் கோவில்தான். சுற்றிலும் கண்ணுக்கெட்டியவரை கழனிகள்; வான வளையத்தைத் தொடும் பச்சை மரங்கள்.

சுப்பையாதான் அந்த ஊரில் வெள்ளையாக உடுத்துபவன். ஒன்பதாவது வரை படித்து பட்டண வாசத்தில் இருந்த அவன் இந்தக்கிராமத்தில் வந்து வாழ்க்கை நடத்துவது ஆச்சரியந்தான். அவன் கல்யாணம் கூட பட்டிணத்தில்தான் நடந்தது. அவன் மனைவி பாக்கியத்தைப் பெற உண்மையிலேயே சுப்பையா பாக்கியம் செய்திருந்தான் என்றுதான் சொல்லவேண்டும்! அவ்வளவு தங்கமான குணமுடையவள். கணவன் விருப்பத்திற்கு முகம் கோணமாட்டாள். இல்லையானால் பட்டணத்தில் வாழ்ந்த ஒரு பெண் இந்தக்குக் கிராமத்தில்கணவனோடு—சந்தோஷ வாழ்க்கை—உள்ளம் நிறைந்த வாழ்க்கை—நடத்த இணங்குவாளா?

சுப்பையா தன் மாமா சாகக்கிடக்கிறார் என்றபோதுதான் பட்டணத்திலிருந்து வந்தான். அவர் இறக்கும்போது 'பூர்விகமாக இருக்கும் சொற்ப நில புலன்களையும் விற்காமல் இங்கேயே இருந்துகொண்டு அதை விருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சுப்பையாவிற்கும், ஆரவாரமும் சூழ்ச்சியும் நிறைந்த நகர வாழ்க்கையில் வெறுப்புத்தட்ட ஆரம்பித்திருந்தது. அதோடு தனிமையும் சாந்தமும் சந்தோஷமும் நிறைந்த அரசூர் கிராமம் அவன் மனதை ஆகர்ஷித்தது.

சுப்பையா இயற்கையிலேயே அடக்கமான தேசியவாதி. தேசத்திற்கு உழைக்கவேண்டுமென்னும் ஆசை அவன் மனதில் ஊறிக்கிடக்கும் வெகு நாளைய சரக்கு. அதற்கு இது சரியான சந்தர்ப்பம் என்றும் நினைத்தான். ஒரு விதத்தில் கிராமப் புனருத்தாரணமுமாகுமல்லவா? அன்றிலிருந்து மாமாவின் சொத்துக்கு உடையவனானதோடு கிராம வாழ்க்கையையும் மேற்கொண்டுவிட்டான்.

அரசூரில் அவன் வீடுதான் சிமிண்டு பூசிய வீடு. அதுமட்டுமல்ல எல்லா விஷயத்திலும் சுப்பையாவை அந்த ஊர் ஜனங்கள் பெருமையுடன் மதித்து வந்தார்கள். எந்த விஷயமானாலும் சுப்பையாவிடம்தான் வந்து முடிவு செய்துகொள்வார்கள். படித்தவன் விவகாரமறிந்தவன் என்பதால்தான்.

சுப்பையா நடத்தும் வாழ்க்கையைப் பார்த்தே கிராமத்து ஜனங்கள் திருந்த ஆரம்பித்தனர். அவன் வீட்டை வைத்திருக்கும் ஒழுங்கையும் சுத்தத்தையும் பார்த்துத்தாங்களும் அம்மாதிரி இருக்க ஆசைப்பட்டனர். காலையில் எழுந்தவுடன் சுப்பையா வயலுக்குப் போய்விடுவான். வயல்வேலை முழுதும் தானே செய்வான். ஏற்றம் இறைப்பதிலிருந்து ஏர் பிடிப்பதுவரை. பாக்கியத்துக்கும் கிராமத்துப் பெண்களைப்போல நாள் முழுதும் வேலை இருக்கும்.

வருஷம் முழுதும் உழைத்துக்கூட சுப்பையாவால் இரண்டு காசு சேர்க்க முடியவில்லை. உழவன் கணக்குப் பார்த்தால் மிஞ்சுவது எவ்வளவு? அதுபோலத்தான் இருந்தது அவன் வாழ்க்கையும். அவனுக்கு இருந்ததெல்லாம் சொற்ப நிலமும் ஒரு சிறிய தோப்பும்தானே! ஏதோ சந்தோஷமான நிம்மதியான வாழ்க்கை நடத்தி வந்தான். அப்போதுதான் பிறந்தான் கந்தன். கிராமத்துக் குழந்தையாக அவனுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பைத் தாங்களே மேற்கொண்டனர் தம்பதிகள். நம் நாட்டுக் கல்விதான் உபயோகமுள்ளது என்பது சுப்பையாவின் கொள்கை.

நாட்டில் நடப்பதை அறிந்துகொள்ள உதவி செய்வது தினப்பத்திரிகை. ஆனால் அரசூருக்கு அது வருவதில்லை. அரசூரிலிருந்து இரண்டு மைலில் உள்ள பாளையங்குடியிலிருந்துதான் வரவழைக்க வேண்டும். அரசூர் வட்டாரத்துக்கு பாளையங்குடிதான் பெரிய நகரம். இரண்டு ஓட்டல், ஒரு ஷாப்புக்கடை, ஏன் ஒரு க்ஷவர ஷாப்புகூட அங்கு இருந்தது. சுப்பையாவின் நண்பர் நாயுடுதான் அந்த ஊர் போஸ்ட்மாஸ்டர். ஆகையால் அவரிடம் ஏற்பாடு செய்திருந்தான் சுப்பையா. அவர் பத்திரிகையை வாங்கி வைத்திருப்பார். கந்தன் சாயந்திரம் போய் அதை வாங்கி வருவான். இலவசத்தில் தனக்குப் பத்திரிகை படிக்கக் கிடைப்பதினால் நாயுடுவும் இந்தப் பணியைச் சந்தோஷத்துடனே செய்து வந்தார்.

* * * *

கந்தன் வீட்டிற்குள் நுழைந்தபோது பாக்கியம் அரிக்கன் விளக்குக் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் 'ஏண்டா கந்தா! இவ்வளவு நேரமா பேப்பரு வாங்கியார... உள்ளே தோசை வச்சு மூடி இருக்கேன் எடுத்துக்க!...என்றாள்.

கந்தன் கையில் தோசையுடன் பாக்கியத்தின் அருகில் உட்கார்ந்துகொண்டான். இரண்டு வாய்க்கொருதடவை சடையனிடம் சிறிது விண்டு எறிந்துகொண்டே 'அம்மா, என்றான். விளக்கேற்றிக்கொண்டிருந்த பாக்கியம் "ஏன்" என்றாள்.

"நீ தினம் பேப்பரு படிக்கிறயா?"

"எனக்கு நேரமேது...அப்பாருதான் படிச்சுச் சொல்லுவாரு"

'நம்ம நாடு சுதந்திரமடையப் போவுதாமே!'

"ஆமா! காங்கரசுக்காரங்க பட்ட சிரமம் வீணாகப்போவல்லே..."

"அது சரிம்மா...அன்னிக்குப் பட்டணமெல்லாம் ஒரே கொம்மாளமா இருக்கப்போவுதாம்...வாண வேடிக்கை, அலங்காரம், ஊருவலம் இன்னும் என்னென்ன எல்லாமோ நடத்தப்போறாங்களாம். பெரிய பெரிய மனுசங்க எல்லாம் வந்து பிரசங்கம் செய்யப்போறாங்களாம். நம்ம நாயுடு சொன்னாரு. அவரு கூட பட்டணம் போவப் போறாராம்...ஏம்மா நாம்பளும் போனா! அப்பாவைக்கூட நாளைக்கு வரச் சொல்லி இருக்காரு நாயுடு! என்றான் கந்தன் ஆவலோடு அவள் முகத்தைப்பார்த்தபடி.

பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்த பாக்கியம் பெருமூச்சுடன் 'எனக்குந்தான் ரொம்ப நாளா ஆசை. இப்போ எங்க முடியப்போவுது. அவருக்குத்தான் ஓச்ச ஒளிவே இல்லையே... அதோட பணம் வேணுமா? "சவுக்குக் கன்னு, சீமைக் காய்கறி வெதை எல்லாம் வாங்கணும் பணம் இல்லேன்னு சொல்லிக்கிட்டிருந்தாரு இபபோ இதுக்கு எங்கே போவறது?" என்றாள் நிராசையுடன் எழுந்துகொண்டே.

கந்தனுக்கு அவள் பதில் பிடிக்கவில்லை. அவன் அந்த விஷயத்தைப் பற்றி ஆவலாகப் பேசாததும் அவனுக்குக் கோபத்தை உண்டாக்கிற்று.

"ஆமா அப்பாருக்கு எப்பத்தான் பணமிருந்திச்சாம். ஒரு தேரு திருவிளாவுக்குக்கூடக் கூட்டிப் போக

மாட்டாரு'' என்று துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னான் அவன் கண்களில்கூட நீர் பளபளத்தது பாக்கியத்துக்கும் அது உண்மை என்று தெரியும் இருந்தாலும் கணவன்மேல் குற்றம் சொல்ல அவளுக்கு மனமில்லை

'கந்தா நீ விளையாட்டாப்பேசறே பட்டணம் போறதுன்னா எவ்வளவு பணம் வேணுந் தெரியுமா?''

"எல்லாம் தெரியும். நாயுடுதான் சொன்னாரே ஆளுக்கு முப்பது ரூபா இருந்தாப் போதும்னாரு.

"அவ்வளவு பணத்துக்கு இப்போ எங்கே போறதாம்''

"ஏன் வெள்ளிக்கிளமை அன்னிக்கு அய்யா பொட்டிலே வச்சுப் பூட்டினாரே அந்தப் பணம் எங்கேயாம்?'' குழந்தைப் பிடிவாதத்துடன் வாதாடினான் கந்தன் பணம் வைத்துப் பூட்டியதென்னவோ உண்மைதான் ஆனால் அதன் விநியோகத்தைப்பற்றி அவன் கண்டானா? அதற்கு எவ்வளவு செலவு இருக்கிறது என்று அவனுக்குத் தெரியுமா? விதை வாங்கவேண்டும் வீட்டு வருஷாந்திர சாமான் எவ்வளவோ! பாக்கியம் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் வாசலில் சுப்பையா நுழைவதைப் பார்த்து "அதோ அப்பாரு வாராரு பேசாம இரு' என்று சொல்லிவிட்டு உள்ளேபோய் வெள்ளி போலத் தேய்ந்திருந்த ஒரு பித்தளை லோட்டாவில் தண்ணீருடன் வந்தாள்.

சுப்பையா மாலை வயலிலிருந்து வந்ததும் கைகால் கழுவிக்கொண்டு நெற்றியில் நீறு தரித்துக் கொண்டதும் ஒருலோட்டா குளிர்ந்ததண்ணீர் சாப்பிட்டுவிட்டு பேப்பர் படிக்க உட்காருவான் அதை மேலாக ஒரு தடவை பாாத்த பிறகு கந்தனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டுச் சாப்பிட வருவான்

இன்றும் வழக்கப்படி பேப்பரைப் படித்தான். பிறகு "பாக்கியம் பசிக்குது...சோறு போடு...'' என்றவன் "கந்தனெங்கே..குரலையே காணோம்'' என்று சுற்று முற்றும் பார்த்து மூலையில் முகத்தைத் தூக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் கந்தனைக் கண்டதும் "ஏண்டா பயலே என்ன? அம்மா கிட்ட பூசை வாங்கினயா? என்று எழுந்துபோய் இலையினடியில் உட்கார்ந்துகொண்டு வாடா...சாப்பிட வா'' என்றழைத்தான்

'பாக்கியம், கந்தன் ஏன் அப்படி குந்திக்கிட்டிருக்கான்? என்ன விசயம்?''

"என்னன்னு கேட்டு நீங்க என்ன செய்யப் போறீங்க...? அவனுக்குப் பட்டணம் பார்க்கணுமாம் சுதந்திரத் திருவிளாவைப் பத்தி நாயுடு சொல்லி இருக்காரு. அபபவே புடிச்சு அதான் மொண மொணன்னு அரிச்சுக்கிட்டிருக்கான்.''

"ஆமா அப்பா நாயுடுகூடப் பட்டணம் போவப்போறாரு......உங்களை நாளைக்குவந்து பார்க்கச் சொன்னாரு ஏம்பா நாம்ப போவலாமா?''

சுப்பையா சோற்றைப் பிசைந்துகொண்டே "பணத்துக்கு எங்கடா போறது?...'' என்றான்.

"அப்போ போவ முடியாதா அப்பா?'' என்றான் கந்தன். அழுகையின் முன்னெச்சரிக்கையாகக் குரல், நடுக்கத்தோடு தழதழத்தபடி வந்தது

"இன்னும் ரண்டு மாசத்துக்கு மூச்சு விடாதே!'' என்றான் சுப்பையா. கந்தனுக்கு அழுகையை சமாளிக்கமுடியவில்லை ஏமாற்றம் கண்களிலிருந்து நீரை உதிர்த்தது பாக்கியத்தினால் இந்தக் காட்சியை காணமுடியவில்லை ஆனால் என்ன செய்வது? கணவனின் குணம் அறிந்தவள்

அன்றிரவு முழுவதும் கந்தனுக்குத் தூக்கமே வரவில்லை எபபடியாவது பட்டணம் பார்க்கவேண்டுமென்ற ஆசை அவன் மனதில் வளர்ந்து வேரூன்றிவிட்டது. தான் மட்டுமாவது எப்படியும் நாயுடுவுடன் போவது என்று தீர்மானித்தான்...ஆனால்...பணத்திற்கு என்ன செய்வது? அதுதான் அவனுக்குப் புரியவில்லை முப்பது ரூவா வேணுமே?

சட்டென்று தன் உண்டிப் பெட்டி (மண் கலசம்) யின் ஞாபகம் வந்தது திருவிழா பண்டிகை காலங்களில் எல்லாம் தன் தகப்பனார் கொடுக்கும் காசுகளை அதில் போட்டு சேர்த்து வைத்திருந்தான் கந்தன். நடு நிசி பாக்கியமும் சுப்பையாவும் தூங்கிக்கொண்டிருந்தனர் அதில் ரூபா 30 இருக்காது என்று தெரிந்திருந்தும் அதை உடைத்து எண்ணிப்பார்க்க அவன் உள்ளம் துடித்தது.

கந்தன் மெதுவாக எழுந்து சாமி பூஜைப் பிறையில் உள்ள தன் கலசத்தை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தான் ஓசைப்படாமல் அதை உடைத்து நிலா வெளிச்சத்தில் எண்ணினான் நாலு ரூபாயும் பதிமூணு அணாவும் மூணு பைசாவும் இருந்தது அதை அப்படியே மறுபடி அதில் போட்டு மூடி சாமியிடம் வைத்துவிட்டு வந்து படுத்துக்கொண்டான். இன்னும் இருபத்தஞ்சு ரூபாய்க்கு என்ன பண்ணுவது?

யோசனையுடன் இருந்த கந்தனின் கைகளில் அவன் அருகில் படுத்திருந்த சடையனின் உடல் பட்டது. பளிச்சென்று ஒருவிஷயம் அவன் ஞாபகத்துக்கு வந்தது அதை நினைத்துக்கொண்டதும் அவன் முகம் பிரகாசமடைந்தது ஒரு சமயம் காட்டுப்பட்டி மிரசுதார் மகன் ராமு, சடையனை விலைக்குக்கேட்டது தான் அந்த விஷயம் காட்டுப்பட்டி அரசூரிலிருந்து நாலு மைலில் உள்ள கிராமம். சினிமா டெண்ட் போட்

டிருந்தபோது கந்தன் சடையனுடன் அங்கு போயிருக்கிறான். அப்போதுதான் மிராசுதார் மகன் சடையனின் அழகைப்பார்த்து அதை விலைக்குக் கேட்டது. சடையன் ரொம்ப அழகான நாய். உடல் முழுதும் பட்டுப்போன்ற மயிர் அடர்ந்து வளர்ந்திருக்கும். பொடிக் கலர். அது கந்தனுக்கே சொந்தமானது. சிறு குட்டிமுதல் அதை அவனே வளர்க்கிறான் ஆதலால் அதை விற்பதற்கு யாரும் தடை சொல்லமுடியாது. அப்பவே இருபது ரூபாய் தருவதாகச் சொன்னார் ஐயர் ஆனால் கந்தன் மறுத்துவிட்டான். அவனுக்கு அப்போது சடையனைவிடப் பணம் பெரிதாக இல்லை. ஆனால் இப்போது.........!

"இருபத்தி ஐந்து கேட்டாலும் கொடுப்பார்" என்றதிட மனதுடன் சடையனை அணைந்தபடி தூங்கிப் போனான்.

கந்தன் எழுந்திருந்தபோது வழக்கப்படி சுப்பையா தோட்புக்குப் போய்விட்டான். பாக்கியம் கொல்லைப்புறத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள். இரவு போட்டிருந்த திட்டப்படி அம்மாவிடம் சென்று "அம்மா ஒங்களாலேதான் போமுடியல்லே?" என்னையாச்சும் நாயுடுகூட அனுப்பறீங்களா?" என்றான்.

பாக்கியத்திற்கு அவனைக் கோபிப்பதா, சிரிப்பதா என்று தெரியவில்லை, "போடா நொந்திருக்கும் காட்டி வேறே நெனைப்பே கிடையாது? பல்லு விளக்கு போ..." என்று கோபிப்பதாகப் பாவனை செய்தாள். கந்தன் அப்போதிருந்த நிலையில் அவள் உண்மையிலேயே கோபித்துக்கொண்டிருந்தால்கூடப் பொருட்படுத்தி இருக்கமாட்டான்.

"ஆவட்டும். பல்லு விளக்கப் போறேன் என்னையாச்சும் அனுப்புவயா?" என்று அதே கேள்வியை மறுபடி கேட்டான்.

"சின்னப் புள்ளே, கணக்கா விளையாடறயே! பணமிருந்தால்ல உன்னையும். கூட என்னையும் அனுப்ப!"

"நீ பணம் தார வேணும் அப்போ?"

பணமில்லாத என்ன பண்ணுவயாம்?"

"என்னவோ பண்ணறேன்...எங்கிட்ட பணமிருக்கு! அப்போ என்னை அனுப்புவியா?"

"குசாலா. போயி வாப்பா...சந்தோசமா...? என்றாள் பாக்கியம் தன் காரியத்தில் கவனமாய் ஆனால் அவன் வார்த்தையை அவள் சிந்திக்கவில்லை. விளையாட்டுப்பிள்ளை என்றிருந்துவிட்டாள்.

ஆனால் கந்தன் அவள் சொன்னதை விளையாட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. மேலே நடக்க வேண்டியதைக் கவனித்தான் சடையனைக் குளிப்பாட்டி அழகாக அலங்கரித்துக்கொண்டு காட்டுப்பட்டிக்குக் கிளம்பிவிட்டான் மிராசுதார் மகன் ராமுவிடம் நீண்ட நேரப் பேரத்துக்குப் பிறகு இருபத்திரண்டு ரூபாயைப் பெற்றுக்கொண்டு சடையனை அவர் கையில் ஒப்படைத்தான். சடையனைப் பிரிந்தது கந்தனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. சடையனும் ரொம்ப சண்டித்தனம் செய்தது. ராமு அதன் கழுத்தில் வார் போட்டுக் கட்டி இழுத்துக்கொண்டு போனபோதுகூட அது கத்துவதை நிறுத்தவில்லை. அன்று பகல் முழுதும் அவன் மனம் ஏதோ வேதனையால் வாடி இருந்தது அம்மாவோடு கூடப்பேசவில்லை சடையனைப் பிரிந்ததாலோ அல்லது வேறு என்ன காரணத்தாலோ சோர்ந்தாற்போல இருந்தான். குழந்தை பட்டணப் பைத்தியம் பிடித்துக் கோபித்துக்கொண்டிருக்கிறான் என்று நினைத்தாள் பாக்கியம்.

அன்று மாலை சுப்பையாவின் முகத்திலும் ஏதோ சிந்தனை ரேகை படர்ந்திருந்தது மாலை வேறு ஒரு விசேஷமும் நடைபெறவில்லை கந்தன் முன்னதாகவே படுத்துக்கொண்டுவிட்டான் ஆனால் தூக்கம் லேசில் வருகிறேனென்கிறதா?

சுப்பையா லாந்தர் வெளிச்சத்தில் பத்திரிகையை சுவாரஸ்யமாகப் படித்துக்கொண்டிருந்தான். பாக்கியம் வேலையை முடித்துக்கொண்டு வெற்றிலைப் பெட்டியுடன் சுப்பையாவின் அருகில் வந்துட்கார்ந்துகொண்டு பாக்கை வாயில் போட்டுக்கொண்டே 'என்னங்க...நம்ம கந்தனைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கு......எங்கயாச்சும் போகலாம்னு ஆசையா இருந்தானும். நேத்தி நீங்க முடியாதுன்னு சொன்னதிலேந்து ஒரே ஏக்கமாப் போச்சு புள்ளே" என்றாள் பரிவோடு

"ம்...ஏன், உனக்கு மட்டும் போவணும்னு இல்லையா எல்லாருக்கும் தான் ஆசையா இருக்குது"

"நான் ஆசைப்பட்டா முடியப் போவுதா? நானுந்தான் எத்தனையோ வருசமா நெனச்சுக்கிட்டு இருக்கேன், எங்க ஆத்தாளைப்பாத்து எத்தினி வருசமாச்சு...? ஒங்ககூட இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்த பிறகு எங்கயாச்சும் போயிருக்கேனா? என் தங்கச்சிக்கு கண்ணு

லம் பண்ணுவாங்க. அதுக்காச்சிம் போவ முடியப்போறதோ என்னவோ! எங்க ஆத்தாளைப் பார்க்கணும்னு எம்புட்டு ஆசையாத் தெரியுமா இருக்குது. எங்க வீட்டிலே போயிப் படுத்துக்கிட்டு உருளனும போலிருக்கு அவ கையால ஒரு வேளை சாபபிட்டா என் கவலை எல்லாம் பறந்துடாதா?

"அடேயப்பா! நீ இம்புட்டு ஆசை வச்சிருக்கியா உங்க பொறந்த ஊட்டு மேலே........!''

'எந்தப் பொம்பளைதான், தன் பொறந்த ஊட்டுமேலே ஆசை இல்லேன்னு சொல்லுவா? சாவற வரைக்கும் பொறந்த ஊட்டைப்பத்திப் பெருமையாகப் பேசிப்பாங்களே... அது போவட்டுங்க. புள்ளையை மட்டுமாவது நாயுடுகூட பட்டணத்துக்கு அனுப்பி வையுங்க. ரொம்ப ஆசைப்படுது புள்ளே!''

தன் தாயின் வார்த்தைகளை எல்லாம் கேட்டுக்கொண்டே படுத்திருந்தான் கந்தன்

"எனக்குமட்டும் ஆசை இல்லையா? இதோ பாரு பேபபரிலே சுதந்திரம் கிடைக்கப் போறதைப்பத்தி எழுதி இருக்கிறதைப் படிக்கப் படிக்க இப்படியே டில்லிக்கு ஓடிப்போயி காந்தியையும் சவர்லாலையும் கட்டிக்கிட்டுக் குதிக்கலாமனு தோணுது என்ன செய்யறது பெரிய காங்கிரஸ் பொதுக் கூட்டத்தைப பாத்து ரொம்ப நாளாச்சு பட்டணத்திலே அன்னிக்கு ஏக அமக்களப்படப் போவுதாம் கவருமெண்டு ஆபீஸிலெல்லாம் நம்ப காங்கிரசுக் கொடி பறக்கப் போவுதாம் சட்டைக்காரத் தொரையே. நம்ப காங்கிரசுக் கொடிக்குச் 'சலாம்' போடப்போறாரும் இதை எல்லாம் பாக்கணும்னு எனக்கு ரொம்ப ஆசையாத்தான் இருக்குது. ம்... என்ன செய்யறது''

கணவனின் ஆவல் நிறைந்த முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள் பாக்கியம சுப்பையாவுக்கு காங்கிரசைப்பற்றிப் பேசினுல் அனை அறியாமல் உற்சாகங் கிளம்பிவிடும் என்பது அவளறிந்ததே!

"நமக்கே இப்புட்டுஆசை இருக்கே... குளந்தே எம்புட்டு ஆவலா இருக்கும்?''

"ஆமா யார் இல்லேங்கராங்க .... என்ன பாக்கியம் நீகூடத் தெரியாம பேசறே! எங்கிட்ட ஏது பணம்? வெதை வாங்கணும்... இந்த வருசம் தன் நிலத்திலே சீமை எரு வாங்கிப் போட்டிருக்கேன்... நல்ல காய்கறிங்க பயிரிடலாம்னு யோசனை''

சிறிதுநேரம் இருவரும் பேசவில்லை மௌனம் நிலவியது. பிறகு சுப்பையா "அது சரி பாக்கியம், நீ ஏதோ பணம் சேத்து வச்சிருந்தில்ல ?'' என்ருன்.

பாக்கியம் புன் முறுவலுடன் ஏன் அதுஉங்க கண்ணிலே உறுத்து தாக்கும்...அதை நான் யாருக்கும் கொடுக்கமாட்டேன் ஆகாசவர்ணப் புடவை வாங்கணும்னு எவ்வளவு நாளா சேத்துக்கிட்டு வாரேன்''

"அப்படி நெனச்சுடாதே புள்ளே பொஞ்சாதி பணத்தே புடுங்கித் திங்கரவன்னு நெனச்சயா என்னை ?''

அதற்குமேல் அவர்கள் அன்புச் சண்டையைக்கேட்கக் கந்தனுக்கு இஷ்டமில்லை திரும்பிப் படுததுக் கொண்டான்.

அவன் மனம், தாய் தனக்காகப் பரிந்து பேசினதைப்பற்றியே எண்ணமிட்டது. "பாவம் ஆத்தாளைப்பார்க்கவும் தங்கையைப் பார்க்கவும் அவளுக்கு இருந்த ஆவல் அவள் குரலிலிருந்து நன்ருகத் தெரிந்தது. பாக்கியம் சந்தையிலிருந்து வர சிறிது நேரமானுல் கந்தன் மனதுபடாத பாடுபடும். இன்னும் காணுமே என்று தெருக் கோடியில் போய் நின்றுகொண்டு சாலையையே பார்த்துக்கொண்டிருப்பான் சந்தையிலிருந்து வாங்கி வரும் தின் பண்டத்திற்காக என்று பார்ப்பவர் நினைத்தாலும் உண்மையில் அவன் உள்ளத்தின் மூலையில் காலையிலிருந்து பிரிந்திருக்கும் தாயைக்காண வேண்டுமென்ற ஆவலையும் பிரிவின் தவிப்பையும் காணலாம்

அதை நினைத்தபோது வருஷக் கணக்காகத் தன் பாட்டியைக் காணுமல இருக்கும் தன் தாயின் மனோவேதனையைக் கற்பனை செய்துபார்த்தான் கந்தன் உண்மை நிலைமையை அவனுல் உணரமுடியாவிட்டாலும் அவன் மனதை என்னவோ செய்தது

நேற்று வரை அவன் கட்டி இருந்த மனக்கோட்டை மாற ஆரம்பித்தது தாயைப் பட்டணமனுப்பினுல்...?

ஆம் அதுதான் சரி! அது சாத்தியமா என்பதைப்பற்றியோ, அவள் தனியாகப் போவாளா என்பதைப் பற்றியோ அவன் சிந்திக்கவில்லை. அதற்கு அவனுக்கு வயதும் ஆகவில்லை கடைசியில் தாயை மட்டும் நாயுடுவோடு அனுப்புவதாகத் தீர்மானித்துவிட்டான்

அவளை அனுப்புவதினுல் இன்னெரு திருப்தியும் அவன் மனதில் படர்ந்தது சுதந்திர தினத்தில் பட்டணத்தின் அலங்காரத்தை அவள் பார்த்துவிட்டு வந்து கதை கதையாகச் சொல்லுவாளல்லவா? அதைக் கேட்கும்போது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும். நேரில் பார்ப்பதுகூட இப்போது அவனுக்கு ஸ்வாரஸ்யமாகப்படவில்லை. பிறர் சொல்ல அதைப்பற்றிய கற்பனையில் மயங்கி இருப்பதுதான் இன்பமாகப்பட்டது அவனுக்கு. அவன் தீர்மானம் வலுவடைந்ததும் நிம்மதியாகத் தூங்கினுன்.

ஆனுல் இன்னும் இரண்டு உள்ளங்கள் மட்டும் சிந்தனையுடன் புரண்டு கொண்டிருந்தன அது சுப்பையாவும் பாக்கியமும்தான் என்று சொல்லவா வேண்டும்?

* * * * *



காலையில் எழுந்ததும் முதல் வேலையாக மண் கலசத்திலிருந்த நாலுரூபா பதிமூணு மூணு பைசாவையும் எடுத்துப் பைக்குள் போட்டுக்கொண்டு வெளியே போனான். பரபர வென்று ஒரு துண்டு காகிதத்தில் பென்சில முனையை எச்சில் செய்துகொண்டு எதையோ எழுதிப் பையில் போட்டுக்கொண்டு உள்ளே வந்தான். பாக்கியம் கொல்லைப்புறம் இருந்தாள். சுப்பையா இன்னும் வாய்க்காலிலிருந்து வரவில்லை மெதுவாகச் சமையலறைக்குள்ளே சென்ற கந்தன் மூலையிலிருந்த ஒரு சட்டியைத் தூக்கி அதனடியில் உள்ள பானை மூடிமேல் ஒரு பொட்டலத்தையும் துண்டுக் கடிதத்தையும் வைத்துவிட்டு முகத்தில் சந்தோஷம் தாண்டவமாட பல் விளக்கச் சென்றான்.

பாக்கியமும் கந்தனும் கொல்லைப புறத்திலிருந்து உள்ளே நுழைந்த போது சுப்பையா கந்தனுடைய புத்தக அலமாரியில் ஏதோ செய்து கொண்டிருந்தான். ஒவ்வொருவர் முகத்திலும் ஒவ்வொரு ரகசியம் ஒளிந்திருந்தது அதை மறைக்க ஒரு அமைதியான புன் சிரிப்பு.

''கந்தா புத்தகத்தை எடுத்துப படி ...நான் மத்தியானம் வரபோது பத்துக்குறள் ஒப்பித்தாக வேண்டும் ஆமா! ஊர் சுத்தமட்டும் ஆசை இருக்கல்ல! படிக்கவேணுமா?'' என்று திட்டமிட்டுவிட்டு அவன் புத்தகத்தை எடுத்துப் பிரிப்பதை ஆவலுடன் எதிர்பார்த்தான் கடைக் கண்ணால்.

கந்தனும், எதையோ அதற்கு முன் எதிர்பார்த்தான். பாக்கியம் வாயிற் படியிலேயே தன் கணவனை ஆவலுடன் பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள் கந்தனுக்கு அவள் அந்தமாதிரி சிலைபோல நிற்பது கஷ்டமாக இருந்தது அவளை நகர்ந்து மேலே நடக்கவேண்டியதைக் கவனித்தாலல்லவா அவன் எதிர்பார்த்தது நடக்கும்?

ஆனால் பாக்கியமும் எதற்காகவோ காத்துக்கொண்டிருந்தாள்

கந்தனுக்குப் பொறுக்கவில்லை "அம்மா! ஐயா நின்றுக்கிட்டுருக்காரே! நாழியாகல்லே. நீராரம் கொண்டாந்து கொடேன்'' என்றான் புத்தக அலமாரியிடம் போய்க் கொண்டே ஆனால் புத்தகத்தை எடுத்துப் பிரிக்க அவனுக்கு மனமில்லை அம்மா உள்ளே சென்று அந்தச் சட்டியைத் தூக்குவதை எதிர்பார்த்தான். அவன் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டிருந்தது.

''ஆனால் பாக்கியம்!''

''ஐயா இன்னும் துண்ணூருகூட இட்டுக்கல்லே அதுக்குள்ளர நீ ஏண்டா பறக்கிறே'' என்று சொல்லித் தன்கணவன் திருநீறு பூசிக்கொள்வதைப் பார்க்கக் காத்திருந்தாள்.

சுப்பையா துண்டை உதறிப் போட்டுக்கொண்டே ''நீ படிடா... பாக்கியம் நேரமாவுது கொண்டா!' என்று துண்ணூறு பூசிக் கொள்ளக் கலயத்தில் கை விட்டான்!

பாக்கியமும் உள்ளே சென்றாள்!

கந்தனும் புத்தகத்தைத் திறந்தான்! ஏக காலத்தில் மூவரிடமிருந்தும் வியப்புக் குரல் கேட்டது

பாக்கியம் கையில் பொட்டணத்துடனும் துண்டுக காகிதத்துடனும் ஓடி வந்தாள். அதில் ''அம்மா பட்டணம் போக'' என்ற கந்தனின் கோணல் மாணலான கையெழுத்திருந்தது. ஓடிப் போய்க் கந்தனைத் தாவி அணைத்துக்கொண்டாள் அவள் கண்களில் நீர் பளபளத்தது. சட்டென்று, நேற்று முதல் சடையனைக் காணாததும், முன்பே அதைக் காட்டுப்பட்டி மிராசு பிள்ளை ராமு அதை விலைக்குக் கேட்பதாகக் கந்தன் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தன. அவளால் பேசவேமுடியவில்லை. கந்தனுக்கு மாறி மாறி முத்தமழை வர்ஷித்தாள்.

சுப்பையா கையில் காசும் பணமுமாக ஒரு காகிதத்துடன் நின்றிருந்தான். அதில் 'சுதந்திரத்திருவிழாவில் நடக்கும் பெரிய காங்கிரசுப்பொதுக் கூட்டத்துக்குப்போக'' என்று பாக்கியம்-தன்பெண் கையெழுத்தால் எழுதியிருந்தாள்.

''ஏ புள்ளே! நீ ஆவாச வர்ணப புடவை வாங்கிக்கல்லியா?

''ஆவாச வர்ணபபுடவையைவிட உன் புருசன் ஆசையைத் தீக்கரது தான் உன் கடமைன்னு நேத்தி எங்க ஆத்தா கனவில்லே வந்து சொன்னா'' என்றாள் பாக்கியம் குறும்புச் சிரிப்புடன்

மூன்று பத்து ரூபாய் நோட்டுடன் கந்தன் திகைத்துப் போய் நின்றிருந்தான். அழகாக குண்டு குண்டாக நிறுத்தி 'நாயுடு உடன் பட்டணம் போக' என்று எழுதி இருந்தது தன் தகப்பனாரின் கையெழுத்துதான் என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு அதிக நேரமாகவில்லை

மூவரும் ஒருவரைஒருவர் பார்த்துக் கொண்டனர். ஒவ்வொருவர் முகத்திலும் மகிழ்ச்சிதான் தாண்டவமாடிக்கொண்டிருந்தது

ஒரே சமயத்தில் மூவரிடமிருந்தும் இன்பச் சிரிப்பு வெடித்தது............

அதே சமயத்தில் தூரத்தில் சடையன் குரைப்பது கேட்டது. கந்தன் துள்ளி எழுந்து போய்ப்பார்த்தான். சடையன் வெகு வேகமாக ஓடி வந்துகொண்டிருந்தது. அதன் கழுத்தில் அறுந்த வார் தொங்கிற்று கந்தனைச் சுற்றிச் சுற்றி வந்தது. முகத்தையும் காலையும் நக்கிற்று மெதுவாக இன்ப ஊளை இட்டது!

கந்தன் அதை அணைத்துக்கொண்டு தடவியபடியே 'ஏன்டா ஓடி வந்துட்டே? ஐயரு இப்போ வந்துடுவாரேடா?'' என்றான் சிந்தனையுடன்.

அதற்குள் பாக்கியத்திடமிருந்து விஷயத்தை அறிந்துகொண்ட சுப்பையா ''டே பயலே பயப்படாதே, ஐயரு வந்தா அவருக்குப் பணத்தைக் கொடுத்தனுப்பிச்சுடலாம்'' என்றான்

பாக்கியம் சமயத்தை விடாமல் 'இப்போ மட்டும் ஏதாம் பணம்'' என்றாள் குறும்புடன்

''உனக்கேஆச்சரியமா இருக்குல்ல, நான் அதிகப்படியான நெல்லை எல்லாம் ஒளிக்காம சர்க்காருக்கு அளந்துட்டேன் வழக்கத்தைவிட அதிகப்படியா அளந்தவங்களுக்குப் போனஸ் கொடுக்கப்போறாங்களாம். பேப்பரிலே நேத்துதான் படிச்சேன். அது வந்தாலும் வராட்டியும் நாமப பட்டணம் கிளம்பரது நிச்சயந்தன்'' என்று துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பிய சுப்பையாவை ''எங்கே கிளம்பிட்டீங்க நீராரம் குடிக்காம' என்றாள்.

''நாயுடுவைப் போயி பாத்துட்டு அப்படியே ஒரு ஆவாச வர்ணப புடவையையும் வாங்கிக்கிட்டு வாரேன்'' என்று வெளியே இறங்கினான் சுப்பையா.!

சொப்பன வாழ்க்கை

ஆர்வி

11

சுசீலாவின் சோர்ந்தமுகத்திலே இப்பொழுதெல்லாம் ஒரு மலர்ச்சி நிலவுவதைக் கண்டு சுவாமி ஆச்சரியமடைந்தான். அவளுடைய இந்த மாறுதல் எதனால் என்பதைக் கவனித்துப் பார்க்க அவனுக்கு ஒருவாரம்போலச் சென்றது. முதலில் அவனுக்கு ஒழிவே கிடைக்கவில்லை. சுவாமியும் குமாரும் அப்படி இணை பிரியாமல் இருந்து வந்தனர். எங்கேதான் போவார்களோ, என்னதான் செய்வார்களோ. எதைத்தான் பேசுவார்களோ அது அவர்களுக்குத்தான் தெரியும்! கிருஷ்ணனுக்கும் அவன் மனைவி விமலாவுககும் இவர்களுடைய உறவாடலும், வீட்டு விவகாரங்களில் பற்றற்ற தன்மையுடன் நடந்துகொள்ளும் சுசீலாவின் பிறந்த வீட்டுச் சீராடலும கட்டோடு பிடிக்கவில்லை. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் முள் மேல் நடப்பதைப்போன்று இருந்து வந்தனர். குடும்பச் செலவு இந்த ஒரு வாரத்துக்கு இவ்வளவு அடுத்த வாரத்துக்கு இவ்வளவு என்று நினைத்துச் செலவு செய்யும்போது அவர்கள் ரத்தக கண்ணீரே வடித்தனர் இத்தனைக்கும் குமார் தன் சக்திக்கு மீறியே அவ்வப்போது பணம் கொடுத்து வந்தான் கிருஷ்ணனுடைய வருத்தம் இதனால் அதிகமாயிற்று. இவ்வளவுநாளும் இத்தனை பணம் கொடுக்கச் சகதியிருந்தும் இவன் கொடுக்காமல் செலவழித்து வந்திருக்கிறானே என்பதுதான் அவன் வருத்தம் உண்மை என்னவெனில் சுவாமி வந்த பிறகு அவனை ஒரு தம்படிகூடச் செலவழிக்கவிடவில்லை. விசுவம் கொடுத்த ஐம்பது ரூபாயில்தான் அவன் செலவு செய்து வந்தான் என்று எண்ணுவது பிசகு, அவனுக்கு அப்பா, அம்மாவின் செல்லம் அதிகம. விசுவும் கொடுககிறானே இல்லையோ என்று அவனுடைய தந்தை மாதம் கொஞ்சம் பணம் அனுப்பியிருந்தார். அந்தப் பணத்துக்குப் பங்களூரில் செலவே இல்லை. இங்கே கேடபவர் யார்?

சுசீலா ஒரு நாள் சுவாமியை அழைத்து, "நீங்கள் இருவரும் சேர்ந்துகொண்டு பணததை அநாவசியமாய்ச் செலவு செய்கிறீர்களாமே...அப்படியென்ன பெங்களூரில் இல்லாதது இங்கே இருக்கிறது?" என்று கேட்டாள்.

சுவாமிக்குப் பதில் சொல்வது கொஞ்சம் சங்கடமாயிருந்தது சுசீலாவுக்கும் ஏன் இப்படிக் கேட்டோம் என்று கேட்டபிறகு தோன்றிற்று. தனக்கு அவனிடம் உள்ள பாத்தியத்தை மீறி இப்படிக் கேட்டுவிட்டதாக ஓர் எண்ணம் தோன்றியது. ஆனால் சுவாமியோ, "இதோ பார் மன்னி இன்னும் ஒருவாரம் இருக்கலாம் என்று எண்ணுகிறேன். அதற்குள் இவர்கள் பணத்துக்குச் செலவு வைப்பானேன்?" என்றான்.

சுசீலா இதற்குமேல் அவனை ஒன்றும் கேடகவில்லை. சுவாமி அதற்குப்பிறகு அதிகமாய் விரயம் செய்யாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். சுசீலாவுக்கு அதிருப்தி தருகிற எந்தச் சிறு காரியத்தையும்செய்ய அவன் மனம் இடந்தரவில்லை. அதிகமாய் வெளியில் எங்கும் போகவில்லை. ஆயினும் குமார் தனக்காக ஆபீஸ் முடிநததும் காத்திருப்பான் என்று மத்தியானத்துக்குமேல் கிளம்பிச் செல்வான். புதுச் சிநேகத்தின் புத்தியை மயக்குகிற நிலை அவனைவிட்டு அகலவில்லை. எதிலும் அதிகமாய் விடடுக்கொடுப்பது; கொள்கைகளுக்கும் வழக்கங்களுக்கும் ஒரு வரம்பு கடடிக் கொள்வது; சிற்சில சமயங்களில் 'இந்த ஒரு தட வைமடடும் எப்பொழுதும் செய்யவா போகிறோம்? என்று சமாதானப் படுத்திக்கொண்டு நண்பனின் மனம் கோணாமல் பார்த்துக்கொள்வது முதலிய குணங்கள் அவனிடம் காணப்படடன. குமாருக்கு அவனிடம் தென்பட்ட மாறுதலைக் கண்டு சிரிப்பு வநதது. "ஏது? சுசீலா சாதாரணமாகக் கேட்டிருப்பாள். அதைக்கேட்டு இப்படி ஒரேயடியாய் வேஷம் போடுகிறாயே?" என்றான் அவன்.

"உனக்கு மூத்தவளாயிருக்கலாம். எனக்கு அவள் மன்னி. தாயாருக்குச் சமமானவள். அவள் வார்த்தைக்கு நான் மதிப்புக் கொடுக்கவேண்டாமா?" என்றான் சுவாமி.

குமாரும் தன் அண்ணனுக்குக் கீழ்படிந்தவன்தான். ஆனால் பெரும்பாலும் அண்ணன் முன்னிலையில்தான் அந்தக் கீழ்ப்படிநத சுபாவமெல்லாம். அவன் இல்லாத இடங்களில் தன்னை வந்து பார்த்துக்கொண்டா இருககிறான் என்று போய்விடுவான். சுவாமியோ தனியே இருக்கும்போதும் காடடும் மதிப்பு அவனுக்கு விசித்திரமாய் இருந்தது. குமாருக்குத் தன சகோதரியிடம் உள்ள அன்பும் மதிப்பும் சுவாமிக்குள்ளதைவிடச் சற்றும் குறைந்ததல்ல. ஆயினும் சுவாமிக்கு, அவளிடம் உள்ள மதிப்பை

விட பயம்தான் அதிகம் என்று அவன் தவருக எண்ணிக்கொண்டான. கடைசியில் அந்த எண்ணமும் தவருயிற்று. சுசீலாவுக்கு இவனிடம் பயமா அல்லது இவனுக்குச் சுசீலாவிடம் பயமா என்று புரியாதபடி இருந்தது.

சுவாமிக்கு அன்று ஒரு கடிதம் வந்து காத்திருந்தது. அவன் வெளியில் எங்கோ சென்றிருந்தான். குமார் அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரிக்க எண்ணினுன். நான்கு நாளைக்கு முன்பு சுவாமி சொல்லியிருந்தது அவன் ஞாபகத்தில் இருந்தது. அவர்கள் இருவருக்கிடையே எந்தவித அந்தரங்கமும் கிடையாதென்றும் எல்லாவற்றையும் மனம்விட்டுச் சொல்லிக்கொண்டு அவர்கள் பழகிவிட்டதாகவும் அவன் கூறினுன். இதில் உண்மையும் உறுதியும் இருப்பதாகக் குமாரும் ஏற்றுக்கொண்டான். சுசீலாவுக்கும் விசுவத்துக்கும் ஏற்பட்டமனஸ்தாபத்தைத் தவிர மற்றவை யாவையும் தான் அந்தரங்கமானவை என்று மனசில் கருதிப் பாதுகாத்துவந்த விவரங்கள் அனைத்தையும் சுவாமி அவனிடம் கூறிவிட்டான். “மன்னி விவகாரத்தை நான் சொல்வது துரோகம். அதைச் சொல்லாமல் இருந்து விடுவதால் மித்ரனுக்குத் துரோகம் இழைத்ததாக ஆகாது என்று அவன் மனசுக்குள் தீர்மானித்துக்கொண்டான். தன் சம்பந்தப் பட்டவைகளைச் சொல்வதே அவனுக்கு ஆத்ம சமர்ப்பணம் செய்துவிட்டமாதிரி இருந்தது. இருதயம் காற்றில் லேசாக ரப்பர்பலூன் பறப்பது போலப் பறந்தது நண்பர்கள் இருவரும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து, வாழ்க்கையை இரு கூறுகளாககி ஆணும் பெண்ணும் பகிர்ந்து கொள்வதுபோலப் பகிர்ந்துகொண்டு ஐக்கியமாகிவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டனர். சிறு பிராயத்திலே மனசில் தோன்றும் தகாத எண்ணங்களையெல்லாம் அவர்கள் சொல்லித் தீர்த்துக்கொண்டனர் சுவாமிக்குக் குமாரிடம் மதிப்பு மிகுந்துவிட்டது. குமார் மெட்ரிகுலேஷன் படிக்கும்போது நடந்த சம்பவத்தை அவன திருப்பித் திருப்பிச் சொல்லக்கேட்டிருக்கிருன். அது ஒரு காதல் விவகாரம். அவன் வகுப்பில் குமுதம் என்ற பெண் ஒருத்தி இருந்தாளாம். அவளை முதலில் குமார் பார்த்தது, பேசியது, பழகியது முதலிய விவரங்களை அவன் வர்ணிக்க ஆரம்பித்துவிட்டால் போதும். சுவாமிக்குப் பசியே எடுக்காது. பெரிய இலககிய கர்த்தாககள்கூட இவனுடைய வர்ணனை வரிசையைக் கேட்டு வெட்கமடைய வேண்டியதுதான். குமார் நுட்பமாக சிறு விவரங்களையும் சொல்லாமல் விடுவதில்லை. பெருமூச்சுகளுக்கு அர்த்தம சொல்வான். கண் இமைகள் துடிப்பதற்குப் பாஷ்யம் கூறுவான். இதழ்க்கடையில் தோன்றிப் பூத்திருக்கும் புனனகை ஒன்றுக்குப் பொருள் சொல்வதைவிட உயர்ந்த காவியம் வேறென்ன வேண்டும் என்று சுவாமிக்குத் தோன்றும். இருவருக்கும் நடந்த கடிதப்போக்குவரத்து—சுவாமி பார்த்தவை யாவும் அவள் எழுதியவைதான்—மிகவும் சுவாரஸ்யமாய் இருந்தது.

“ஏண்டா—அவள் என்ன எழுதயிருக்கிருள், படித்துப்பார்! உடனே கிழிததெறியச் சொல்லியிருக்கிருளே. எதற்காக இப்படிப் பத்திரப்படுத்தி வாசனை யூட்டி வைத்திருக்கிருய்?” என்று கேட்டான் சுவாமி. என்னவோ அப்படிக்கேட்டானேயொழிய, கிழித்தெறிந்திருந்தால் குமாருடைய நட்பு வறட்சி மிகுந்ததாய் இருந்திருக்கும என்பதை அவன் உணர்வான். பல துர்க்குணங்களுக்கிடையில் இந்தச் சிறப்பான காதல் விவகாரமே அவனைக கவர்ச்சிகரமாககியது.

குமார் சிரித்துக்கொண்டே, ஏண்டா—நீயானுல் அதைத்தான் செய்திருப்பாய் போலிருக்கிறது. அபபடி கிழிக்காமல் பத்திரமாய் வைத்திருந்தாலும் என்னிடமெல்லாம காண்பிப்பாயா, என்ன?” என்ருன்.

“நிச்சயம—கட்டாயம்! எனக்கு இப்படி எங்கேயிருந்து வரப்போகிறது? வரவே வராது. நிச்சயம் வராது. வந்தால் நீயே பிரிதது முதல்ல் பார்ககும் படி கொடுத்துவிடுவேன்” என்ருன் சுவாமி.

அந்தச் சம்பாஷணைதான் இன்று குமாரின் ஞாப

கத்தில் இருந்தது. சுசீலா இதைககண்டு என்றுமில்லாப் பதட்டத்துடன், "நீ ஏன் வேறு ஒருவருக்கு வந்த கடிதத்தைப் பிரிக்கிருய்?" என்று கேட்டாள்.

குமார் புன்னகையுடன், "அவன் ஒன்றும் வித்தியாசமாக எண்ணிக்கொள்ளமாட்டான். எனக்குத் தெரியும்" என்ருன்.

சுசீலாவின் கோபம் எல்லே கடந்துபோயிற்று. முகமெல்லாம் செக்கச செவேலென்று சிவந்துவிட்டது. "இதென்ன வழக்கம்? இதெல்லாம் கூடாது. அதுவும் என் கண்முன் நடக்க இதற்கு இடம்கொடுக்கமாட்டேன். கொண்டு வா, அதை இங்கே!' என்று வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு அவள் மேலே தன் அறைக்குச் சென்ருள்.

குமார் இதைப் பொருட்படுத்தாமல் போய்விட்டான். தன்னுல் விஷயம் தெரியாமலா போகப்போகிறது! சுவாமி அன்று வெகு நேரம் கழித்துத்தான் வீட்டுக்கு வந்தான். குமார் அவனிடம் "உனக்குத்தான் அவளிடம் பயம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். உன் மன்னி உன்னேக் கண்டு பயந்து நடுங்குகிருளே! உன் கடிதத்தை நான் தெரியாமல் பிரிக்கப்போய்விட்டேன், பார்க்கவேண்டுமே உன் மன்னியின் கோபத்தை!' என்ருன்.

சுவாமி வரட்டும் என்று குமார் இதுவரையில் சாப்பிடாமல் காத்திருந்தான். எனவே சாப்பிட்டு விட்டு மேலே போய்க் கடிதத்தை வாங்கிக்கொள்ள நினைத்து இலேயில் உட்கார்ந்தான். சிரிப்பும் விளையாட்டுமாய்ச் சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. குமார், பரிமாறுவதைக் கவனியாமல் சுவாமியிடம் பேசிக்கொண்டேயிருந்தான். விமலாவின் முகத்தில் எரிச்சல் தோன்றியதை யாரும் கவனிககவில்லே. கடைசியில் தீராப்பொறியாக, "சாப்பிட்டு விட்டுப் போய் பேசுங்களேன். இலேயைக் கூடக் கவனிக்காமல் சளசளவென்று ஒரு

பேச்சா?'' என்றாள்.

குமாருக்கு இது சகஜமாய் இருந்திருக்கலாம். சுவாமிக்கு



இந்த வார்த்தைகள் சுருக்கென்று பட்டன. சாப்பிட்டு முடிந்ததும் மிகுந்த வருத்தத்துடன் அவன் தன் அறைக்குள் நுழைந்து குப்புறப் படுத்துக்கொண்டான். கடிதம் வந்த நினைப்பே முகத்தில் மறந்துவிட்டது. எண்ணங்கள் சுற்றிச் சுழன்றன. கடிதத்தின் நினைப்பு வந்தபோது மணி மூன்றுக்கு மேல் இருக்கும். அன்று விடுமுறை நாள். கிருஷ்ணசாமியும் குமாரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். குழந்தை ஹேமா எதையோ கொட்டிவாரிக் கொண்டிருந்தாள். விமலா காலண்டரைப் பக்கத்தில் எடுத்து வைத்துக்கொண்டு ஏதோ கணக்குப்போட்டுக் கொண்டிருந்தாள்.

மெல்ல அடி எடுத்து வைத்து அவன் மாடிப் படிகளேறும்போது 'மேலே' கிளுகிளு என்று பெண்ணொருத்தி சிரிக்கும் சத்தம் கேட்டது. நிச்சயம அந்தச் சிரிப்பு மன்னியுடையதல்ல என்பது அவனுக்குத் தெரியும். மன்னி அவ்விதம் ஒருநாளும் சிரித்து அவன் கேட்டதில்லை. இந்தப் பெண்ணின் குரலில் ஒரு மோகனமான குளுமையும் இனிமையும் கலந்திருந்தன. அவன் கால்கள் இந்தச் சமயத்தில் மேலே செல்வது உசிதமா என்று தயங்கின. சிரிப்புச் சத்தம் அடங்கியதும் மன்னி பேசும் வார்த்தைகள் காதில் ஒலித்தன.

"பெயரில்கூட ஒரு பொருத்தம் இருக்கிறது சீதா—சுவாமியின் முழுப்பெயர் என்ன தெரியுமோ? ராமஸ்வாமி! சும்மா வீட்டிலே பெயரைச் சுருக்கி நாங்கள் கூப்பிடுகிறோம். ராமஸ்வாமி-சீதாலக்ஷ்மி! அடேயப்பா, பெயரில் எவ்வளவு பொருத்தம் இருக்கிறது! நீ அவர்கள் இருக்கும்போது வர வெட்கப்படுகிறாய்! ஒரு தரம் பேசிப் பார்த்தால் தெரியும். அப்புறம் நீங்கள் பேசும்போது நாங்கள்தான் வர வெட்கப்பட வேண்டியிருக்கும். தெரிந்ததா?''.. மறுபடியும் அந்தப்பெண்ணின் குரல் கிளுகிளுத்தது. "இப்பொழுதுகூட ஒன்றும் மோசம் போய்விடவில்லை. ஒரு குரல் கொடுத்தால் போதும்! வர எத்தனை நாழியாகும்? கூப்பிடட்டுமா—சொல்லேன்'' என்றாள் சுசீலா.

"சீ—அடீயம்மா! அப்படியானால் நான் இதோ ஓடியே போய்விடுவேன்'' என்றாள் அந்தப் பெண்.

"பார்க்கலாமே! சுவாமி, சுவாமீ!'' என்று இரைந்து இரண்டு தடவை கூப்பிட்டாள் சுசீலா விளையாட்டாக. அந்தக் குரல் உண்மையில் கீழே தான் படுத்திருந்தால் தன் செவிகளில் விழாது என்பது சுவாமிக்குத் தெரியும்.

அடுத்தகணம சொன்ன சொல்லை மீறாமல் அந்தப பெண் மாடிப்படி இறங்கும் இடம் வரையிலும் ஓடி வந்துவிட்டாள். திடீரென்று அவள் ஓட்டம் தடைபபட்டு நின்றது.

"ஏன் தயங்கி நிற்கிறாய்! ஓடேன் பார்க்கலாம்! என்றாள் சுசீலா சிரித்துக்கொண்டே.

மாடிப்படியில் வழி மறைத்து நிற்கும் சுவாமியும், அவனைப் பார்க்குமுன் ஓடிவிட வந்த சீதாவும் ஒருகணம் ஒருவரையொருவர் பார்த்துக் குன்றிப் போய் நின்றனர்.

சற்றுப் பொறுத்து, "கூப்பிட்டாயா மன்னி?" என்று கேட்டுக்கொண்டே மேலே ஏறி வந்தான் சுவாமி.

சுசீலா அதற்குப் பதில் சொல்லாமல், "பார்த்துக் கொண்டாயா?" என்றாள் அந்தப் பெண்ணைப் பார்த்து. அந்தப் பாலிகை சுசீலாவைப் பொசுக்கி விடுவதுபோலப் பார்த்துக்கொண்டு நின்றாள். அன்றொரு நாள் எதிர்வீட்டு வாசலில் நின்று ஹேமாவை அழைத்துப் பேசிய பெண் அவள்தான். சுசீலாவின் முகத்தில் இப்பொழுதெல்லாம் ஒரு மலர்ச்சி தென்படுவதற்குக் காரணமாய் இருப்பவளும் இவள்தான் போலும் என்று சுவாமி எண்ணிக் கொண்டான்.

சுவாமி நாணம் மிகுந்த தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, 'எனக்கு ஏதோ தபால் வந்ததாமே?" என்றான்.

சுசீலா தபாலை எடுத்துக் கொடுக்கும்போது, "கடிதம் யார் வேண்டுமானாலும் எழுதியிருக்கட்டும். ஒருவர் தபாலை மற்றொருவர் பிரித்துப் பார்ப்பது கூடாது. நெருப்புச் சுட்டால் நண்பர்கள் மருந்து வைத்துக் கட்டலாம். ஆனால் எரிச்சலை அனுபவிக்கமுடியுமா? எனக்கு நீங்கள் இரண்டு பேரும் சமம்தான்—" என்றான்.

மேல் விலாசத்தில் தன் அண்ணாவின் கையெழுத்தைக் கண்டதும் சுசீலாவின் பேச்சுக்குக் காரணம் சுவாமிக்குத் தெரிந்தது.

"அண்ணா எழுதியிருக்கிறான்!" என்றான் சுவாமி.

சுசீலா அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் "மனைவியாக இருந்தாலும் சரிதான். புருஷனின் கடிதத்தைப் பிரிக்கக்கூடாது. உனக்குச் சொல்லி வைக்கிறேன். காதில் விழுந்ததா, சீதா?" என்றாள்.

பிறகு சுவாமியைப் பார்த்து "இவள் எதிர் வீட்டுப் பெண்—பெயர் சீதா! நல்ல பெயர்தானே?" என்று கேட்டாள்.

சுவாமி பேசாமல் கீழே இறங்கிச் சென்றான்.

12

இரண்டு நாட்கள் சென்றன. சீதா இந்த வீட்டுப் பக்கம் தலைகாட்டவே இல்லை. சுசீலாவுக்குப் பொழுது போவது மிகவும் கஷ்டமாய் இருந்தது. ஹேமாவைக் கூப்பிட்டுத் தூது அனுப்பியும் சீதாவிடமிருந்து அநுகூலமான பதில் எதுவும் வரவில்லை. தனியே உட்கார்ந்திருப்பது மிகுந்த சோதனையாய் இருந்தது. குருட்டு எண்ணங்களும், அசட்டுக் கவலைகளும் மனத்தை அரிக்க ஆரம்பித்துவிடுகின்றன. ஆயினும் சுசீலா சிறிது மனத் தெம்புடனேயே இருந்து வந்ததற்கு முதல் காரணம் சீதா. இரண்டாவது, சுவாமி தன்னைப் பற்றி எதையும் வெளியிடவில்லை என்பது.

கணவனிடமிருந்து சுவாமிக்குக் கிடைத்த கடிதத்தை அவள் சிறிதும் எதனாலோ பொருட்படுத்தவில்லை. இவ்வளவு உதாசீனமாய் இருக்கத் தன்னால் எவ்விதம் முடிந்தது என்று அவளுக்கே அதிசயமாய் இருந்தது. முதலில், வந்த புதிதில் இருந்த ஒரு பயப் பிராந்தியும் அச்சமும் தேய்ந்து ஒரு தெம்பும்—திடமும் மனசில் ஊறி வருவதை அவள் உணரலானாள். அன்பு காட்டாத கணவனின் பிரிவும் பிகுவும் அவள் மனசில் ஆழப் பதிந்து வந்தன. 'என்னை மன்னிக்கவும்' என்று ஒரு வரி அவனிடமிருந்து கிடைத்தால் போதும். அவள் சர்வ சம்மதத்துடன் அவன் செய்கையை மறந்து மன்னித்துவிடத் தயாராய் இருந்தாள். ஆனால் விசுவத்தின் கடிதம் சுவாமிக்குத்தான் கிடைத்திருந்தது. இதனாலேயே அந்த உதாசீனம் வலுவடைந்துவிட்டது. யாரிடம் பேசினாலும் சர்வ ஜாக்கிரதையுடன் பேசலானாள். மனசில் நிலவியிருக்கும் ஏக்கத்தின் சின்னம் சிறிதளவும் புலப்படக்கூடாது என்பதில் அக்கரை காட்டினாள். குமார், சுவாமி, அண்ணா மன்னி முதலிய யாவரும் தனக்கு அந்நியமானவர்கள் என்றும் அந்த அந்நியமான இடத்தில் இருக்கும்படி தன்னைத் தன் கணவன் விரட்டியடித்திருக்கிறான் என்றும் அவள் கற்பனை செய்துகொண்டாள். கடிதத்தைச் சாக்கிட்டுப் பேசுகையில் இத்தகைய எண்ணமே அவளைச் சீற்றம் கொள்ளச் செய்தது. ஆனால் அடுத்த நாளே அவள் யாவற்றையும் மறந்து விட்டாள். வீணையின் ஜங்காரத்திலிருந்து ஒலிக்கும் நாத மயமான சப்தத்தில் எங்கோ ஓர் அபஸ்வரம் பேசுவது போல மனசிலே ஒரு குறை உறுத்திக்கொண்டேயிருந்தது. கணவன் தன்னைப்பற்றி அந்தக் கடிதத்தில் ஒரு வரிகூட எழுதியிருக்கமாட்டான் என்பதே அந்த உறுத்தல். இதற்கெல்லாம் மனசைத் தளர விடக் கூடாது என்ற உறுதியுடன் அவள் சமாளித்துக்கொள்வாள். ஸ்நானம் செய்யப்போனாலும், சாப்பிட உட்கார்ந்தாலும் மாடியின் முகப்பில் வந்து நின்றாலும், கட்டிலில் சாய்ந்து படுத்தாலும் அந்த அபஸ்வரம் ஒலிப்பதை அவள் செவிகள் உணர்ந்தே வந்தன. 'சீ! இதென்ன வெட்கக்கேடு! யாருக்கு என்னைப்பற்றிய அக்கரை இல்லையோ—யார் நான் விலகியதை ஒரு பாக்கியமாய்க் கருதி வேறொருத்தியிடம் காதல் பயிலத் தவறவில்லையோ—அவரிடம் இந்த மனசுக்கு என்ன இவ்வளவு மோகம்!' என்று தன் வாய் அரற்றிக்கொண்டேயிருப்பதையும் அவள் உணர்ந்தே வந்தாள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்தச் சீதாவும் வராமல் சதி செய்கிறாளே என்று அவளுக்கு ஆத்திரம் பொங்கியது. வீட்டிலிருப்பவர்கள் வேம்பாகக் கசக்கும் போது சீதாவே சஞ்சீவி மருந்தாக இருந்தாள். எனவே மூன்றாவது நாள் காலையில் எல்லோரும் ஆபீசுக்குப் போன பின்பு, "நீ உடனேயே வரப் போகிறாயா—நான் கண் காணாமல் போய் விடட்டுமா?" என்று சீதாவுக்கு எழுதியனுப்பினாள்.

"ஓர் உறுதிமொழி கொடுக்க முடியுமா?" என்று கேட்டுப் பதில் வந்தது

"எந்த வித உறுதிமொழியும் கொடுக்க முடியாது. வரப்போகிறாயா, இல்லையா?" என்று திருப்பி எழுதி அனுப்பினாள்.

பதிலை அவள் எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கும் போது கடிதத்தைஎடுத்துக்கொண்டு சீதாவே அவள் எதிரில் தோன்றினாள். "நான் பதில் எழுதி அனுப்பியிருப்பேன். சுள்ளென்று எரிக்கிற இந்த வெயிலில்

குழந்தையை அலைய வைப்பானேன் என்று வந்தேன்?'' என்றாள் அவள்.

"என்ன பதில் எழுதியிருப்பாய், சொல்லேன்!'' என்றாள் சுசீலா அந்தப் பிகுவை விடாமல். தன் கடிதத்தில் உள்ள தொனியைத் தட்டிச் செல்ல சீதாவால் முடியவில்லை என்பது அவளுக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாய் இருந்தது. சகல சௌபாக்கியங்களும் சித்தித்துவிட்டது போன்ற திருப்தி ஏற்பட்டது. கணவனுடைய ஆயிரமாயிரம் உதாசீனங்களை இந்த ஒரு செய்கையால் அவள் மறந்துபோனாள்.

"உறுதிமொழி கிடைக்காவிட்டால் வரமுடியாது மன்னிக்கவும்'' என்று எழுதியிருப்பேன் என்றாள் சீதா.

"எப்படியும் உன் வீட்டுக்கு வந்த குழந்தை இங்கே வந்துதானே ஆகவேண்டும்? எழுதியனுப்பிவிடுவதற்கென்ன? ஏன் வந்தாய்?'' என்றாள் சுசீலா.

"அப்புறம் நீ கண்காணாமல் போய்விட்டால் என்ன செய்வதாம்?'' என்று அவள் பயந்தவள் போலக் கேட்டுவிட்டுச் சிரித்தாள். சுசீலாவுக்கும் சிரிப்புத்தான் வந்தது.

சிரிப்பு அடங்கியதும் அவளைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு—'உன் உறுதிமொழியெல்லாம் எனக்குத் தெரியும். இப்படிப் பேசுபவர்களின் மனசிலே என்ன இருக்கும் என்பது எனக்குத் தெரியாதா?'' என்றாள் சுசீலா.

சீதாவின் அழகிய கன்னங்களில் ஒரு குமிழி தோன்றி மறைந்தது. கண்களிலே கண்ணீர் சுரந்துவிடும்போலிருந்தது க்ஷணத்துக்குள். "சே. நான் விளையாட்டுக்கு அப்படிச் சொன்னேன்! அவனை உனக்குப் பிடிக்காவிட்டால் குமார் இருக்கிறானே'' என்றாள் சுசீலா மீண்டும் விளையாட்டாக.

"நான் கேட்ட உறுதிமொழி தெரியாமல் ஏன் இப்படியெல்லாம் உளறுகிறாய், சுசீ அக்கா?'' என்றாள் சீதா. உண்மையிலேயே அவள் வினையாகக் கோபித்துக் கொண்டுவிட்டாள். சுசீலாவுக்கு வெறியே பிடித்துவிட்டது. அவளை அழ அழச் செய்வதில் அவளுடைய வெறி கட்டுக் கடங்காமல் சென்றது.

"நான் உனக்கு அக்காவாகவேண்டும் என்கிறாயா, மன்னியாகவேண்டும் என்கிறாயா?'' என்றாள் அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு.

"நீ மாமியாராகவேண்டும் என்கிறேன். போயேன் பார்க்கலாம்!'' என்று சீறினாள் சீதா.

சுசீலா இதைக் கேட்டு இடியிடி என்று சிரித்தாள். "என் பிள்ளைக்கு ஒரு கிழவியா வரவேண்டும்.. கடவுளே!'' என்று கூறிவிட்டு அவளை ஆசையுறத் தழுவிக்கொண்டாள். சீதாவுக்கு இதற்குள் அழுகையே வந்துவிட்டது. "குழந்தைக்கு ரோஷம் பொறுக்காவிட்டால் நான் என்ன செய்வது? நீ என்ன உறுதிமொழி கேட்கிறாயோ அதைக் கொடுக்கிறேன். கேள்!'' என்றாள்.

சீதா கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டே, "அப்புறம் என்னை ஒன்றும் சொல்லக்கூடாது!'' என்று வேண்டிக்கொண்டாள்.

"சொல்லேன்—நீ. உன் பேச்சும், நீயும்!''

"நீ இனிமேல் இந்த வீட்டில் ஒரு க்ஷணம்கூட இருக்காதே. வேண்டுமானால் நானும் உன்கூட வருகிறேன். உங்க அப்பா ஊருக்குப்போய்விடுவோம்!'' என்றாள் சீதா. சுசீலாவுக்கு இந்த வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன. விளையாட்டுப் பேச்செல்லாம் ஒரு நொடியில் போன இடம் தெரியாமல் போயின.

"என்னடீ உளறுகிறாய்? என்ன விஷயம்?''

"உன் அழகான மன்னி இருக்கிறாளே அவள் ஒரு அல்பம்! எனக்கு இன்றைக்கா தெரியும்? சாமான் வாங்கினால் கொடுப்பதிலேயே தெரியும். அட, இதெல்லாம் சகஜம்தான். தட்டினால் முட்டினால் யார்தான் இங்கே வாங்குவதில்லை; கொடுப்பதில்லை. உனக்கு இதெல்லாம் தெரியாது. ஏன் தெரியவேண்டும்? ஆனால் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். நீ நாளைக்கே புறப்பட ஏற்பாடுசெய். நிச்சயம் நானும் வருகிறேன்!'' என்றாள் அவள் மூச்சு விடாமல்.

சுசீலா தன்னைச் சமாளித்துக்கொண்டு, "என்ன நடந்தது? அதைத்தான் சொல்லேன்'' என்றாள்.

"உனக்கு நடப்பதொன்றும் தெரியாது. நீ உன் வீட்டுக்காரரிடம் கோபித்துக்கொண்டு வந்துவிட்டாயாமே! மைத்துனன் உன்னை அழைத்துப்போக வந்தும் நீ போகமாட்டேன் என்கிறாயாமே! இதெல்லாம் உண்மையா? நான் என்னமோ இதை நம்பவே மாட்டேன்'' என்றாள் சீதா.

"இப்படி யார் சொல்கிறார்கள் என்கிறாய்?''

"யார் சொல்கிறார்களா? இந்தத் தெருவே சொல்கிறது. உன் அழகான மன்னி இப்படி ஒவ்வொரு வீடாகப் போய்ச் சொல்லிவிட்டுவருகிறாள். தெரிந்துதான் இப்படிச் சொல்கிறாளோ, தெரியாமல் சொல்கிறாளோ, பகவானுக்குத்தான் தெரியும். சொல்லேன் இதெல்லாம் உண்மையா, என்ன?'' என்று கேட்டாள் சீதா. உண்மையில் அவள் இருதயம் இந்த வதந்திகளால் நொந்துபோயிருந்தது நன்கு புலப்பட்டது.

"சீ. பைத்தியம், அவள் தெரிந்து இப்படிச் சொல்வாளா? என்னமோ தெரியாத்தனம்! நீ ஏன் இதற்கு வருத்தப்படுகிறாய்? போயும் போயும் நான் இங்கே வந்ததே பிசகு. அதுவும் வீடு தேடிப்போய் வந்தேனே?'' என்றாள் சுசீலா. மனசிலே பாய்ந்த வேல் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது. பாய்ந்த வேகத்தில் பதித்த காயத்தினின்றும் ரத்தம் பிரவாக

மாய்ப் பெருகலாயிற்று. அவள் திக் பிரமை யடைந்து. சீதாவின் முகத்தையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். சீதாவுக்கு இந்தக் காட்சி பொறுக்கவில்லே.

"இரண்டு நாள் முந்தி கடிதம் வந்ததாமே? அது வந்த மறுநாளே விமலா எங்கள் வீட்டுக்கு வந்தாள். முதல் நாள் வாங்கின அரை வீசை சர்க்கரையும் ஒரே நாளில் தீர்ந்துபோய்விட்டதாம். அதற்காகக் கையில் ஒரு சிறிய கரண்டியை எடுத்துக்கொண்டு வந்தாள் சர்க்கரை வாங்கிக்கொண்டு போக...உம் என்று சொல்லமாட்டேன் என்கிறயே. நான் எதற்காக மேலும் சொல்லவேண்டும்?"

"சரி; சொல்லேனடி நீ! நான் 'உம்' என்கிறேன்."

"அன்றைக்கு என்ன சொன்னுள் தெரியுமோ?"

"உம்—"

"அவளுக்கே எல்லாம் சந்தேகமாக இருக்கிறதாம். அந்தப் பிள்ளே ஊருககுப் போகிறேன் என்று அண்ணவிடம் சொல்லிவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் இங்கே வந்துவிட்டானும் !...என்ன?"

"உம்..."

"போருதா ? வேறென்ன சொல்லவேண்டும் என்கிருய் !"

"உம்..."

"இதுதான் தெரியாத்தனமோ ?

சுசீலா கல்லாய்ச் சமைந்துபோனுள். ஊரிலிருந்து வந்ததும் எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராய் இருந்தவளுக்கு இந்த வார்த்தைகள் முதல் இடியாக இருந்தன. அந்த அதிர்ச்சியில் அவள் எப்படி மூர்ச்சித்துப் போகாமல் இருந்தாள் ?

சீதா கொஞ்சம் அநுபவப்பட்டவளாய் இருந்தால் சுசிலாவுக்கு அதிர்ச்சியேற்படாமல் விஷயத்தைச் சொல்லியிருப்பாள். பச்சிளம் கன்றுக்குட்டியைப் போல அவிழ்த்துவிட்டதும் கைப்பிடிக்குள் அடங்காமல் போய்விட்டாள்.

"அம்மாவுக்குக் கடன் கொடுக்கவேண்டியிருந்த வேதனையில் இவள் பேசியது ஒன்றும் தெளிவாகப் புரியவில்லே, நல்ல வேளேயாக! ஆனல், நெடுகிலும் இவள் இதைத்தானே சொல்லிக்கொண்டிருப்பாள் !......"

சுசீலா பதிலே பேசவில்லே. தான் எதற்காக இங்கே வந்தோம் என்றும் சுவாமி எதற்காக இங்கே வந்தான் என்றும் அவள் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தாள். விடை கிடைக்காத இந்தக் கேள்விகளுக்குக் கடைசியில் ஒரு பதில் கண்டு பிடித்துவிட்டவளேப்போல, "சீதா...நாம் நாளேக்கே கிளம்பிவிடலாம். ஆனல். நீ எப்படி என்னேடு வருவாய்?" என்று கேட்டாள்.

"நான் எப்படியாவது வருகிறேன்-பார்த்துக் கொண்டிரேன்!"

"சரி; நல்லதாயிற்று—ஆனல் இதையெல்லாம் நீ உண்மையென்று நம்புகிருயா, சீதா?"

"சீச்சீ...உன் தலேயில் அடிக்கிறேன். எல்லாம் பொய்! எனக்கு நிச்சயம் தெரியும். இதெல்லாம் சுத்தப் பொய்! நான் நம்பவே மாட்டேன்" என்ருள் சீதா.

(தொடரும்)



"............என்ன சோஸ்யரே! கைலேதான் ரேகை ஒண்ணும் சுகமில்லேன்னிட்டுங்க. கால்லேயாவது எதனுச்சும் உருப்படியா இருக்குதான்னு கொஞ்சம் பாத்து சொல்லிடுங்க.........!"



மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கு 11-வது இடத்தில் இரண்டு அனுகூலமான கிரகங்கள் இருப்பதைத்தவிர மற்றவையெல்லாம் சாதகமான நிலையில் அமையவில்லை. அதிகமான கவலைகளும், சங்கடங்களும் ஏற்படுமெனத் தோன்றுகிறது இன்னும் கொஞ்சகாலம் வரையில் இந்த ராசிக்காரர்களுடைய விவகாரங்கள் எல்லாம் பூர்ணமாக ஒரு முடிவுக்கு வராது. சென்ற மாதத்தைவிடச் செலவென்னவோ அதிகம்தான் செய்யும் முயற்சிகள் சுலபமாக வெற்றிபெருது இரண்டாம் வாரத்தைவிட முதல் வாரம்தான் அதிகக் கவலைகள் படும்படியிருக்கும். எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் தீவிரமான மாறுதல்களிருக்கும். பணமுடை ஏற்படும். உத்தியோகத்தில் செய்யும் வேலையில் மாறுதலோ, அல்லதுவேறிடத்துக்கு மாற்றலோ ஏற்படலாம். எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் மேலதிகாரிகளைத் திருப்திசெய்ய முடியாது சிலருக்கு வேறு மேலதிகாரிகளிடம் சேவைசெய்ய நேரலாம். இந்த மாறுதலும் சந்தோஷகரமானதன்று குழந்தைகளாலும் அவர்களது விவகாரங்களினுலும் அனவசியமான கவலைகள் உண்டாகும் குடும்பத்தில் எதிர்பார்த்திருக்கும் சந்தோஷத்தைக்கூட அனுபவிக்க முடியாது எதிரிகள் யாரேனும் ஒருவரோ அல்லது உறவினரோ இவர்களைதூற்றுவார்கள் : குணத்தைப்பற்றிக் குறைசொல்லுவார்கள். சகோதரர் அல்லது மாமாவைப் போன்றிருக்கும் கிட்டியபந்துக்களில் ஒருவர் இம்மாத இரண்டாம் பகுதியில் கஷ்டப்படும்படியிருக்கும். வியாபாரிகள் ஹேஷ்யங்களில் இறங்குமுன்பாக உஷாராயிருக்கவேண்டும். புதிய வியாபார நடவடிக்கைகளில் இம்மாதம் லாபம் கிட்ட வழியில்லை கூட்டுவியாபாரத்தில் தப்பு அபிப்ராயம் ஏற்படும் எனவே இதிலும் லாபமிராது மாணவர்கள் பரீட்சைகளில் நன்கு எழுத முடியாமல் போகும். குதிரைப் பந்தயக்காரர்கள் ஹேஷ்யங்களில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அதாவது அதிகமாகப் பணத்தைக் கட்டாமல் இருக்கவேண்டும்.

மார்ச் 20. 23, 24 29, ஏப்ரல் 4, 8, 11 தேதிகள் இவர்களுக்கு நல்லது.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

விருஷபராசிக்காரர்கள் இம்மாதத்தில் குறைப்படும்படியிராது. 10, 11 இடங்களிலுள்ள கிரகங்கள் சக்தி வாய்ந்தவை. ஆகவே அவை, வாழ்க்கையின் போக்கைச் சுலபமாகவும், மனோகரமாகவும் செய்யும். உறவினர்களும், பக்கத்திலிருப்பவர்களும் அபிமானத்தோடு நடந்துகொள்வார்கள். வழக்கம்போல இந்த ராசிக்காரர்களுக்குள்ள கவர்ச்சி பூரணத்துவத்தையடைந்து எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் எண்ணிய காரியங்கள் கைகூடும் இம்மாதத்திலுள்ள கிரகங்களின் அமைப்பு புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குத்தான் அதிகமான பயனைக் கொடுக்கும் குடும்பவிவகாரங்களுக்கும் சந்தோஷ சமயமே. நிலம், வீடு அல்லது கார் இவற்றிலொன்றில் அவசியத்துக்கேற்றவாறு பணத்தை முதலீடு செய்ய நேரலாம். குடும்ப விஷயத்தில் ஈடுபாடு அதிகமாகி, வீட்டு வசதிக்காக அதிகமாகச் செலவுகளைச் செய்யவும் கூடும் இரண்டாம் பகுதியில் பண விஷயத்தில் ஏதாவது அபிவிருத்தி ஏற்படும். பொதுவாக ஆரோக்கியம் சுமாராகத்தானிருக்கும் சிலருக்குக் கில்வாயுவினாலோ, நீர் கோளாறினாலோ சென்ற மாதத்தைவிட இம்மாதம் அதிகம் வருந்த நேரும். வியாபகமாகவுள்ளவர்களுக்கு இம்மாதம் அதிகமாக சிநேகிதர்களைத் தேடிக்கொள்வதற்கும், சமூகத்தில் அதிகமாகப் பழகுவதற்கும் சாதகமான சந்தர்ப்பங்கள் ஏற்படும். சுபகாரியங்களை முன்னிட்டுத் திடீரென்று செலவுகளேற்படக்கூடுமெனினும் இதற்காகச் சிறிதும் கவலைப்படவேண்டியிராது உத்தியோகத்தில் மறைமுகமாக ஏதாவது லாபமிருக்கும் ஆனல் வேலைப்பளு முன்னையும்விட அதிகம் ஊழியர்கள் சற்று தியாக உணர்ச்சியோடுதான் வேலை செய்ய வேண்டியிருக்கும் ஏனெனில் முதலாளிகள் இம்மாதம் நியாயமற்ற ரீதியிலும் கண்டிப்பாக வேலை வாங்கும் போக்கிலும் இருப்பார்கள். மாணவர்கள் பரீட்சையில் நன்கு எழுதுவார்கள் குதிரைப் பந்தயம் சாதாரணமான பயனைத் தரும். சிலர் இம்மாதத்தில் பக்தி பூர்வமான காரியங்களைச் செய்வது சாத்தியமாகும். வியாபாரிகளுக்கும் நியாயமான வியாபாரம் நடக்கும் அயல்நாட்டு வியாபாரம் முன்பிருந்ததைவிட அதிக லாபகரமாயிருக்கும். இரண்டாம் பகுதியைவிட முதல் பகுதியில் நடத்தும்

கடிதப் போக்குவரத்து பயன்தருவதாயிருக்கும். சில தினங்கள் வரையில் குழந்தையொன்றின் தேக நிலைமையைப்பற்றி மட்டும் கவலைப்படும்படி நேரும்.

மார்ச் 17, 23, 26. 29, 31, எப்ரல் 1, 3, 6. 8, 9 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரம்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

இம்மாதத்தில் இந்த ராசிக்காரர்களுடைய கிரகங்கள் இன்னும் மோசமான நிலைமைக்கே வந்திருக்கின்றன. 8 வது இடத்திலுள்ள நீச குரு, குடும்பம் உத்தியோகம் இரண்டிலும் நல்ல பலன்களுக்கு ஏற்றதல்ல மனைவியின் தேக நிலைமைபற்றி இன்னும் அதிகமாகக் கவலைகள் ஏற்படும். இல்லையானால் சொந்த ஆரோக்கியம் திருப்திகரமாயிராது. உத்தியோகத்தில் மாறுதலோ, மாற்றமோ ஏற்படும் ஊழியம் புரியும் இலாகாவில் ஆதரவை நாடினால் பயன் கிட்டாது காரியாலயத்தில் மனஸ்தாபங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்கும். இது இரண்டாம் பகுதியில் முக்கியாம்சமாக விளங்கும். குழந்தையின் சுகவீனத்தால் மன நிம்மதியிராது பணக்கஷ்டத்தைப்பற்றி வேதனை கொடுக்கும் உறவினரிடத்தில் சந்தோஷமாக இருக்கமுடியாது போகும். இருப்பினும் சகோதரருக்கு அவசியமான தேவைக்காக உதவிபுரியும்படி நேரும். கடிதப்போக்குவரத்தின் மூலம் சச்சரவுகளேற்படாமல் கவனித்துக் கொள்ளவேண்டும் ஒரு தூர தேசப்பயணம் ஏற்பட இடமுண்டு நல்ல அனுகூலமான புக்திகள் நடப்பிலுள்ளவர்கள் யாத்திரையை மேற்கொள்ளலாம்.

10 வது இடத்துக்குடையவனும். லக்னாதிபதியும் நீசத்துவத்திலிருப்பதால் முக்கியமாக இம்மாத இரண்டாம் பகுதியில் மன நிம்மதியை முன்னிட்டு நிர்ப்பந்தமாக ரஜாப் பெற்றுப்போகும்படி ஏற்படும். எதிர்பாராத சம்பவம் ஏதேனும் நிகழ்வதற்கும் இடமிருக்கிறது சமுத்திரம், ஆறு இவற்றில் ஸ்நானம் செய்வதை கட்டாயமாக விலக்கவேண்டும். புதிய முயற்சிகள் எதுவும் வெற்றிகரமாக நிறைவேறாது கீழ் குலத்தவரின் சகவாஸமும் கூடாது அவர்கள் எவ்வளவுதான் சிநேகமாக விருப்பினும். சொந்தப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட வரையில் அத்தகைய தொடர்பு ஏற்றதில்லை. வியாபாரிகளும் முரட்டுத்தனமாக ஹேஷ்யங்களில் ஈடுபடக்கூடாது. மொத்தத்தில் வியாபாரம் அவ்வளவு பிரகாசகரமாயிராது ஒருகால் இம்மாத முதல் வாரம் ஹேஷ்யத்துக்குச் சற்று அனுகூலமாயிருக்குமென்று தோன்றுகிறது கூட்டு வியாபாரத்தில் நிபந்தனை, ஒபபந்தம் முதலியவை மாறுபடலாம். இதற்குக் காரணம் தினசரி கிரகப்போக்கில் காணப்படும் வித்தியாச நிலைதான் சிலருக்கு கூட்டு வியாபாரம் முறிந்துவிடவும் கூடும்.

மார்ச் 17. 19, 23. 26, 30, ஏப்ரல் 1, 4, 8. 12 தேதிகள் இவர்களுக்கு வசதியானவை.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

இம்மாதம் கடக ராசிக்காரர்களுக்கு கொஞ்சம் தரமானதென்றே கூறவேண்டும். சென்ற சில மாதங்களாகக் காணப்பட்டு வந்த தடையும் சுணக்கமும் கலந்து வந்த காலப்போக்கு மாறுதலடைவதை வியக்தமாகத் தெரிந்துகொள்ளலாம் பண விஷயத்தில் வசதி ஏற்படுவதும் தெரியும். சூழ்நிலை சுமுகமாயிருக்கும். உத்தியோகத்தில் எதிர்காலம் பிரகாசமாயிருக்குமென்ற நம்பிக்கை பிறக்கும். குடும்பத்தில் சந்தோஷத்தையடைய இன்னும் சிறிதுகாலம் தாண்ட வேண்டும் 9-வது வீட்டுக் கிரஹம் 7-ல் நீசமாயிருப்பதும். 9-வது வீட்டில் பாபக் கிரகங்களிருப்பதும். உத்தியோக முன்னேற்ற விஷயத்தில் நிலைமை சுலபமாயிராது என்றே குறிப்பிடவேண்டும். ஏமாற்றங்கள் எதுவும் பிரமாதமாக ஏற்படாதென்றாலும் ஏதாவது மன அமைதியைப் பாதிக்கும்படி நிகழ இடமுண்டு எஜமானரிடம் எதிர்பார்க்கும் ஆதரவு கைகூடாது நண்பர்களின் உதவியை நம்பியிருப்பதில் பிரயோசனமில்லை. அவர்கள் மூலமாக அபிலாஷைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முடியாதிருக்கும் வியாபாரிகளுக்கு இது சிறந்த தருணம் அவர்களது புது வியாபாரம் லாபகரமாயிருக்கும். புதிய மார்க்கங்கள் ஏற்படும் கூட்டு வியாபாரம் நல்ல வருமானத்தைத் தருவதாயிருக்கும். தூர இடத்திலுள்ள வியாபாரங்களை அனுகூலகரமாக நடத்தலாம் புதிய வாடிக்கைக்காரர்கள் பயன்தரத்தக்க நிபந்தனைகளுடன் முன்வருவார்கள் வியாபாரத்தை யொட்டிய பிரயாணம் ஒன்றும் நேரலாம். கல்யாணம் போன்ற சுப காரியங்களை நடத்துவதற்கு இம்மாதம் ஏற்றதாகும். சேவை புரியும் இலாகாவில் புதிய விஷயங்களில் பரிச்சயம் ஏற்படும் சகபாடிகளின் எதிர்ப்பிருந்துவரும். இதனால் தடைகள் எதுவும் ஏற்படாது

மார்ச் 17, 19 23, 24 26 31, ஏப்ரல் 1, 4, 6, 11, 12, தேதிகள் இவர்களுக்கு ஏற்ற நாட்கள்.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

பொதுவாக ஸிம்ம ராசிக்காரர்கள் கொம்மாளமும் பரபரப்பும் கலந்துள்ள ஒரு நிலைமையை விரும்புவார்கள். இது பொதுவான அம்சம் ஆனால் பிரபல கிரகங்கள் நல்லபடியாக அமையாதிருப்பதால இம்மாதம் அவர்களுக்கு அவ்வளவு சுகமானதென்று தோன்றாது. சந்தோஷகரமான அம்சங்களெல்லாம் அவர்கள் விகாரங்களில் நிலவாது நம்பிக்கையென்பது பெயரளவில் தான் நிற்கும். காரியகரமாகாது சென்ற மாதங்களிருந்ததைப்போல வில்லாமல் இந்த மாதம் பணம் தேடுவது சுலபமாயிராது பணமுடை முன்னையும் விட ரொம்பக் கடுமை குழந்தைகளுக்காகச் செலவுகளைச் செய்ய நேரும் எதிர்பாராத செலவினங்களும் குறுக்கிடும் ஒரு தூரத்துப் பய

1949-ம் ௵ மார்ச்சு ௴ 14௳ முதல் 1949-ம் ௵ ஏப்ரல் ௴ 13௳ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ணம் ஏற்படுமென்று சொல்லலாம். குழந்தையின் சுகவீனம்பற்றியோ. அல்லது பிள்ளையின் விவகாரம் குறித்தோ, தீவிரமாகக் கவனம் செலுத்த நேரும். 8-வது வீட்டுக்குடையவனும். லக்னுதிபதியும் அடைந்திருக்கும் ஸ்தான விசேஷத்தால் தேகத்தில் கடுமையான. வியாதி ஏற்படுமென்று தோன்றுகிறது. மனைவியின் தேகாரோக்கியம் குறித்தும் கவலைபபடும்படியே இருக்கும். பணக்கஷ்டத்தாலும். மனக்கஷ்டத்தாலும் இரண்டாம் பகுதியில் அதிகமாக வருந்தும்படியிருக்கும். பெற்ருேர்களிருந்தால் அவர்கள் கொடிய வியாதியால் அவதிப்படுவதைக் கண்டு கவலைப்படும்படி ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பாராத, மனதுக்குப் பிடிக்காத மாறுதலேற்படும் அல்லது தூர இடத்துக்குமாற்றலாகிப் போக நேரும். சில இனங்களில் கல்யாணமுயற்சிகள் பலிக்காமல் போகும். வியாபாரிகள் தங்களுக்குவரும் லாபத்தைக்கண்டுதிருப்திகொள்ள மாட்டார்கள் தடைகளும். அசௌகரியங்களும் இவர்களுக்கு குறுக்கேநிற்கும் புதிய வியாபாரம் பயனளிக்காது. பார்கியாக நின்று போன பழைய வியாபாரம் லாபகரமாகப்படும் பழைய பங்காளித்வம் முடிவடைந்துதற்போதைய கால நிலைமைகளுக்கேற்ற புதிய கூட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்படும். ஹேஷ்யங்கள் வெற்றியைத்தராது. மாணவர்கள் பரீட்சைகளில் சரிவர எழுத முடியாமற் போகும் பெரியவர்களுடன் தகராறு ஏற்படாமல் பார்த்துக்கொண்டு அவர்களது ஆசிக்குப் பாத்திரமாக முயற்சி செய்யவேண்டும் பந்தயங்களினுல் பயனில்லை.

மார்ச் 17, 23 24 30 ஏப்ரல் 1. 4, 8, 12 தேதிகள் இவர்களுக்கு உதவிகரமான தினங்கள்.

1949-ம் வருஷம் மார்ச்சுமீ 14-ந் தேதி காலையிலுள்ள கிரஹ நிலை.

சூரியன் செவ்வாய்	ராகு		உரானஸ்
சுக்கிரன் புதன்	ராசி		
குரு			சனி சந்திரன்
		கேது	நெப்டியூன்

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களுக்கு 2. 7. 8 ஆகிய இடங்களில் பாபக் கிரகங்கள் இருப்பது இந்த மாதம் குடும்ப சுகத்துக்கு உகந்ததல்ல. குடும்பத்தில் மனைவி குழந்தைகள் இவர்களது தேகாரோக்கிய மின்மையால் அதிகக் கவலை ஏற்படும். பணமுடை அதிகமாயிருக்குமெனக் காணப்படுகிறது சொந்த தேக நிலைமையும் திருப்தி தருவதாயிராது ஏழ்மையான நிலையிலிருப்பவர்களானுல் கை மாற்ருகக் கடன் வாங்க நேரிடும் தனவந்தர்களாயின் வீட்டின் அபிவிருத்திக்காகப் பணம் செலவிடநேரும் எளியவர்களுக்கு வீடடுப் பிரச்னைபற்றிக் கோளாறுகளெல்லாம் ஏற்படும். ஒரு புறத்தில் வியாஜ்ய விவகாரங்களினுல் வியாகூலமும் மறுபுறத்தில் எதிரிகளினுல் உண்டாகும் தொல்லைகளும் இருந்துவரும் இரண்டாம் பகுதி மகாமோசம். சச்சரவுகள். ஆவேசத்துடன் வாதம் புரிவது. பிரயாணம் இவற்றையெல்லாம் மூட்டை கட்டி ஒதுக்கி வைப்பதுதான் விசேஷம். பொதுவாக எல்லா விவகாரங்களிலும் மன நிம்மதியிராது. உறவினரில் யாரேனும் ஒருவரால் அனுவசிய கஷ்டமும் செலவும் ஏற்படும். சாவதானமாகப் போவதால்தான் இம்மாதத்தைத் திருப்திகரமாகச் சமாளிக்கலாம். உத்தியோகத்தில் நல்லது எதுவும் நிகழாது. ஏமாற்றங்களோ, அல்லது உத்தியோக மாற்றமோ ஏற்படலாம் மேலதிகாரி எந்த விஷயத்திலும் குற்றம் கண்டு குறைகூறுவார். மௌனமாக விருக்கும் தன்மையால்தான் மன அமைதியைப் பெற இயலும். வியாபாரிகளுக்குத் தடைகளும் ஏமாற்றங்களும் ஏற்படும். சில இனங்களில் சச்சரவுகளும் கோர்ட்டு விவகாரங்களும் முளைக்கக்கூடும். செலவு கடுமை. வருமான வரியிலாகாவினுல் அநேகவிதமான சங்கடங்கள் ஏறபடும் குதிரைப் பந்தயத்தை விலக்குவது விவேகம்.

மார்ச் 17 18, 19 23, 24, 26, தேதிகளும் ஏப்ரல் 1. 4, 6, 8, 12 தேதிகளும் இவர்களுக்குச் சிலாக்கியம்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

நியாயமாக எதிர்பார்க்கும் அளவில் எல்லா கிரகங்களும் இம்மாதம் இந்த ராசிக்காரர்களுக்கு நன்ருக அமைந்திருக்கின்றன எனவே சாதகமான நிலைமை நிலவும். பண விஷயத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் தென்படும் மாதத் துவக்கத்திலேயே ஏதேனும் அதிருஷ்டம் அடித்தாலும் அடிக்கலாம். ஆனுல் நடுப்பில் கெடட தசா புக்திகள் இல்லாமலிருககவேண்டும். குடும்பத்திலும் சந்தோஷகரமாக விளங்கக்கூடிய மாதமே. எளிய நிலையிலிருப்பவர்கள் கல்யாணம் போன்ற சுப காரியங்களுக்காகச் சுலபமாகக் கடன் வாங்கிக் கொள்ள முடியும். தேக சுகம் பரிபூர்ண திருப்தியைத் தரும் நிலைமையிலிராது உள்ளூர முடங்கிக் கிடக்கும் வியாதியுள்ளவர்களாயின் அது மெதுவாக இந்தக் கட்டத்தில் வெளியில் தலையைக் காட்ட ஆரம்பிக்கும். நீர்க் கோளாறினுல் ஏற்படும் உபாதியும் இதில் ஒன்ருகும் பெற்ருேர்களை விட்டுத் தொலைவில் உள்ள குழந்தைகளிடமிருந்து நல்ல சேதிகளைப் பெறலாம். படித்தல், எழுதுவது இவற்றிலிருந்து புதிய அறிவை தேடிக்கொள்ளலாம். 7-வது இடத்தில் தீய கிரகங்களான சனி, செவ்வாய் வீட்சண்யத்தோடு இருப்பதால் மனைவி அல்லது புருஷனின் தேக சுகம் வெகுவாகப் பாதிக்கப்படும். அல்லது இல்லற சுகம் இல்லாமற் போகும். எதிர்பாராத தவிர்க்க முடியாத இனங்களுக்காகச் செலவுகளைச் செய்யநேரும். சம்பாதிக்கும் பணம் துரிதமாகச் செலவாகிவிடும். கிட்டிய பந்துக்களுக்கு உதவிசெய்ய நேரும்: அல்லது அவர்களிடம் உதவி கோரும்படியாகவும் ஏற்படும். இதனுல் பரஸ்பரம் தப்பு அபிப்பிராயம் விளையும். உத்தியோகத்தில் உயர்

விருக்கும்; அல்லது செய்யும் சேவைக்கு மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரிகள் நல்ல சுபிட்ச நிலைமையை அடைவர். நல்ல லாபத்தையும் சம்பாதிப்பார்கள். முதல் வாரம் வியாபாரத்தில் லாபத்தை அடைய ரொமப சாதகம் குதிரைப் பந்தயப் பிரியர்களுக்கு இம்மாதம் மிக்க நல்லதாயிருக்கும். இதற்கு முன் ஏற்பட்ட நஷ்டங்கள் சுலபமாக ஈடு செய்யப்படும். மாணவர்கள் பரீட்சையில் சிறப்பாக எழுதுவார்கள்.

மார்ச் 17. 23. 24 26 27, 31 ஏப்ரல் 1, 3, 4, 6, 14 தேதிகள் இவர்களுக்குச் சிறப்பானவை.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

முக்கிய கிரகங்களான குருவும், சனியும் அனுகூலமாக அமையாததால் விருச்சிக ராசிக்காரர்களுக்கு இம்மாதம் அவ்வளவு உயர்ந்ததென்று சொல்லுவதற்கில்லை பணமுடை அதிகம். வருமான இனம் மாதா மாதம் மாறும்; இது மொத்தத்தில் ஒரே சீராகத் திருப்திகரமில்லாமல் இருக்கும் இப்போது முதல் இன்னும் ஒரு வருஷம்வரையில் மகரராசியில் தனுதிபதி பலவீனப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாம். மனைவி அல்லது புருஷன் இவர்களில யாருக்கேனும் கடுமையான ரோகம் மிருந்தாலல்லாது இம்மாதம் குடும்பத்தில் கஷ்டம் அதிகமாயிராது உத்தியோகத்திலும். குழந்தைகள் சீரான முறையில் அபிவிருத்தி பெருமையினாலும் மன நிம்மதியற்றுப் போகும். இந்த நிலைமை இம்மாதத்தில்மட்டும்தான். உத்தியோகத்தில அனுகூலமேதுமிராது பிறந்த ஊரிலிருந்து தொலைவில் இருப்பவர்கள் இம்மாதம் சொந்த ஊர் சென்று தமக்கு நெருங்கிய உறவினர்களைச் சந்திக்கும்படியிருக்கும். மற்றவர்களுக்கு ஒரு பிரயாணம் வாய்க்கும் கிட்டிய உறவினருக்கோ அல்லது சகோதரருக்கோ தேக சுகமற்றுப் போவதால் சில தினங்கள் வரையில் கவலை இருந்துவரும் உற்சாகமும் ஈடுபாடும் ஹேஷ்யங்களில் அதிகமாயிருக்குமென்றாலும் வியாபாரிகள் இம்மாதம் கண்மூடித்தனமாக இதில் இறங்குவது பிசகு லாபம் இம்மாதம் சொற்பமே. ரொம்பத் தீவிரமாயுள்ள ஹேஷ்யங்களில் முனைபவர்களுக்கு நஷ்டம் தவிர்க்கமுடியாததாகும் 3, 5 இடங்களிலுள்ள கிரகங்கள் காரணமாக ஆத்மீகத்துறையில் கவனம் திரும்பி, வேதாந்த இலக்கியங்களில் கருத்து ஈடுபட்டு நிற்கும். இரண்டாம் பகுதியில் நண்பர்கள் நன்றி விச்வாசத்தோடு இருக்கமாட்டார்கள். அவர்களது உறுதியை நம்பியிருந்தால் ஏமாற்றமே ஏற்படும். தூர பந்துவாகவுள்ள ஒருவரது குழந்தை காலமாகும். தசா, புக்தி வலுவாக இருந்தாலன்றி பரீட்சையில் உட்காருபவர்களுக்கு ஓரளவுதான் வெற்றி சிலருக்கு விபத்து ஏற்பட்டு அதனால் காலுக்கு உபாதி ஏற்படும் பாக்கியாக நின்றுபோன விவகாரங்கள் முடிவில்லாமலேயே தடைப்பட்டு இன்னும் சிறிதுகாலம்வரை அந்தரத்தில் நிற்கும் லாபத்துக்கான அறிகுறிகள் தென்படாததால் குதிரைப் பந்தய விவகாரங்கள் கூடவே கூடாது.

மார்ச் 17, 23, 27, 31, ஏப்ரல் 1, 8, 9, 12 தேதிகள் இவர்களுக்கு சாதகமான தினங்கள்.

தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

இம்மாதத்தில் தனுர்ராசிக்காரர்களுக்கு நல்லதும் கெட்டதும்மாறிமாறி வந்துகொண்டிருக்கும். அதற்கேற்றவாறுதான் கிரக நிலையிருக்கிறது. எதுவும் ரொம்ப உயர்வு என்றோ பரம பட்டம் என்றோ இம்மாதமிராது. சிலருக்குக் கண்ணில் கோளாறு ஏற்படும் குடும்ப வாழ்க்கை இனித்தான் அபிவிருத்தி பெற வேண்டும் குடும்ப விவகாரங்கள், நோயினால் உபத்திரவம் இவற்றால் மன அமைதி இராது. பண விஷயத்தில் வசதி உண்டு. எந்த வகையிலாவது, சிரமமில்லாமல் பணம் வந்துகொண்டிருக்கும் சிலருக்குச் சுலபமாக விவாகங்கள் நிகழும் என்பதற்கான கிரகக் குறிப்புகள் காண்கின்றன. 4-வது இடத்தில் இரண்டு பாபக்கிரகங்கள் வீட்சண்யமும், 10-வது வீட்டுக்குடைய கிரகம் 4-ல் பலவீனப்பட்டிருப்பதும் உத்தியோக வாழ்வைச் சற்று பாதிக்கும். அதாவது சிறுகால ரஜாப்பெறவேண்டிவரும் அல்லது எதிர்பாராது மாற்றலாகும். இதுவுமில்லையானால் உத்தியோகத்தில் ஏதேனும் சற்று ஏமாற்றமேற்படும் மாணவர்கள் சமுத்திரம், ஆறு இவற்றில் இறங்கி ஸ்னானம் செய்வது விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் கிரகங்கள் அபாயங்கள் ஏற்படுமென்பதைக் குறிக்கின்றன

எதிர்பார்த்த அளவுக்கில்லாவிட்டாலும் மாணவர்கள் சுமாராகப் பரீட்சைகளில் எழுத இயலும். ஹேஷ்யங்களில் வியாபாரிகள் வெற்றி காண்பர் எண்ணெய், நெய் போன்ற இனங்களில் வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல சம்பாத்தியமிருக்கும் தூரத்தில் உள்ள சகோதரர் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிசெய்து கொள்ளலாமென்பதற்தம் அறிகுறிகள் இருக்கின்றன. இப்போது வியாபாரத்தையொட்டி நடத்தும் கடிதப் போக்குவரத்தால் நீடித்த அனுகூலங்களுக்கு இடமேற்படும் இம்மாத இரண்டாம் பகுதியில் வாகன வசதியைப்பற்றி ஏதாவது கஷ்டங்களேற்படும். வயதில் முதிர்ந்த உறவினர்களிடமிருந்து நல்ல சமாசாரம் வரும்.

மார்ச் 17. 23, 24, 26, 30, ஏப்ரல் 1, 3, 8, 12 தேதிகள் இவர்களுக்கு உத்தம தினங்கள்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

மகரராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் முக்கியமாக விளங்கும் அம்சங்கள் நான்கு. அவையாவன:— (1) கிட்டிய பந்துவிடமிருந்து கிடைக்கும் அதிருஷ்டம் ; (2) உறவினர் அல்லது நண்பர்களில் ஒருவரைப்பற்றி ஆச்சர்யப்படும்படியான செய்தி ; (3) உத்தியோகம், அல்லது வியாபாரம்பற்றி கடினமான காலநிலை; (4) ஏற்பாடு செய்யப்பட்டதாகவோ அல்லது எதிர்பார்க்கப்படுவதாகவோ உள்ள ஒரு பிரயாணம் தாமதப்படுவது.

நண்பர்கள், அவர்களது விவகாரங்கள் இவை சம்பந்தமாக விசேஷப் பரபரப்பு. இருந்துவரும் அனுகூலம் தரத்தக்க நட்பு உருவாகும். அபிலாஷைகள் ஓரளவு நிறைவேறும் 10 வது இடத்தை பாபக்கிரகங்கள் பார்ப்பதால் மனது ரொம்ப புண்பட்டுப்போக நேரிடும்.

பண விஷயத்திலும் இந்த சமயத்தில் சிறிது அசௌகரியம் ஏற்படும் உறவினர் அல்லது நண்பரிடமிருந்து தக்க சமயத்தில் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் சிறிய அளவில் ஏதேனும் அனுகூலம் கூடிவரும். அதிகப் பண வசதிகள் இல்லாமற்போனாலும் அதிகப் பொறுப்புகளை மட்டும் சுமரும்படியிருக்கும் இதில் சுணங்காமலிருக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் சிறந்த பயனுண்டு அதற்கான அறிகுறிகளைப் பிரபல கிரகங்கள் சூசிப்பிக்கின்றன. சிலருக்குக் கூடிய விரைவில் ஒரு குழந்தை பிறக்கக் கூடும் கடன் படுவதோ, மேலொப்பம் போடுவதோ கூடாது. கூடிய சீக்கிரம் ஒரு பிரயாணம் நேரும். எதிர்காலத்தில் நம்பிக்கையில்லாமல் சுணங்கிப்போகும் குணம் இப்போது அதிகரித்துவரும் இதற்கு இடங்கொடுக்கக்கூடாது இல்லையானால் இது தன்னைத் தானே படுகுழியில் தள்ளிக்கொள்வதற்கு ஒப்பாகும். பிறர் ஆதிக்கத்துக்குட்படும்படி விட்டுவிடக்கூடாது மனதை. ஏனெனில் இதற்காகப் பின்னர் வருந்த நேரும். வியாபாரிகளுக்குச் சுமாரான கால நிலை. நண்பர்கள் சகாயத்தால பாக்கியாக விடுபட்டுப்போயிருந்த பழைய வ்யாபாரம் மீண்டும் நிறைவேறும் நிலைமையை அடையும்

மார்ச் 17, 23, 26, 31, ஏப்ரல் 1, 3, 8, 12 தேதிகள் இவர்களுக்குப் பக்குவமான நாட்கள்.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

சென்ற மாத தைக்காட்டிலும் இம்மாதம் கிரக நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கிறது தனுதிபதி ரொம்ப க்ஷீண தசையிலிருப்பதால், கட்டுக்கடங்காத செலவுகளினால் பண நெருக்கடி மிக்க அதிகமாயிருக்கும். மற்ற கிரகங்களின் மொத்தமான சேர்க்கை பலத்தால் அவசியமானபோது பணத்தைப் புரட்டிக்கொள்ளும் வசதிமட்டும் இருக்கும். உறவினர்கள் நண்பர்கள் இவர்களைப்பற்றிய பழக்கங்களில் சற்று பிரத்யேகமான முறையில் ஜாக்கிரதை வேண்டும். இல்லாவிட்டால் பணம்கொடுக்கல் வாங்கல்பற்றிய பழைய விவகாரங்களினால் விரோதம் ஏற்படும். கொஞ்சகாலத்துக்கு மனைவியின் தேகாரோக்கியம் திருப்திகரமாக இராது. எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய புதிய எண்ணங்களும் திட்டங்களும் மனதில் இடைவிடாமல் வேலை செய்த வண்ணமிருக்கும். சேவை செய்யும் இலாகாவில் புதிதாக ஒரு விஷயத்தைப்பற்றி விவரம் தெரிந்து கொள்ளலாம். இரண்டாவது இடத்தில் பாபக்கிரகங்கள் இருப்பதும் இரண்டாவது வீட்டுக்குடைய கிரகம் 12-ல் பலவீனப்பட்டிருப்பதும் பிறரைப் பற்றி வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசும் நிலைமையை உண்டுபண்ணும் என்பதையே குறிக்கின்றன. இதனால் சற்று கௌரவத்துக்கு ஹானி ஏற்பட இடமுண்டு. திடீரென்று எஜமானர் இந்த ராசிக்காரர்கள்மீது ஆதரவு கொண்டு, தளராத உழைப்புக்கு அங்கீகாரம் அளிக்கக்கூடும். 12 ல் குரு இருப்பதால் அவ்வாதரவின் பயனை அனுபவிக்கமுடியாமற் போகும். இவையெல்லாம் ஒரு நிலையிலில்லாமல் இருந்துவரும். வியாபாரிகளாயிருந்தாலும் திருப்திகரமாயிராது. வியாபாரத்தில் கொஞ்ச காலம்வரையில் தடைகளைச் சமாளிக்கவேண்டிவரும். கூட்டுமுறை சரிவர நடக்காது. இரண்டாம் பகுதியில் இது ரொம்ப மோசம். குதிரைப்பந்தயப் பித்தர்களுக்கு நிம்மதியேயிராது. எனவே இதில் பிரவேசிக்கக்கூடாது.

மார்ச் 17. 23. 24. 26 31. ஏப்ரல் 1, 2, 4, 9, 12 தேதிகள் இவர்களுக்குத் தரமானவை.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

மீனராசிக்காரர்களுடைய கால பலம் துரிதமாக அபிவிருத்திபெற்று வருகிறது. சூரியன் முதல் வீட்டில் இருப்பதும், சனி 6-ல் இருப்பதும் இல்லாமலிருந்தால் குடும்பம், உத்தியோகம், பணம் இவை எதிலும் எந்த விதமான சங்கடமும் இல்லாமலிருக்கும். சூரியன் 1-ல் இருப்பது கைமாற்று வாங்கத் தூண்டுவதாகும். பணம் தவறான இனங்களில் செலவாகாதென்றாலும் அதிகமாகப் பணம் வேண்டிவரும் குடும்பத்தில் நோய் நொடி இருப்பதால் இதில் அதிகமாகக் கவனத்தைச் செலுத்த நேரும் வீட்டில் சந்தோஷமில்லாமலிருக்கும். குரு ஏகாதச ராசியில் இருப்பதால் இவ்வளவு கஷ்டங்களுக்கிடையேயும் யாருக்கும் தெரியாத வகையில் வாழ்க்கை முன்னேற்றமடைந்தேவரும். வேண்டியதெல்லாம் கிடைக்காவிட்டாலும். அடுத்தமாதத்தில் சந்தோஷமேற்படும். தற்காலிகமாகவுள்ள கஷ்டங்களையெல்லாம் சுலபமாகவும், நேர்மையாகவும் சமாளிக்கலாம் எதிர்பார்க்கும் அளவுக்குத் தேகரோக்கியம் திருப்திகரமாயிராது உறவினர்கள் விரோதமாய் இருப்பினும் அவற்றால் கெடுதி ஏற்படும், ஒருபிரயாணம் சம்பவிக்க இடமுண்டு பல அதிதிகள் உதவிநாடி வருவர். வயதில் முதிர்ந்தவர்களானால் அன்னதானம் செய்வதில் சிரத்தை கொள்வர் இரண்டாம் பகுதியில் ஏதாவது உத்தியோகத்தில் லாபமேற்படும் பரீட்சைக்குப் போகும் பையன்கள் சுமாராக நன்றாகவே எழுதுவர்

மார்ச் 17. 21 23, 26 30 ஏப்ரல், 1, 3, 8, 9, 12 தேதிகள் இவர்களுக்குச் சுகமானவை.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,

5, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,

திருவல்லிக்கேணி.

கலா மண்டபம்

சினிமாவும் டைரக்டரும்

சாண்டில்யன்

சினிமாவில் மிகச் சிறியவர் என மதிக்கப்படுகிற கதாசிரியரைப்பற்றி சென்ற கட்டுரையில் எழுதினேன். மிகப் பெரியவர் என மதிக்கப்படும் டைரக்டரைபபற்றிய தகவல்களை இந்தக் கட்டுரையில் கவனிப்போம.

பணம் போடும முதலாளி யாராவது ஒருவரிடம் பயப்படுகிறார் என்றால் அவர் டைரக்டர்தான். ஒரு படத்தை நன்றாக எடுக்கும் சக்தி இவரிடம் இருக்கிறதோ இல்லையோ என்பது சந்தேகம். ஆனால் படத்தைக் குட்டிச்சுவராக்கும் சக்தியைப் பூர்ணமாகப் பெற்றுள்ள மனிதன் சினிமா டைரக்டர் என்பதில் சந்தேகமில்லை. பஸ் ஓட்டுகிற டிரைவருக்கு உள்ள பொறுப்பு சினிமாவில் டைரக்டருக்கு இருக்கிறது. டிரைவராயிருப்பவன் பலதரப்பட்ட ஜனங்களை ஒன்று சேர்த்து ஏற்றிக்கொண்டு ஜாககிரதையாக பஸ்ஸை ஓட்டினாலும் ஓட்டலாம். அல்லது அக்கம் பக்கத்தில் ஏறி நிற்கிறவர்களிடம் பேசிச் சிரித்து பஸ்ஸை தாறுமாறாக ஓட்டி எலலோரையும் கூண்டோடு கைலாசமாகக் குழியில் தள்ளினாலும் தள்ளலாம். அம்மாதிரியே சினிமா டைரக்டர் தனனிடம் சேர்ந்திருககும் பலதரப்பட்ட பேர்வழிகளை, அதாவது முதலாளி, நக்ஷத்திரம், கதாசிரியர் ஒளிப்பதிவு செய்பவர், ஒலிப்பதிவு செய்பவர் சில்லறை நடிகர்கள், வர்ணமெட்டு அமைப்பவர், பாட்டெழுதும் கவி, இவர்களை ஒன்று சேர்த்துக் கட்டி இழுத்து காலாகாலத்தில் ஒத்திகை நடத்தி படத்தை 'ஷூட்' செய்யலாம. அல்லது கதை, பாட்டு நடிப்பு எதிலும சிரத்தை காட்டாமல் 'ஸெட் போடுங்க, வரேன்' என்று அதிகாரம் செய்து விடடு காலத்தை ஓட்டி தாறுமாறாகப் படத்தைப் பிடித்து எல்லோருக்கும் அபக்கியாதி வாங்கி வைககலாம்.

நக்ஷத்திரத்தைப்பற்றி எழுதிய கட்டுரையில் 'நக்ஷத்திரம விழும்போது முதலாளியையும் சேர்த்து

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

சிங்கள நடிகை ருக்மிணி தேவி. 'முறிந்த வாக்கு' என்ற சிங்களப் படத்தில் திறம்பட நடித்தவர், மதுரை சித்ர கலா மூவிடோன் தயாரிப்பு.

சினிமாவும் டைரக்டரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

இழுத்துக்கொண்டு விழுகிறது என்று எழுதியிருந்தேன். ஆனால் டைரக்டரின் சக்தியைப் பார்க்கப்போனால் நக்ஷத்திரத்தின் சக்தி மகா சொல்பம். டைரக்டர் மட்டும் அஜாக்கிரதையாகப் படத்தை எடுத்தாரோ அதோடு அவர் பெயர் கெடுவதல்லாமல், கதை எழுதுபவர், நடிகர், நடிகை எல்லோர் பெயரும் கெடுவதோடு முதலாளியின் பணமும் இருந்த இடம் தெரியாமல் 'ட்ரிக் ஷாட்'டால் மறைவதுபோல் மறைந்து விடுகிறது.

டைரக்டர் செய்யவேண்டிய வேலை என்ன என்பதை முதலில் தெரிந்துகொண்டால் அவர் அஜாக்கிரதையால் படம் கெடும் காரணத்தைத் தெரிந்துகொள்ளலாம். கதாசிரியர் திரைக் கதை எழுதி முடித்துவிட்டாரானால் டைரக்டர் அதை வைத்துக்கொண்டு 'ஷூட்டிங் ஸ்கிரிப்ட்' அதாவது படம் எடுக்கும் முறைப்படி 'காட்சிகளை அமைக்கும் நகல்' எழுதவேண்டும். இந்த அலுவல் சாதாரணமானதல்ல. இது முடிந்தால் அப்புறம் குழந்தைகூட படத்தை எடுத்துவிடலாம். படம் பிடிக்கும் முறைப்படி காட்சிகளை அமைப்பதென்றால் என்ன? ஒரு கதையை எடுத்துக்கொள்ளுங்கள். காலகதியால் காட்டில் வசிக்கும் ஒரு ராஜகுமாரன் பக்கத்து ஊர் கன்னிமாடத்தின் சுவரேறிக் குதித்து அங்குள்ள ராஜகுமாரியைக் காதலித்து அவள் அப்பனால் பிடிபட்டு ஜெயிலில் அடைக்கப்படுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இந்த சம்பவங்களை வரிசையாகப் படம் எடுக்க முடியாது. இந்தக் கதையில் எதை எதைக் காட்ட வேண்டும் என்பதைப் பிரிக்கவேண்டும். காடு, கன்னிமாடம், ஜெயில் ஆக மூன்று பிராந்தியங்களில் கதை நடக்கிறது. இந்த மூன்றையும் பிரித்துக்கொள்ளவேண்டும். அதில் நடக்கும் கதைப் பாகங்களை ஒன்றாகத் தொகுக்கவேண்டும். பிறகு அந்தப் பாகங்களை எப்படி எடுப்பதென்ற விவரங்களை அதாவது ஷாட்களை எழுத வேண்டும். ராஜகுமாரன் காட்டிலிருந்து கன்னிமாடம் போய் மறுபடியும் காட்டுக்கு வந்து தன் தாயாரைப் பார்த்துவிட்டு இரண்டாம் நாளும் கன்னிமாடத்தில் காதலியை சந்தித்தான் என்றால் முதலில் காட்டுக் காட்சியை அமைத்துப் படம் பிடித்து அடுத்தபடி ஒரு கன்னிமாடம் அமைத்துப் படம் பிடித்து மறுபடியும் காட்டுக் காட்சியை அமைப்பதென்றால் நடவாத காரியம். செலவும் இரட்டிப்பாகும். தவிர முதல் நாள் அமைத்த காட்டுக் காட்சி அப்படியே திரும்ப அமையாவிட்டால் ராஜகுமாரன் வேறெங்கேயோ போகிறான்போலிருக்கிறதே என்று நாம் குழம்பவும் நேரும். ஆகையால்தான் 'ஸெட்'டுகளைப் பிரித்து டைரக்டர் 'ஷாட்'களை விவரமாக எழுதுகிறார். இதோ கன்னிமாடத்தில் காதலி காதலனை சந்திக்கிறாள். பிறகு அப்பாலவ சந்திக்கிறாள் இரண்டாம் முறை காதலன் வருகிறான் என்ற சீன்களை எல்லாம் ஒரே மூச்சில் எடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி எடுக்கப்படும் காட்சிகள் நெம்பர் போடப்பட்டு இறுதியில் கதை தொடர்ச்சியாக வரும்படி எடிட் செய்யப்படும்.

இப்படி எடுப்பதில் ஏதாவதொரு அம்சம் பிசகினாலும் கதையில் முன்னுக்குப் பின் சம்பந்தமிருக்காது. அப்படியாகிவிட்டால் படத்துக்கும் கதைக்கும் ஒன்றுக்குந்தான் சம்பந்தமிருப்பதில்லையே. ஆகையால் டைரக்டர் படத்துக்கு 'ஷூட்டிங் ஸ்கிரிப்ட்' எழுதும் வேலையை மிகவும் கருத்துடன் செய்யவேண்டும். இந்த விஷயத்தில என் அனுபவத்தைச சொல்ல வேண்டுமானால் தமிழ்ப் பட டைரக்டர்களில் முக்கால் வாசிப்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]



பிங் கிராஸ்பி

★ ★ ★ 1948-வது வருஷத்தில் இந்த 10 பேர் நடித்த படங்கள்தான் அதிக வசூலைத் தந்தன. ★ ★ ★

பெட்டி
கிராபிள்

ஆபட்,
காஸ்டெல்லோ

காரி கூபர்

பாப் ஹோப்

ஹம்ப்ரே
போகார்ட்

கிளார்க்
கேபிள்

காரி கிராண்ட்

ஸ்பென்ஸர்
ட்ரேஸி



இங்கிரிட்
பெர்க்மன்

சினிமாவும் டைரக்டரும்

[முன்பக்கத் தொடர்ச்சி]

பேர் 'ஷூட்டிங் ஸ்கிரிப்ட்' எழுதுவது கிடையாது. திரைக் கதை எழுதவேண்டிய கதாசிரியர் நாடக ரூபமாக ஒரு கதையை எழுதிக் கொடுக்கிறார் அதுவே தவறு. திரைக்குக கதை அமைப்பதற்கும் நாடகத்துக்கு எழுதுவதற்கும் ஏகப்பட்ட வித்தியாசம் உண்டு. ஆனால் கதாசிரியர்கள் அநேகமாக நாடகந்தான் எழுதிக் கொடுக்கிறார்கள் அதை டைரக்டராவது திரைக்கு வரும்படி அமைக்கிறாரா? கிடையாது அந்த நாடகப் பிரதியின் பக்க வாட்டிலேயே ஷாட்டுகளை தோராயமாகக் குறித்துக்கொள்கிறார். மிச்சத்தை ஸெட்டில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடுகிறார். முதலாளியும விளைவை திரையில் பார்த்துக் கொள்ளலாம என்று சும்மா இருந்து விடுகிறார். கடைசியில் அவருககுப் பலன தெரிகிறது.

டைரகடர் ஒழுங்காக 'ஷூட்டிங் ஸ்கிரிப்டை' எழுதினால் சாதாரணக் கலை தயைக்கூடப் பிரமாதமாகக் காட்ட முடியும். ஒரு மனிதனுடைய மனது நிலைகொள்ளாமல் தவிக்கிறது என்று கதாசிரியன் எழுதினால் அதை படத்தில் கொண்டு வர என்னென்ன விதமாக 'ஷாட்' எடுககலாம். எந்தெந்த 'மாண்டேஜ்' களை இணைக்கலாம் என்றெல்லாம் யோசித்து டைரக்டர் முடிவு செய்யவேண்டும். 'டாக்டர் ஜெகில் அண்டு ஹைட்' என்ற படத்தைப் பார்த்தீர்களானால் தெரியும். டாக்டர் ஜெகிலின் மூளை விர்ரென்று சுழலும்போது அவர் முகமண்டலத்தைப் பெரிதாகக்காட்டி அதில் உணர்ச்சிகளைக் காட்டுவதோடு எரிமலைச்சுடாகள் கிளம்பும் காட்சிகளையும். மண் உருகி குழம்பாக வழியும் காட்சியையும் அந்த முகமண்டலத்தோடு இணைத்திருக்கிறார்கள். பார்க்கும்போது நமக்கே திகில் ஏற்படும்படியாயிருக்கிறது

உணர்ச்சிகளை தத்ரூபம் படத்தில் கொண்டுவருவது டைரக்டர் வேலை. அதை அவர் சரியாகச் செய்யாதபட்சத்தில் அந்தப் படத்தில் சேர்ந்த அனைவர் பெயரும கெடடுப்போகும்.

கதையின் தன்மையை மனதில் டைரகடர் வாஙகாவிடடால் மற்றவர்கள் பெயர் எப்படிக் கெடு

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

சினிமாவும் டைரக்டரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

கிறது என்பதைச் சொல்கிறேன். "கதாநாயகி அந்த வரலாற்றைக் கேட்டு அப்படியே ஸ்தம்பித்து விட்டாள்" என்று கதாசிரியர் எழுதியிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். சரியான டைரக்டராயிருப்பவர் முதலில் செய்தியைச் சொல்பவனையும் நடிகையையும் சேர்த்து 'மிட் ஷாட்' ஒன்று எடுக்கிறார். இதில் நடிகையின் உருவம் பொதுவாகத்தான் தெரியும் ஆனால் அவள் அங்கசேஷ்டைகளிலிருந்தும் "ஹா!" என்ற கூச்சலிலிருந்தும் 'ஏதோ விஷயம் அபாயமானதுபோலிருக்கிறது' என்று தீர்மானிக்கிறோம் பிறகு டைரக்டர் அந்த நடிகைக்கு முன்பாக காமிராவை ஓட்டச்சொல்லி அவள் முகத்தை நமக்கு வெகு அருகில் காட்டுவார். இதை 'க்ளோஸ் அப்' என்று சொல்வார்கள். அப்படிக் காட்டும்போது முகச்சதைகளின் அசைவு, புருவ நெறிப்பு, கண் பிரமிப்பு இவை தெரிவதால் உணர்ச்சியை நாம் இன்னும் நன்றாக அனுபவிக்க முடிகிறது இந்த இடத்தில் முழுப்பலன் கிடைப்பது டைரக்டர், நக்ஷத்திரம், ஒளிப்பதிவு செய்பவர் ஆகிய மூவர் திறமையையும் பொறுத்ததானாலும் ஆரம்ப வேலை அதாவது 'ஷாட்'டை இப்படி எடுக்க வேண்டும் என்று நிர்ணயிப்பது டைரக்டரின் வேலை இல்லாத அவர் சரிவரச்செய்யாதபட்சத்தில் நடிகரோ, நடிகையோ என்ன செய்ய முடியும்? 'மிட் ஷாட்'டோடு நிறுத்திவிட்டால் முகத்தில் என்ன உணர்ச்சியைக் காட்டினால் தான் என்ன பிரயோஜனம். முகத்தைத் திரையில் காட்டினால்தானே நடிகை கொடுத்திருக்கும் உணர்ச்சி தெரியும். ஆகையால் அவசியமான ஒரு 'ஷாட்'டை டைரக்டர் குறைத்தால் முக்கியமான ஒரு கட்டம் சூன்யமாகவே தெரியும். ஜனங்கள் என்ன சொல்வார்கள்? சே! நடிப்பு சுகமில்லை ஸார் 'ஹா!'ன்னு அவ்வளவுதான் என்று தீர்த்துக் கட்டிவிடுவார்கள் இதனால் நடிப்பவருக்கு அபக்கியாதி

ஆகையால், டைரக்டர் பொறுப்பு மிக அதிகம் 'ஷூட்டிங் ஸ்கிரிப்'டை தயாரிக்காமல் அவர் ஸெட்டுக்குப் போகவே கூடாது இந்தப் பொறுப்பை உணராமல் ஸெட்டில் போய் உட்கார்ந்து சதா சிகரெட்டை ஊதி ஊதி புகையைக் கிளப்பிக்கொண்டு 'ஷூட்' என்று கத்துவதுதான் தமது வேலை என்று டைரக்டர் கருதும் வரை படங்களின் வசூலும் புகைந்துதான் போகும்.

கேசவன்தான் ராமாவதாரம் எடுத்தான் என்பது தெரிந்த விஷயம் ஜெனரல் பிலிம்ஸ் ரிலீஸான 'ஜெய் ஹனுமா'னிலும் கேசவ பண்டிதர்தான் ராமனைத் தோன்றுகிறார் ஒரே சொல், ஒரே அம்பு, ஒரே பெண் என்ற ராமபிரானுக்குப் பக்கத்துணையாயிருப்பவர் சீதையாகத் தோன்றும் நிருபராய்

சினிமா பார்ப்பதால் குழந்தைகள் கெட்டுப்போகுமா?

பிரிட்டிஷ் மாஜிஸ்டிரேட்டுகள் தீர்ப்பு

"சினிமா பார்ப்பதால் குழந்தைகள் கெட்டுப்போகுமா?' என்பதைப்பற்றி ஆராய்ந்து தீர்ப்புக் கூறுமாறு பிரிட்டிஷ் சர்க்காரின் உள் நாட்டிலாகா 6693 மாஜிஸ்திரேட்டுகளுக்கு சென்ற வருஷம் உத்தரவிட்டது. இந்த 6693 மாஜிஸ்திரேட்டுகளுமாகத் தீவிர ஆராய்ச்சியும் விசாரணையும் நடத்தியபின் பின்வருமாறு தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்!—

"சினிமா பார்ப்பதால் குழந்தைகள் கெட்டுப்போவதில்லை. சினிமா ஏற்படும் காலத்திற்கு முன்னால் குழந்தைகள் எவ்வளவு கெடுதலானவர்களாயிருந்தார்களோ அதைவிடக் கெடுதலாக இப்பொழுது இல்லை குழந்தைகளுக்கு இயற்கையாகவுள்ள துஷ்டத்தனத்துக்கு ஏதாவதொரு காரணத்தைச் சொல்லவேண்டுமானால் சினிமா தலையில் பழியைப்போடலாமே தவிர சினிமா குழந்தைகள் மனோ அபிவிருத்திக்கு எத்தகைய இடைஞ்சலையும் விளைவிக்கவில்லை!"

(சில சிந்தனைத் துணுக்குகள்)

★

ஒரு சோலைக்குள் சிலர் வந்து சேர்ந்தார்கள். கல கல வென்று பேசிக்கொண்டே. பெண்மணிகளானதால் அதிக அளவில் அப்படி ஒலிசெய்துகொண்டே வந்திருக்கலாமென்று. கருதுவோரும் உண்டு ஆண்மக்களின் அவதூறுதான் என்று கருதிப்பயன் இல்லை! இவர்கள் வருவதற்கு முன் சோலைக்குயில்களெல்லாம் என்னென்னவோ சுந்தரமாய்ப் பேசிக்கொண்டிந்தனவாம் குயில்களுக்குப் பேச்சே பாட்டு பாட்டே பேச்சு கீதம் தானே பாஷை? பெண்மணிகளின் தெய்வக்களி துலங்கும் கல கலப்பைக (சல சலப்பு அல்ல சள சளப்பான வம்பளப்பல்ல,) கேட்டதும். சோலைக் குயில்கள் பேச்சை நிறுத்திவிட்டனவாம், ஏன்? பயந்தானு காரணம்? இல்லை என்கிருர் ஒரு கவிஞர் பெண்கள் பேசியது கேட்டதும் குயில்கள் பேச நாணமடைந்தன என்று கவிஞர் கற்பனை செய்கிருர் அந்தப் பேச்சுத்திறனுக்கு முன் நம்முடைய பேச்சும் பாட்டும்தான்......சோபிக்குமோ? அவர்கள் முன் நாமும் வாய் திறக்கலாமா?' என்றுதான் சோலையின் ஆதிவாசிகள் கப் சிப் என்று மௌனமாகிவிட்டனவாம் வாக்கு வசீகரத்தில் ஒவ்வொரு பெண்ணையும் 'வசந்தம்மை' என்ற ஓர் அன்னிபெஸன்டாகவோ 'வசந்த கோகில'மாகிய ஒரு ஸரோஜினியாகவோ சோலைக்குயில்கள் எண்ணியிருக்க வேண்டும் என்று பழைய கவிஞரின் கற்பனைக்கு ஒரு புதிய வியாக்கியானம் இட்டுப்பார்க்கலாம்

வசந்தம்மையின் வாக்கு வசீகரத்தைக் காட்டிலும் வசந்தகோகிலத்தின் வாக்கு வசீகரம் கவிதை-இனத்தைச் சார்ந்தது. வசந்தம்மையின் பேச்சிலே வஸந்தக்குயிலின் இசையைக் காட்டிலும் காட்டாருே மலையருவிலோ இசைக்கும் இசைகளைக் கேட்கலாம் ஆனுல் ஸரோஜினிதேவியின் கவிதையில் இசைக்கும் வஸந்த கோகிலமே இவர் பேச்சிலும் இசைத்ததென்று சொல்ல வேண்டும் ஸரோஜினியைக் 'கவிக்குயில்' என்று கூறுவது மிகவும் பொருத்தமானது: பேச்சிலும் 'கவிக்குயில்' தான் ஸரோஜினிதேவி—பேச்சே பாட்டாக வந்த கவிக்குயில்!

டாக்டர் பெஸன்டின் பேச்சிலே ஸரோஜினிதேவியின் ஹாஸ்யத்தையும் காணமுடியாது டாக்டர் பெஸன்டின் அறிவுக் கூர்மை ஒரு தத்துவ ஞான ஈட்டி போன்றது. ஸரோஜினியின் அறிவு கலையுணர்வில் ஊறி உருவாகியது இந்த அம்மை பெஸன்ட் அம்மையைக் காட்டிலும் அதிக அளவில் உணர்ச்சி வசமாகிவிடுவார் இருவரும் இந்தியாவின் வீர முரசுகள்; எனினும் ஸரோஜினியின் தேசியப் போர் முரசு போல் பெஸன்ட் அம்மையின் அரசியல் முரசு காந்தியத்தோடு இசைந்து ஒலிக்கவில்லை இதற்கு ஒரு முக்கிய காரணம், ஸரோஜினிதேவியின் இதயம் காந்தியடிகளை இந்தியாவின் ஆத்மாவாகவும். தன் ஞான குருவாகவும் ஒருங்கே பிரதிஷ்டை செய்துகொண்டதுதான், காந்தியடிகளும் பெஸன்ட் அம்மைபோல் அரசியல் ஞானிதான்; ஆனுல் அந்த ஞானத்திற்கு அரும் பெருந் துணையாயிற்று ஸரோஜினி தேவியின் கவியுள்ளம்-கலையுணர்ச்சியுடன் கூடிய தியாக புத்தி.

ஸ்ரீமதி சரோஜினி தேவி

ஆண்மையே வீரம் என்றும், பெண்மை என்பது அன்பாகிய ஈரம் தான் என்றும் சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. ஆனுல் காந்தியடிகள் இந்த அபிப்பிராயத்தை ஒபபுக்கொள்ளவில்லை என்பதைப் பலரும் அறியார் ஆண் மக்கள் மிருகத் தன்மையுள்ள வீர தீரத்தில்தான் பெண் மக்களை வென்றுவிடுகிருர்கள் என்று நான் நம்புகிறேன் தியாகம் என்ற வீரத்திலோ பெண்மை ஆணைக் காட்டிலும் சிறந்தவள்' என்று காந்தியடிகள் தெளிவாகக் கூறியுள்ளார் இந்த அபிபபிராயத்தைக் கொண்டுதான் தமது சத்தியாக்கிரக இயக்கத்திலே மகாத்மா காந்தி, பெண்களின் தியாக சக்தியையும் பயன்படுத்திக்கொள்ள முயன்ருர். தென் ஆப்பிரிக்காவில் வள்ளியம்மை போன்ற சாதாரணப் பெண்ணையும் வீர மங்கையாகக் கண்டு காட்டினுர். இந்தியாவிலோ கவிதைக் குயிலான



காந்திஜி

ஸரோஜினியின் தியாக வீரத்தையும் பயன்படுத்திக்கொண்டார்; இதுவே இம்மகானின் பெரிய சத்தியாக்கிரக வெற்றிகளில் ஒன்று எனலாம்.

'ஹிட்லர், முஸோலினி முதலான பெயர்களை மறந்து விடலாம் ஆனல் "அரை நிர்வாணப் பக்கிரி" என்று உலகம் போற்றும் உத்தமரான மோகனதாஸ் காந்தியின் புகழ் உலகம் உள்ளளவும் ஓங்கி நிற்பது திண்ணம்' என்று ஸரோஜினி கூறியுள்ளார். இந்த நம்பிக்கை ஸரோஜினி தேவியின் இதய கானமாகி, இவருடைய அரசியல்—பிரசங்கங்களுக்கெல்லாம், பணிகளுக்கெல்லாம் ஒரு விசேஷ சோபை அளித்து விட்டது.

திரிபுரி காங்கிரஸ் வைபவத்தின் முடிவிலே ஸரோஜினிதேவி, 'ஒரே கடமைதான், ஒரே லட்சியம்தான் நமக்கு. இந்தியா சேரவேண்டிய ஒரே ஒரு இடம்தான் இருக்கிறது. அதுதான் அன்னியர்களின் எத்தகைய தலையீடும் இல்லாத இந்திய மக்களின் சுதந்திரம்' என்று தெளிவாகக் கூறினர். இந்த வீரவாசகத்தை வெளியிடுவதற்கு முன் தமது குருநாதரான காந்தியடிகளைக் குறிப்பிடுகையில், 'ஒரு சிறுவனின் காலின்கீழ் நசுங்கிப் போகக்கூடிய. ஆனல் மிக்க பலம் வாய்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் ஆட்டிவைத்த. அபார சக்தியுள்ள அந்தச சிறு மனிதரான மகாத்மாவின் தலைமையில் நாம் எப்பொழுதும் ஒற்றுமையுடன் இருப்போமாக' என்றார் பக்தி உணர்ச்சி ததும்ப காந்தியடிகளின் லட்சிய சக்தியிலும் ஆத்ம சக்தியிலுமுள்ள நம்பிக்கையே இந்தியச் சுதந்திர இயக்கத்திலும் இந்தக் கவிக்குயிலுக்கு விசேஷ நம்பிக்கை அளித்தது.

காந்தியடிகளுக்கு வேறொரு கவிஞரிடத்திலும் விசேஷ அன்பு உண்டு. ஸரோஜினி தேவியைக் காட்டிலும் பெரியகவி அவர் ஆம். ரவீந்திரநாத தாகுர்தான். காந்தியடிகளுக்குத் தாகுரிடம் உள்ள அன்பைப் பக்தியென்றுகூடச் சொல்லலாம். ஆண்ட்ரூஸ் துரையைப்போல் காந்தியடிகளும் தாகுரைக் குருதேவர் என்று குறிப்பிட்டதுண்டு. எனினும் காந்தியடிகளுக்கும் தாகுருக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் உண்டு தாகுரடிகளின் தீர்க்க திருஷ்டி காந்தியடிகளின் இன்றைய அரசியல்-கீதைக்கு அதிக அளவில் பயன்படவில்லை தாகுரடிகளின் அழகுத்தெய்வம் மண்ணை மறந்து விண்ணில் பறப்பது போலத் தோன்றியது காந்தியடிகளுக்கு ஸரோஜினியின் கவிக்குயிலோ காந்தியடிகளின் 'தரித்திர நாராயணர்'களைக் கூவியழைத்தது: இன்றைய கஷ்டங்களுக்குப் பரிகாரமாகவும் சுதந்திரச் சொர்க்கத்தை நோக்கி விரைந்து செல்லுமாறு ஏவி உத்ஸாகப்படுத்தியது

காந்தியடிகளைப் பின்பற்றி, குருநாதரின் அந்த அடிச்சுவடுகளிலே சென்று. சிறைசெல்லவும் துணிந்தார் நமது கவிக்குயில் உப்பு சத்தியாக்கிரகம் மும்முரமாக நடைபெற்ற காலத்திலே மகாத்மா காந்தி சிறைசென்றதும், ஸரோஜினி தேவி சத்தியாககிரகச் சர்வாதிகாரியாகிப் போராட்டத்தை நடத்திய அந்த வைபவம் இந்திய சரித்திரத்திலே ஓர் அழகான அத்தியாயமாக இடம் பெற்றுவிட்டது, அந்தக் காலத்திலே ஜான்ஸி ராணி சுதந்திரப் போரில் ஈடுபட்டுத் தியாக சுந்தரியாக விளங்கியதுபோல், ஸரோஜினிதேவியும் சத்தியாக்கிரகப்போர் முனையில் தியாகசுந்தரியாகத் திகழ்ந்தாள் என்பதை நமது சரித்திரம் எப்படி மறக்கமுடியும்? இப்படிக் கவிக்குயிலைச் சுதந்திரக் குயிலாக்கி விட்டது மகாத்மாவின் ஆத்ம சக்தி.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையோடு வாழ்க்கையாகக் கலந்து தொண்டாற்றியது சுதந்திரக் குயிலின் கவியுள்ளம காந்தியடிகள் மரணமடைந்ததும். 'எங்களில் சிலரும் அவருடன் உண்மையாகவே இறந்துவிட்டார்கள்!' என்றார் ஸரோஜினிதேவி இத்தகைய உணர்ச்சி ஒரு கவியுள்ளத்திற்குத் தானே ஏற்படக்கூடும்?

நாங்கள் அவருடைய போர்வீரர்கள்: அவருடைய சத்தியக் கொடி தாங்கி அன்புக் கவசம் தரித்து. "ஆத்மசக்தி" என்ற உருவிய கத்தியுடன் போர் முனையில் நிற்போம்" என்றார். மகாத்மாவின் அன்புப் போருக்கு எவ்வளவு பொருத்தமான படைத்துணைவியார் இவர்!

மகாத்மாவின் உடல் இறந்து போனல் என்ன? குரல் மௌனமாகிவிட்டால் என்ன? லட்சக்கணக்கான குரல்கள் மகாத்மாவின் அரசியல்—கீதையை உலகமெங்கும் ஓதிக்கொண்டிருக்கவேண்டும். தலைமுறை தலைமுறையாக—என்றார் நடுங்கும் குரலில் ஸரோஜினிதேவி அகில இந்திய ரேடியோவில் காந்தியடிகளின் 'தெய்வ மரணம்' குறித்துப் பேசும்போது. இவர் குரல் நடுங்கத் தான் செய்தது; ஆனல் அந்தக் குரலிலே பிரதிபலித்த ஆத்மசக்தி ரேடியோ வாயிலாக உண்மையான ஒரு ஞான வானொலி போலவே பேசியது.

காந்தியடிகளைப் போர்வீரர்களுக்கெல்லாம் போர்வீரரென்றும். அரசர்களுக்கெல்லாம் அரசரென்றும், புரட்சிக்காரர்களுக்கெல்லாம் புரட்சிக்காரரென்றும் ஸரோஜினிதேவி குறிப்பிட்டார். தமக்கோ தலைவர் என்றார், குருநாதர் என்றார். "என் தந்தை" என்றார். இத்தகைய குரு சிஷ்யக் கிரமத்திற்கு ஒப்பாகச் சொல்ல வேறு என்ன இருக்கிறதென்று தேடிப்பார்த்தால். நம்முடைய உள்ளம் ராமகிருஷ்ண—விவேகானந்தரின் ஞான உறவை நினைத்துப் பார்க்கும் அல்லது கிறிஸ்துகாலத்திற்கே பறந்துபோய் அந்தச் சீடர்களின் குரு பக்தியை உற்றுநோக்கும் நம்முடைய தமிழ் நாட்டிலோ ராமானுஜர் காலத்தில் காணப்பட்ட குரு சிஷ்யக் கிரமத்

ராஜாஜி

''அடையார்லே சின்ன, சின்ன விடா நிறைய கட்டிருக்காளாம். போய் பார்த்துட்டு வரலாம் வரேளா?',

''வாங்கோ ஸார் புறப்படுவோம். 2 வருஷமா வீடுகிடைக்காமே திண்டாடிண்டிருக்கேன்...''

''வாடகைக்கு இல்லே ஸார். சும்மா அந்தப்பக்கம் 'வாக்' போய் வேடிக்கைப்பார்த்துட்டு வாலாமென்று கூப்பிட்டேன்!''

தைப் பார்த்துப் பரவசமாகி, மீண்டும் ஸரோஜினி தேவியின் காந்தி-பக்தியை நோக்கி வியந்து வியந்து பாராட்ட வேண்டியது தான்

'ஆத்மா சாந்தியடைவதாக என்றுதான் இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வது வழக்கம்' மகாத்மா காந்தியைக் குறித்தும் இப்படித்தான் பிரார்த்தனை செய்தார்கள், நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் வைராக்கிய பூஷணமும் வேதாந்தியுமான நமது கவர்னர் ஜெனரலும் காந்தியடிகளின் ஆத்ம சாந்தியைக் குறித்துப் பேசியதாகவே எனக்கு ஞாபகம். ஆனால் ஸரோஜினி தேவி மட்டும் இப்படிப் பேசவில்லை 'என் குருநாதரின் ஆத்மா, என் தலைவரின் என் ஞானத் தந்தையாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டாம், சாந்தியடையவேண்டாம்' என்று ஒரு முறைக்கு இருமுறை சொன்னார். 'என் தந்தையே! தாங்கள் சாந்தியடைய வேண்டாம். வேண்டாம். எங்கள் வாக்கை நிறைவேற்ற வேண்டிய ஆற்றலை உம்முடைய 'வாரிசு''களான எங்களுக்கு அளிப்பீராக, உம்முடைய சந்ததியாருக்கு, உம்முடைய சீடர்களுக்கு உம்முடைய கனவுகளின் காவலர்களுக்கு, இந்தியாவின் லட்சியத்தை நிறைவேற்றுகிறவர்களுக்கு அவரவர் அளித்த வாக்கைக் காப்பாற்றும் ஆற்றலை அளித்தருள்வீர்' என்று பிரார்த்தித்தார் ஸரோஜினிதேவியார். சுதந்திரக் குயிலின் சுதந்திரமான சுந்தரமான கவியுள்ளம் இது

எத்தகைய உண்மை இது! சிந்தித்துப் பாருங்கள், வாசக நேயர்களே! சாந்தி என்பது சவக்குழியிலா இருக்கிறது?— பூதவுடலைச் சாம்பலாக்கிய மயானத்திலா இருக்கிறது? உயர்ந்த லட்சியங்களை வைத்துக்கொண்டு இடைவிடாது மன அமைதியுடன் உழைத்துக் கொண்டிருக்கும் கர்மயோகத்தில் அல்லவா சாந்தி காணப்படுவதாகும்? அரசியல்-வேதாந்திகளும் உணர்ந்து கொள்ளாத இந்த உண்மையைக் 'கவிக்குயிலின் கவியுள்ளம் கண்டு கொண்டது! இது ஓர் அதிசயமல்லவா? இந்த உண்மையை இந்தக் கவியுள்ளத்தின் ஆழத்திலே விதைத்தவர் கர்மயோகிகளின் சிரேஷ்டரான காந்தியடிகளே யாவர்

காந்தியடிகளைப்போல் இந்த தர்மத்தையும், இதன் ஸாரமான கொள்கைகளையும் லடசியங்களையும் உணர்ந்து ஒழுகியவர் வேறு யாருமில்லை என்பது ஸரோஜினிதேவியின் தேர்ந்த அபிப்பிராயம். இந்த ஹிந்து தமக்கு உபதேசித்ததெல்லாம் ஹிந்து தர்மம் தான் என்பது ஸரோஜினிதேவியின் பூர்ண நம்பிக்கை. காந்தியடிகள் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை வற்புறுத்தியதும் உள்ளபடியே ஹிந்து தர்மத்தை வற்புறுத்தியதாகத் தான் ஸரோஜினிக்குத் தோன்றியது ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக மகாத்மா காந்தி உண்ணாவிரதம் கிடந்ததும் ஹிந்து தர்மமாகவே தோன்றியது இவருக்கு. தம்முடைய சோர்வில்லாத உழைப்பிலும், உண்ணாவிரதங்களிலும், எதிர்ப்பையும் நகைத்துச் சமாளிக்கும் மனப்பான்மையிலும் காந்தி கண்ட சாந்தி ஓர் அக்கினிஸ்தம்பம் போலத் தோன்றியது ஸரோஜினி தேவிக்கு, அகில உலகின் அரசியல் குழப்பங்களிலும் பொருளாதார இருட்டடிப்பிலும்! இதனால்தான் காந்தியடிகளின் முதன்மையான சீடர்களில் ஒருவராகிவிட்டார் இவர்.

* * * * *

சுதந்திரக் குயிலும் பறந்துபோய் விட்ட இன்று தேசம் வெளிச்சென்று இருப்பதுபோலத் தோன்றுகிறது. அன்பு தவிர வேறு ஆயுதமே தேவையில்லை நமக்கு என்று காந்தியடிகள் சொன்னபோதெல்லாம் 'ஸரோஜினி தேவியின் நாவன்மை இருக்கிறதல்லவா? இந்தப் படைகொண்டு சமாளித்துக்கொள்ளலாம். எந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தையும்!' என்று இந்தியா நம்பியிருந்தது போலவும், அந்தப் படையும் போய்விட்டதே!' என்று இப்போது ஏங்குவதுபோலவும் ஒரு பிரமை ஏற்படுகிறது எனக்கு ஆனால் இது பிரமைதான் கவிதையில் மலர்ந்து. சுதந்திர உணர்ச்சியில் கனிந்து பேசிய அந்த நாவன்மைக்கும் மௌனம் உண்டோ, சாந்தியுண்டோ? ஸரோஜினிதேவியின் கவிதை வாழ்வும் வீரவாழ்வும் தியாக வாழ்வும் ஒரு மகத்தான குரலாகிக் கீதமாகி இந்திய சரித்திரம் என்ற ரேடியோ வாயிலாக ஒலி செய்து கொண்டிருக்குமல்லவா?

இவ்விதழின் அட்டையில் தோன்றுவது கவியரசியின் படமே.

சிறு விளம்பரங்கள்

சக்தி ஆரூடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெறறேன."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-ககு அணு 8. 1 வருட பலன் ரூ 5 ஜாதகம கணிக்க ரூ 2 சக்தி கவசம ரூ 7—8—0. வி பி. பி. தனி ஜாதகம அல்லதுகடிதம் எழுதும நேரம் தேவை. N. B:—வெளி நாட்டிறகு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

"ஹிதபாஷிணீ"

ஆஸ்திகர்களின் அரிய தமிழ் மாத சஞ்சிகை.

வருட சந்தா ரூ 3. தனிப்பிரதி அணு 5.

"நமது தாய்மார்களே முடிவில் நமது கலைகளைப் பாதுகாககவேண்டியவர்க ளாகையால் நமது தமிழ்நாட்டுப் பெண் மணிகள் தங்கள் பத்திரிகையை பூர்ண மாக உபயோகித்து மிக்க பயன்பெறு வார்கள் என்று நமபுகிறேன்".

ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரி,
மே. த. கவர்னர் ஜெனரல்.

"ஆஸ்திகர்களின் ஆதரவுக்குப் பாத்திர மான பத்திரிகை." "ஹிந்து"

1835/3, மேல வீதி தஞ்சை

ஜோதிஷ வித்வான்
V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு,
தியாகராய நகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு ரூ. 2
மேல் கேள்வி ஒன்றுக்கு அணு 12.
ஜாதகம் அலலது கடிதம் எழுதும் நேரம் தேவை
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 3.
பிறந்த ஊர், தேதி. மணி தேவை
வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு பித்தம், காசம் க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக் கூடிய சிறந்த ஔஷதம். பெண் களும் அருந்தக்கூடியது பத்திய மில்லை

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெறறுக்கொள்ளலாம். விவர மான காட்லாக் இனம்

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

ஜோதி வெளியீடுகள்

எல்லாம் பாதிவிலை

•

ஸந்தியா	1—8—0
நாலு கதைகள்	1—8—0
முத்துச் சிமிக்கி	1—0—0
காதலர்	0—8—0
சிரிஷ்கா	0—8—0
செவிலித்தாய்	0-12—0
காதற்கடிதம்	2—0—0
இவர்கள்	1—8—0
நேதாஜி	3—0—0
மாப்பாஸான் கதைகள்	3—8—0
பிரியம் வதை	1—0—0
குமரி எலலே	0-10—0
தீனக்குரல்	1—8—0
ஞானதா	1—8—0
	20—6—0
பாதிவிலை	10—3—0
தபாற் செலவு	1—4—0

ரூ 11—7—0 முன்பணம் அனுப்புவோருக்கு ஒரு செட் அனுப்பி வைக்கப்படும்.

விவரங்களுக்கு:

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி — சென்னை

குடந்தையில்
V. S. R.
ஜவுளி கடை

பட்டு & நூல்

ஜவுளி தினுசுகளுக்கு சிறந்த இடம்

★

சுப்ரமண்ய விலாஸ்,
பெரிய தெரு,
கும்பகோணம்.

•

பிராஞ்சு:

ஸ்ரீ காமகோடி வஸ்திராலயம்,
பட்டமங்களத் தெரு.
மாயவரம்.

அன்பர்கள் விஜயம் செய்யக் கோருகிறோம்

ஸ்ரீ கே. எஸ். ராமமூர்த்தி சர்மா

கணித்தது.

★

சுதேசமித்திரன் வாசகர்களுக்கென பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டுள்ள இப்பஞ்சாங்கம் மார்ச்சு 12-ம் தேதியன்று வெளியிடப்படும். குறிப்பிட்ட விலைக்கே காப்பிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு நேயர்கள் கோரப்படுகின்றனர் காப்பி கிடைக்காவிடில் தயவு செய்து நமது காரியாலயத்திற்கு எழுதவும்

ஏஜண்டு மூலம் பிரதி ஒன்றுக்கு அணா 2½.
தபால் மூலம் பிரதி ஒன்றுக்கு அணா 3.



மெய்விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்காவில்

பி. ஸ்ரீ.

பெரிய புராணத்தில் நந்தனாருக்கு ஆண்டை ஒருவன் உண்டு என்ற பிரஸ்தாபமே இல்லை. ஆனால் கீர்த்தனை ஆசிரியர் நந்தனாருக்கு 'ஆண்டைப் பார்ப்பான்' ஒருவன் இருந்ததாகக் கற்பனை செய்திருக்கிறார் ஏன்?

சித்திரத்திற்குப் பகைப் புலம்

பெரிய புராண நந்தனார் ஊர்ப் புலையர்—அதாவது ஆதனூர்ப் பொது 'அடிமை'களான புலையர்களில் ஒருவர், அந்த நந்தனாரைக் கோபாலகிருஷ்ண பாரதியார் உயர்குல மிராசுதாரன் ஒருவனுக்கு அடிமையாக்குவதற்குக் காரணம் என்ன?

தமது நந்த சித்திரத்தை எடுத்துக் காட்டுவதற்குப் பகைப்புலனாகப் பாரதியார் சேரி வாசிகளை உபயோகித்துக்கொண்டதுபோல் ஆதனூர் வேதியனையும் உபயோகித்துக் கொள்கிறார் சரித்திரக் கீர்த்தனையில் காணப்படும் உயர்ந்த லட்சியம் தாழ்ந்த லட்சியம் என்ற இரு வகை லட்சியங்களிலும் உயர்ந்த லட்சியத்தை நந்தனாரின் லட்சியமாகக் காட்டும் கீர்த்தனை ஆசிரியர் தாழ்ந்த லட்சியத்தைச் சேரி வாசிகளின் லட்சியமாகக் காட்டுவதுடன் ஆண்டைப் பார்ப்பானுடைய அந்தரங்க சித்தாந்தமாகவும் காட்டுகிறார். இதை எவ்வளவு சாதுரியமாகக் காட்டுகிறார். லட்சிய முரண்பாடுகளைச் சித்திரிக்கும் இந்த மேதாவி!

42

ஆதனூர் வேதியன்

(கீர்த்தனையின் சிருஷ்டி)

★

வேதியனும் சேரி வாசிகளும்

நந்தனாருடைய பிரசாரத்தால் சேரியில் சிவபக்தி அதிகரித்தது முக்கியமாக இளைஞர்களுக்கிடையே (தடியடிப் பிரசாரமும் நந்தனார் செய்ததாக ஏன்தான் கீர்த்தனை-ஆசிரியர் சொல்லுகிறாரோ நமக்கு விளங்கவில்லை) எப்படியாவது சிதம்பரப் பைத்தியத்திலிருந்து நந்தனாரைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதும் சேரி வாசிகளில் சிலர் 'பண்ணைப் பார்ப்பான் சினங்கொண்டு விடுவான்' என்று நந்தனாரைப் பயமுறுத்தப் பார்த்தார்கள் தாம் இறைவனுக்கே அடிமை. ஆண்டைக்கு அடிமையல்ல என்று நந்தனார் சொன்னதும் சேரி வாசிகளில் சிலர் ஆதனூர் வேதியனிடம் நந்தனார்மீது குற்றப்பத்திரிகை படிக்கவேண்டுமென்று புறப்பட்டார்கள் இதில் நந்தனாரின் பக்தியனுபவம் வெகு விசித்திரமாகவும் அதி உசிதமாகவும் வருணிக்கப்படுவதால், இது குறித்த விவரங்களைப் பின்பு பார்த்துக் கொள்வோம்.

செய்திசொல்ல வந்தவர்கள் செய்தி சொல்லி முடிந்ததும்.

அடக்கி ஆளும் ஐயே !—அவனை
அடக்கி ஆளும் ஐயே !

என்று கூச்சலிட்டுத் திரும்பினார்கள். பிறகு நந்தனார் தம் 'சொந்தமான ஐயரைக்காண வந்ததும் தம் சிதம்பரச் செய்தியைச் சொல்லிவிட்டு,

'வேதமொழி விளங்கிவரும்
திருவாயால் விடைகொடுத்து
விடுவீர்'

என்றார்.

இதுகேட்ட ஆண்டை முதல்முதல் திடுக்கிட்டுப் பின்பு சுடு மூஞ்சி' காட்டி, 'உன் பக்தியை உழைப்பிலே மறந்துவிடு' என்று புத்தி சொன்னார். பிறகு

'புத்திசொல்லிக் கேளாத மூடா ! உன்தன்
புரட்டெல்லாம் நான் அறிவேன் போடா போடா ;
பக்தி யென்றும் சித்தியென்றும் பறையர்க்(கு) ஏது ?
பார்ப்பாரத் தெய்வமது பாலிக்காது!
குற்றமுண்(டு) உன் சாதியிலே வழக்கம் இல்லாக்
கொள்கையது சேரியிலே கூடா(து) அப்பா !
பித்தமது கொண்டவன்போல் இங்கே வந்து
பேசாதே போ, போ' என்றேசு வானே.

இப்படித்தான் சேரி வாசிகளும் அபிப்பிராயப்பட்டார்கள் ;

'பாப்பாரத் தெய்வமது,
பலிக்காது, பறையரைக்

காப்பாற்ற மாட்டாது,
கைவிடும்''

என்றார்.

சேரிக்கும் அக்கிரகாரத்திற்கும் ஒரே மனநிலை பார்த்தீர்களா? புரட்டைப புரட்சியென்று மயங்கும் இந்நாளிலும் கீர்த்தனை ஆசிரியரின் இந்தக் கற்பனை அதிசயம்தானே? கலைச்சுவை புதிதுதானே? தெய்வத்தைப் 'பார்ப்பாரத் தெய்வ'மாக்கிப் பேசும் மனநிலை, ஆதனூர்ச் சேரிக்கும் வேதியனுக்கும் நவீன நாஸ்திகர்களுக்கும் பொதுவுடைமைதானே?

சேரிவாசிகள் நந்தனுருக்கு ஏறுமாருகப் பதில் சொன்னார்கள். அப்படியே பதில் சொல்லுகிறான் ஆண்டையும் அக்கிரகாரக் கோடியில் நின்றுகொண்டு, ஒதுங்கி நிற்கும் நந்தனாரை நோக்கியவண்ணம்.

'அழுது முறையிட்டால்
அம்பலத்தே கேட்கும்'

என்றார். நந்தனார். சேரிவாசிகள் அந்தக் கொள்கையை மறுத்து,

'உழுது பயிரிட்டால்
உள்ளபடி விளையும்'

என்றார்.

அப்படியே ஆண்டையை நோக்கி நந்தனார்.

கள்ளம் போனால்
உள்ளது காணும்

என்று தம் கொள்கையைச் சொன்னதும்,

வெள்ளம் போனால்
உள்ளது விளையும்

என்கிறான் ஆண்டை' (இந்த மன நிலையை இன்றும் காணலாம்.) சேரி வாசிகளைப் போலவே ஆண்டையும் நந்தனாரைப் 'புத்தியில்லாதவன்' என்றும் பித்தமுள்ளவன் என்றும் 'குல வழக்கம் அறியாத குருடன்' என்றும் ஏசுகிறான்.

'தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு விமோசனம் இல்லை' என்று கருதியதுபோல் சேரிவாசிகள்,

'குறையாத புலைத்தன்மை
கொண்டோமே!'

என்றார்.

அதற்கு நந்தனார்,

'பறையராய்ப் பிறந்தாலும்
பரகதி தேடலாம்;
உறுதிமாத்திரம் வேண்டும்
உமக்குண்டோ?'

என்றார்.

மேலும் பரமசிவம் எல்லாருக்கும் வேற்றுமை பாராது அருள் செய்யும் என்றார்:

'பார்ப்பார் பறையர் என்று
பாராது பரிதிபோல்
காப்பாற்றும் அல்லவோ
கண்ணுதலே?'

என்றார்

'சாதியிலே எளியவன் நீ அறிவாயோ?' என்று ஆண்டை கேட்டதற்கும் நந்தனார்,

'ஆதியிலே பேதம் இலை
அறியீரோ?'

என்றார்.

ஆண்டையின்
குணதிசயம்

சேரிவாசிகளுக்கு நந்தனாரிடத்தில் எவ்வளவோ அபிமானமும் உண்டு 'நந்தனார் நம் சொந்தக்காரர்' என்றுதானே எண்ணம்? ஆதனூர் வேதியனும் நந்தனாரைத் தன் சொந்த ஆளாகவே மதித்து,

கதிர் ஒரு முழமே நீளும்,
கட்டுமுக் கலமே காணும்;
துதிபெறு நந்தா! உன்கை
தொட்டதே தங்கம் ஆகும்!

என்று பாராட்டுகிறான். ஐயோ சிதம்பரப் பித்தம் தெளியவில்லையே என்ன செய்யப்போகிறேன்?' என்று அனுதாபப்படுகிறான்.

இந்த அனுதாபத்திலே சுயநலம் இல்லையென்று சொல்லமுடியாது.

நாற்பது வேலிபூமி
நடவுநட் டாகவில்லை



என்ற கவலையும் கலந்து தானிருக்கிறது.

பார்ப்பதும்
இல்லை;
சைவப்
பழமது தின்றாய்! பண்ணை
காப்பதும் இல்லை; உன்னைக்
கைவிட மனமும் இல்லை

என்றெல்லாம் புகழப்படுகிறான். இதற்குத் தான் நந்தனார்,



பஸிபிக் கடல், ஸிவில் நிர்வாகத்தார் வடக்கு மரியனு தீவுகளிலுள்ள டினியன் என்ற தீவில் படத்தில் காணப்படுவது போன்ற சிறு விடுதிகளை வரிசை வரிசையாகக் கட்டி குஷ்டரோகிகளின் க்ஷேமத்துக்காக ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

பித்தம் தெளிய
மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே!

என்று பதில் சொல்லுகிறார்.

ஆண்டை லேசில் அனுமதி கொடுக்கவில்லை. நந்தனாரோ,

மார்கழிமாதத் திருவாதிரை நாள்
வரப் போகிறது ஐயே!

என்று மன்றாடி உத்தரவு கேட்கிறார். ஆண்டையோ 'உனக்கும் மார்கழித் திருநாளோ?' என்று முரட்டுத்தனமாய் மறுத்து விடுகிறான். அதற்குப் பதில் சொல்லும் நந்தனாரை நோக்கி 'முரட்டுத்தனமாய்ப் பேசாதே' என்று எச்சரிக்கை செய்கிறான் இந்தக் காட்சியைத் தான் கீர்த்தனை ஆசிரியர் எவ்வளவு உருக்கமாய்ச் சித்திரித்துக்கொண்டு போகிறார்! 'தேள் போலே கொட்டி' ஆண்டையும் ஒரு 'ஆள் போலே நின்றா'னும் 'நாள் போகுதே!' என்று உருகினாராம் நந்தனார். இங்கே சப்த ஜாலங்கள் வெறும் பிராஸங்களா? — உணர்ச்சிக் களஞ்சியமல்லவா?

அற்புத பக்தியும் நாஸ்திக உள்ளமும்

ஆண்டை மனம் இரங்க ஓர் அற்புதமே நடைபெறவேண்டியிருக்கிறது நடேசமூர்த்தி நந்தனார் கனவில் தோன்றி 'நம்முடைய நந்தனாரே! உம்முடைய கழனிகளை (ஆண்டையின் வயல்களைத் தான் நடேசர் இப்படித் தம்முடைய அடியாருக்குச் சொந்தமாக்கிவிட்டார்!) நம்முடைய பூதகணங்களாலே நடச் சொன்னோம் வேதியனுக்குக் காட்டினால் உத்தாரம் கொடுப்பான் என்று சொல்லித் தம் அம்பலத்தே போய்விட்டாராம்.

விழித்துக்கொண்ட நந்தனார் காலைக் கதிரொளியில் வயல் வளம் காண்கின்றார்.

களையெடாமல், ஜலம் விடாமல்,
கதிர் ஒரு முழம் காணுமாம்;
களிக்குது பயிர் இருக்குது அதைக்
கட்டு கட்டவே தோணுமாம்.

பிறகு வேதியரிடம் போய்த் தங்கள் நிலத்தைப் பார்க்க வரவேணும் என்று அழைக்கிறார். ஆனால் அந்த நிலத்தைத் தான் நந்தனாருக்குச் சொந்தமாக்கிவிட்டாரே நடேசமூர்த்தி!

பரமசிவனைப் பணியும் நந்தன்
பயிரிடும் திருப் பண்ணையாம்

என்கிறார் கீர்த்தனை ஆசிரியர். அற்புதம் விளைந்த பண்ணை—பக்தி விளைந்த பண்ணை— வேதியனையும் திருத்தப்போகும் பண்ணையல்லவா?

அந்தப் பண்ணை வயல்களைப்பார்த்ததும் ஆதனூர் மிராசுதார் அடையும் அதிசய மன நிலை வெளிப்படுவதற்கு முன், அதாவது ஒரு பலகைப்புலனாக ஆதனூர் வேதியனின் அந்தரங்க லௌகிக சித்தாந்தம்—நாஸ்திகமும் ஜடமாயாவாதமும் அருமையாய்க் கலந்து சமைந்த ஒரு சித்தாந்தம்—வேதியன் வாயிலாகவே வெளிப்படுகிறது!

வேதமொழி விளங்கிவரும்
திருவாயால்

என்று நந்தனார் சொன்னாரே, அதே திருவாயால் வெளிவரும் அந்த நாஸ்திகத் திருமொழிகள், நவீன நாஸ்திகர்களும் திடுக்கிடுமாறு, நவீன கலா ரஸிகர்களும் பிரமிக்குமாறு, அமைந்திருக்கின்றன. இந்தக் கட்டம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் ஓர் அதிசயமான கலாசிருஷ்டி 'களையெடாமல் ஜலம் விடாமல்' வளர்ந்த கதிர்களைக் காட்டிலும் அதிசயமானவை, இந்தக் கலைவளம் நிறைந்த நாஸ்திகக் கதிர்கள் பூத கணங்கள் பயிரிட்ட கதிர்வளம் கண்ணுற்ற ஆதனூர்-ஆண்டை போல் நாமும், அந்த ஆண்டை இதயத்திலே சொந்தமாக வளர்த்திருந்த பயிர் வளத்தை அடுத்த வாரம் காண்போம்.

அன்புள்ள கீதாவுக்கு!

9

போலீஸ் வண்டியிலிருந்து ஒரு ஸப் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் கீழே இறங்கினார்கள். மாமனார் நடுநடுங்கிவிட்டார்.

மகா மானி பாவம்! 'தப்பு, தண்டா' ஒரு ஜோலிக்குப் போக மாட்டார் அந்தப் பிராந்தியத்தில் வெகு நாளாகவே தங்கள் குடும்பத்துக்கு நல்லபேர் என்றும் அதைப் பற்றி அடிக்கடி பெருமை பட்டுக் கொள்வதிலும் அவருக்கு அலாதியான ஓர் ஆனந்தம் உண்டு. தங்கள் குடும்பத்தின் பெருமையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டால் பொழுது போகிறதே தெரியாது அவருக்கு.

'இந்தக் காலத்தில் ஜனங்கள் எடுத்ததற்கெல்லாம் கோர்ட்டு கோர்ட்டு என்று போய் நிற்கிறதுகளே. நம்ம குடும்பத்தில் இத்தனை தலைமுறையில் யாராவது ஒருவராவது கோர்ட்டு வழி போனதுண்டா தெரியுமா? மனதில் ஏதாவது திருட்டு எண்ணம் இருந்தால் தானே அதைப் பற்றி யோசிக்க வேண்டும்? இந்த கைக்கு அந்த கை ஆயிரம் ஆயிரமாகமாறிக்கொண்டிருக்கும். ஒரு பாண்டா பத்திரமாவது பேசக்கூடுமா? மனுஷ்யன் ஏதாவது அவசரம் என்று வந்து பணம் கேட்டால் அவசரத்துக்குத் தகுந்தமாதிரி வட்டி விகிதத்தை உயர்த்திவிட்டு, பொய் தஸ்தாவேஜுகள் சிருஷ்டிக்கிறார்களே, இதெல்லாம் அவர்களுக்குத் தெரியவே தெரியாது. அவசரமான சமயங்களில் மனிதர்களுக்கு உதவி செய்வதில்தான் அவர்களுக்கு ஆசை அதிகம். அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் வட்டியே வாங்க மாட்டார்கள். பாண்டு, பத்திரம் ஒன்றும் எழுதிவாங்க மாட்டார்கள். அதற்குத் தகுந்த மாதிரி கடன் வாங்கியவர்களும் தங்கள் வார்த்தையைக் காப்பாற்றிக்கொள்வார்கள். அதையும் சொல்லவேண்டுமோலியோ!

அவ்வளவென்ன! நாம் ஒன்று சொன்னால் பதிலுக்கு ஒன்பது சொல்லிவிட்டு நம வார்த்தையை லட்சியம் செய்யாமல் பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வித்யாசமில்லாமல் மனம்போன போக்கில் திரிந்து கொண்டிருக்கிறதுகளே. இந்தக் காலத்துப் பசங்கள் நாங்கள் சிறியவர்களாக இருந்த பொழுது இப்படியெல்லாம் கனவில் கூட நினைத்திருக்கமுடியுமா? தெருக் கோடியில் அப்பா வருகிறார் என்றாலே கப்சிப் என்று ஒடுங்கிவிடுவோம. பெரியவர்களை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்ல மாட்டோம்.



"..............கண்ணனை எதற்கு தேடுகிறார்களாம்?.............."

காலையில் எழுந்தவுடனே ஸ்நானம் சந்தி, சாவித்திரி ஒன்று குறைய மாட்டோம். ஊரிலிருந்து யாராவது வந்தால், வந்தவுடனே, உனக்கு உபநயனம் ஆகிவிட்டதா? 'இமம் மே வருண...' (சந்தியாவந்தன மந்திரம்) சொல் பார்க்கலாம என்று தான், கேட்பார்கள். ஒரு எழுத்து ஸ்வரம் தவறாமல்

ஒப்பிப்போம். அஸ்தமித்ததும் விளக்கு வைத்தவுடனே சகஸ்ர நாமம சொல்வோம் இந்தக் காலத்துப் பசங்களைக் கேட்டுப் பாருங்கள். சந்தியாவது, சாவித்திரியாவது, வீண் காலப் போககு என்றுதான் சொல்லுங்கள் வீணிற்காவது அதற்குச் செலவு செய்யும் நேரத்தில் வேறு ஏதாவது வாழ்க்கைக்குப் பயன் தரக்கூடிய வேலையைச் செய்தாலும் உபயயோகமுண்டு என்று நமக்கு உபதேசமும் செய்ய வந்துவிடுங்கள்.

அந்த நேரத்தைக்கூட வீணிற்குச் செலவு செய்யாமல் என்ன தான் வாழ்க்கைக்கு உபயோகப் படும்படியான காரியங்களைச் செய்கிறதுகளோ? நூற்றுக்குப் பத்தும் எட்டுமாக மார்க்குகள். இரண்டு வருஷங்களுக்குக குறைந்து ஒரு வகுப்பை விட்டு

நகருவது கிடையாது இந்த லட்சணத்துக்கு தமிழுக்கோ, ஸம்ஸ்கிருதத்துக்கோ ஒரு டியூஷன் வாத்தியார். இங்கிலீஷுக்கு ஒரு டியூஷன் வாத்தியார்! நேரத்தை வீணாக்கிய நாங்கள் முதல் வகுப்பிலிருந்து பி. ஏ.வரையில் ஒரு வகுப்பிலாவது மட்டம் போட்டது கிடையாது நூற்றுக்கு எழுபத்தைந்து. எண்பதுக்குக் குறைந்து மார்க்குகள் வாங்கியது கிடையாது ஒவ்வொரு வகுப்பிலும் பரிசுகள் வேறு. ட்யூஷன் வாத்தியார் என்ற பேச்சு உண்டா, தெரியுமா?

'கணக்கில் ஏதோ மார்க்கு குறைந்திருக்கிறதே ஒரு இரண்டு மாதத்துக்கு வேண்டுமானால் ஒரு டியூஷன் வாத்தியாரை அமர்த்தட்டுமா?' என்பார் அப்பா. அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் அப்பா கவனித்துப் படிக்கிறேன் டியூஷன் வாத்தியாருக்குக் கொடுக்கிற ரூபாயை என்னிடம் கொடுங்கள் ஒரு டிக்ஷனரி வாங்கிக் கொள்கிறேன்' என்பேன் அப்படியெல்லாம் படித்தோம் நாங்கள். இதுகளுக்கு எந்த வகையில் நாங்கள் குறைந்துவிட்டோம்? ஆனால் எங்களைப் பழைய மடிஸஞ்சிகள் பத்தாம் பசலிகள் என்று பரிகாசம் செய்கிறதுகள். பழைய மடிஸஞ்சியோ, பத்தாம் பசலியோ எந்தப் பெயரில் வேண்டுமானாலும் அழைக்கட்டும். ஏதோமுன்னோர்கள் காட்டிய வழியில் கண்ணை மூடிக்கொண்டு நிர்ப்பயமாய்ச் சென்றோம அது எங்களை சரியான இடத்தில் கொண்டுவிட்டது அந்த வழியெல்லாம் தப்பு என்று புதிய வழியில் சொல்லுகிறதுகள். வழி எங்கே கொண்டுவிடும் என்று தெரியாமலே காட்டில் கண்ணைக் கட்டிவிட்டமாதிரி போய்க்கொண்டிருக்கிறதுகள். போகட்டும், போகட்டும் கல்லும் முள்ளும் குத்தினால் தானாக பழைய தேய்ந்த வழிக்கு வந்து சேருகிறதுகள்!

என்ன முன்னேற்றமோ? நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது, பொய், பித்தலாட்டம், புனை சுருட்டு, ஏமாற்றுதலாகத்தான் இருக்கிறது.

இதெல்லாம் ஒருவர் மேலும் குறை சொல்லிப் பலன் இல்லை நாசகாலம் கிட்டிவிட்டது அகற்குத்தகுந்தமாதிரி மனுஷ்யனுடைய புத்தியும், வேலை செய்து கொண்டிருககிறது என்று அடிக்கடி அந்த காலத்தையும், இந்த காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து கஷ்டப்பட்டுககொள்வார்

எதையோ சொல்ல வந்தவள் அதை விட்டுவிட்டு எதற்காக இதையெல்லாம சொல்லிக் கொண்டிருக்கிறாள் என்கிறாயா?

மாமனார் மகா மானி பாவம். பெரிய மைத்துனர் ஏற்கெனவே கண்ணன் இருக்கிறானே இங்கே? அவனைப்பற்றி வெளியில் காது கொடுத்துக் கேட்கமுடியவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதே சமயத்தில் தெருவில் போலீஸ் வண்டி வந்து நின்று அதிலிருந்து ஒரு ஸப் இன்ஸ்பெக்டரும. இரண்டு கான்ஸ்டபில்களும் இறங்கிவிட்டார்களா? மாமனார் பாடு கிடுகிடாய்த்து விட்டது.

ஏற்கனவே கண்ணனைப்பற்றி உனககு எழுதியிருக்கிறேன். வீட்டில் சொன்ன பேசசைக் கேட்பது கிடையாது. வேளா வேளையில் வந்து சாப்பிடுவது கிடையாது. வீட்டில் ஒரு நிமிஷம்கூடத் தங்குவது கிடையாது. அரட்டைப் பசங்களுடன் சிநேகம். நம் குலத்துக்கு இப்படிக் கோடாரிக்காம்பாய் வந்து பிறந்ததே என்று மாமனாருக்கு ரொம்ப குறை சரி! கண்ணன் என்னவோ செய்துவிட்டான் நம் குடும்பத்தை நடுச்சந்தியில் இழுத்து விட்டுவிட்டான். இத்தனை நாட்கள் கௌரவமாய் வாழ்ந்த வாழ்வெல்லாம் வீணாகப் போய்விட்டதே' என்றார் மாமனார்.

வேறு யாரும் ஒன்றும் பேச வில்லை. ஒன்றும் தோன்றாமல் அசைவற்று நின்றுகொண்டிருந் தோம்.

ஸப் இன்ஸ்பெக்டர் எங்கள் அருகில் வந்தார்.

'கோபாலன் இருக்கிறானே இங்கே?' என்று கேட்டார்.

'எந்த கோபாலன்?' என்றார் இவர்.

'பக்கத்துத்தெரு கிருஷ்ண அய்யங்கார் பிள்ளை, கோபாலன்.'

'அவனா? இங்கே இல்லையே.'

'இன்று இங்கே எப்பொழுது வந்தான் அவன்?.

'இன்று இங்கே வரவே இல்லையே'

'எங்காவது போகப்போவதாய்ச் சொல்லிக்கொண்டிருந்தானா தெரியுமா?'

'தெரியாதே!

'ஸரி! அந்த 'குட்டியின்' வீட்டுககுத்தான் போய் பார்க்கவேண்டும்?' என்று கிளம்பினார் ஸப் இன்ஸ்பெக்டர்.

'ஏன்? என்ன விசேஷம்?' என்றார் மாமனார்.

'ஒன்றுமில்லை. சும்மா பார்க்க வேண்டும். அதற்காக வந்தேன்' என்று சொல்லிக்கொண்டே கிளமபினார் சப் இன்ஸ்பெக்டர்.

'தகவல் எட்டியிருககும். அதனால்தான் பேர்வழி எங்கோ தலை மறைந்து விட்டான்' என்று சொல்லிககொண்டே போனான் கூட வந்த கான்ஸடபில்.

'தலை மறைந்துவிட்டால் யார் விடப் போகிறார்கள் அவனை? அதெல்லாம் ஒன்றும் நடக்காது.' எனறு சொல்லிக்கொண்டே போய் ஸப்இன்ஸ்பெக்டர் வானில் ஏறினார். கான்ஸ்டபில்களும் ஏறிக்கொண்டார்கள் 'ஓட்டு......க்கு' என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

போலீஸ் வானும் சென்றது

''அம்மாடி என்று தாராளமாக மூச்சு விட்டார் மாமனார்.

'நிஜமாகவே கண்ணனைத் தேடிக்கொண்டுதான் வந்திருக்கிறார்கள் என்று நடு நடுங்கிவிட்டேன்' என்றார் மாமியார்.

'சே! இருந்தால்கூட கண்ணன் அவ்வளவு தூரத்துக்கு வைத்துக் கொள்ளமாட்டான்' என்றாள் அத்தை.

'கோபாலனை எதற்காகத் தேடுகிறார்கள்? அவன் என்ன செய்து விட்டான்?' என்றார் மாமனார்.

ஆமாம்! ஆமாம்! சொல்ல மறந்துவிட்டேனே. அவன் மீது ஏதோ அரஸ்டு வாரண்டாம். வழியில் வரும்போது கேள்விப்பட்டேன். அவனுடைய வீட்டுக்குத் தகவல் தெரிந்து அவர்கள் அவனுக்கு எச்சரிக்கை செய்வதற்காக அவனைத் தேடிக்கொண்டிருக்கிறார்களாம்,' என்றார் பெரிய மைத்துனர்.

'ஓகோ! அதான் போலிருக்கிறது. அவர்கள் வீட்டு டிரைவர் குமாரசாமிகூட, இங்கே வந்து தேட்டுவிட்டுப் போனானே' என றாள் அத்தை.

ஏற்கெனவே யாராவது அவனை இங்கே வந்து தேடினார்களா என்ன? என்றார் மாமனா.

'ஆமாம் கோபாலன் வீட்டு டிரைவர் வந்து தேடி விட்டுப் போனான்' என்றாள் அத்தை.

''இந்த மாதிரியான பசங்களை வீட்டில் வரவழைப்பதே தப்பு. தாங்கள் அகப்பட்டுக் கொள்வதில்லாமல் நம்மையும் ஏதாவது தப்பு தண்டாவில் மாட்டி வைத்து விடுங்கள் அதற்காகத்தானே அவ்வப்பொழுது நான் எச்சரிக்கை செய்து கொண்டிருப்பது. நீங்கள் நினைக்கிறீர்கள், 'கிழம் அப்படித்தான் எதையாவது முணுமுணுத்துக்கொண்டிருக்கும்' என்று இப்பொழுது தெரிகிறது பாருங்கள் அந்த முணுமுணுப்பு எதற்காகவென்று என்றார் மாமனார்.

'யார் அவனை இங்கே வரவழைப்பது எல்லாம் வஸந்தாவினால்தான்' என்றாள் பெரிய நாத்தனார்.

'போதும், கொஞ்சம் வாயை மூடிக்கொள்ளு. போலீஸாருககுத் தெரியாவிட்டால் நீயாவது கொஞ்சம் போய் சொல்லிக் கொடுத்து விட்டு வா' என்றாள் அத்தை.

மற்றவை அடுத்த கடிதத்தில்'

உன் அன்புள்ள,

ரமா.



(மேல் படம்)

தலை மயிரில் சொருகியிருந்த ஊசியை இந்தக் குழந்தை விளையாட்டாக வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி விட்டது. அது உடலுக்குள் போய் எக்கச்சக்கமாகச சிக்கிக்கொண்டு விட்டது. இதை எப்படி எடுப்பது என்பதுபற்றி மாரிஸ் டவுன் ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள் கவலைப்படுகின்றனராம். குழந்தைக்கோ வயது இரண்டு! பார்பாரா என்ற இக்குழந்தையின் முகத்திலும் கவலையின் ரேகை தென்படுகிறது. பக்கத்தில் விழுங்கிய கொண்டை ஊசியைப் பாருங்கள்.

(கீழ் படம்)

ஸின்கிளேர் (யு. எஸ்.) என்ற ஊரில் சமீபத்தில் சகிக்க முடியாதபடி பனி பெய்தது. இருப்பினும் கால் நடைகள் தங்கள் வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொண்டுதான் வந்தன. படத்தில் காணப்படும் மிருகம் தலையெல்லாம் பனியால் மூடப்பட்டபோதிலும் வைக்கோலை மறக்கவில்லை. அது வழக்கம்போல அசைபோட்டவண்ணம் நிற்பதைப் பாருங்கள்!



தேர்த்தட்டு வார்த்தை

'குகசரன்'

வாரன்

நோயாளி ஒருவன் பலரிடம்போய் வைத்தியம் செய்துகொண்டான் ஒரு வைத்தியர் உள்ளுக்கு மருந்துகள் கொடுத்தார் ஒருவர் பல ஊசிகள் போட்டுப் பார்த்தார். மற்றொரு வைத்தியர் நவரக்கிளி முறை சிகிச்சையைச் செய்து பார்த்தார். நோய் எதிலும் குணமாகவில்லை. பல பிரபல வைத்தியர்களாலும் குணப்படுத்த முடியாது போனதால் நோயாளி தனக்கு வந்தது மிகப் பெரிய நோயாக விருக்க வேண்டுமென்று நினைத்து ஏங்க ஆரம்பித்தன் அப்பொழுது கொடிய நோய்களை எல்லாம் விசித்திரமான முறையில் வெகு துரிதமாகக் குணப்படுத்தி வந்த ஒரு பிரபல சந்நியாசியைச் சந்தித்தான். அவரிடம் தன் நோயைத் தெரிவித்த போது சந்நியாசி ஒரு பஸ்பத்தை பொட்டலங்களாக மடித்துக் கொடுத்து வெந்நீரில் கலந்து சாப்பிடச்சொன்னர் நோயாளி பொட்டலத்தைப் பிரித்து மோந்து பார்த்தான் "சீ! எங்க வீட்டுக் கொல்லையிலிருக்கும் வேப்பம் பட்டைத் தூள். இதையா பெரிய மருந்து என்று கொடுத்துவிட்டார் சந்நியாசி" என்று அலட்சியமாகச் சொல்லிச் சாப்பிடாமல் வைத்து விட்டான்.

இதே வித மனோபாவம் தான் உலகில் பலருக்கு இருக்கிறது. பிரசங்கம் மிகத் தெளிவாக விளங்கி விட்டால் 'பிரமாத விஷயமாயிருக்கும் என்று நினைத்தேன் சீ! இவ்வளவுதானு! எனக்குக்கூடப் புரிகிறதே' என்று அலட்சியமாகப் பேசுவது தானே கேட்போரின் இயல்பு. பலரால் மிகப் பிரமாதமாக எண்ணப்படும் யோகத்தைக் கண்ணன் வெகு சுருக்கமாகவும் தெளிவாகவும் அர்ஜுனனுக்குச் சொல்லிவிட்டார் "சித்தியை அடைந்தாலும் அடையாவிட்டாலும் அதில் சமபாவனையோடிருப்பது யோகம்" என்று யோக லட்சணம் சூத்திரம் போல் சுருக்கமாக விருப்பதோடு எவரும் அறிந்து கொள்ளும்படி மிகத் தெளிவாகவும் இருந்தால் 'யோகம் என்பது இதுதானு? இவ்வளவுதானு? இதனுல் என்ன பயன் ஏற்படப்போகிறது?" என்று அலட்சிய பாவம் அர்ஜுனனுக்கு ஏற்படலாமல்லவா? அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு யோகத்தால் உண்டாகும் நன்மைகளையும் அதன் சிறப்பையும் பற்றிக் கண்ணன் அடுத்தபடியாகச் சொல்லுகிறுர்.

17

யோகத்தில் ஆத்ம ஞானமும் பெறலாம்

★

இந்நிலையில் புத்தியுடன்
ஏய்ந்தார் இருமைவினை
தந்நிலையை இங்கே
தவிர்வர்காண்—நன்னிலையான்
மெய்கருதி யோகத்து
மேவுதிநீ யோகங்காண்
செய்கருமத் தாகும் சிறப்பு.

(இ-ள்) இந்நிலையில் (சம புத்தியோடு கூடி) இந்த விதத்தில் புத்தி உடன் ஏய்ந்தார்-புத்தியோடு கூடியவர், இருமை வினை தன் நிலையை-புண்ணியம் பாவம் இரண்டையும், இங்கே-இப்பிறப்பிலேயே (இவ்வுலகத்திலேயே), தவிர்வர் காண்-துறந்து விடுவார் என்று தெரிந்துகொள், நல் நிலையான் மெய் கருதி-(ஆகையால்) சரியான முறையில் தத்துவத்தை எண்ணி, நீ யோகத்து மேவுதி-நீ யோகத்தில் பொருந்து. யோகம்-யோகம் என்பது செய் கருமத்து ஆகும் சிறப்பு - செய்யப்படும் கருமங்களிலுள்ள சாமர்த்தியம் என்று. காண்—தெரிந்துகொள்.

3 3 4 4
புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே
3
ஸுக்ருத துஷ்க்ருதே
3
தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ
3
யோக: கர்மஸு கௌசலம்.

(இ-ள்) புத்தி யுக்த:—புத்தியுடன் கூடியவன் இஹ—இப்பிறப்பில் ஸுக்ருத துஷ்க்ருதே உபே—புண்ணியம் பாபம் இரண்டையும், ஜஹாதி—விடுகிறுன் தஸ்மாத்—ஆகையால். யோகாய—(முன் சொல்லப்பட்ட சமபுத்தி) யோகத்துக்காக யுஜ்யஸ்வ—முயற்சிபண்ணு யோக:-யோகம் என்பது கர்மஸு— கருமங்களில் (கொள்ளப்படும்). கௌசலம்—ஸாமர்த்தியம் (ஆகும்)

உலகில் தொன்று தொட்டுப் பல மதங்களும் சித்தாந்தங்களும் இருந்து வருகின்றன, அவையாவும் மோட்சநிலையை வெவ்வேறுவகையாகப் பேசியபோதிலும் உயிர்களுக்கு அந்நிலையில் பூரண விடுதலை உண்டென்பதை ஒப்புக்கொள்ளவே

செய்கின்றன. அவ்விடுதலைக்கு மாறான நிலை பந்தம் (கட்டு) பந்தத்தைச் செய்தவை மேலும் மேலும் செய்து தருபவை புண்ணிய பாபங்கள். அல்பகாலமிருக்கும் சுகமாகிய பலனை அனுபவிப்பதற்காகப் புண்ணியம் பிறவிப் பந்தத்தைத்தரும் அவ்வாறே துக்கமாகிய பலனை அனுபவிக்கப் பாபமும் பிறவியைத்தரும் சுகத்தைப் பலர் விரும்புகிறார்கள். துக்கத்தை வெறுக்கிறார்கள். ஆனால் இரண்டிற்கும் முறையே காரணமான புண்ணிய பாபங்கள் ஒரே விதமாகப் பந்தத்தையே செய்கின்றன. அதனால் ஞானிகள் புண்ணிய பாபங்கள் இரண்டையும் உயிரைக் கட்டும் விலங்குகளாகவே மதிக்கிறார்கள் புண்ணியத்தைப் பொன் விலங்கு என்று சொல்லலாம் பாபத்தை இரும்புவிலங்கு என்று சொல்லலாம். தோற்றமாகிற நிறத்தில் வேறுபட்டு, கட்டும் தொழிலில் ஒரேவிதமாயிருக்கிற இரு விலங்குகளை போன்று இரு வினைகளும் இருக்கின்றன.

செய்யும் கருமத்தால் புண்ணியமோ பாபமோ உயிருக்கு வந்தே தீரும். எது வந்தாலும் பந்தமாகிற பிறவி திரும்பத்திரும்ப உண்டாகும். எனவே பந்தத்திற்குக் காரணமான புண்ணிய பாவங்களைப் போல் கொடிது வேறெதுவுமில்லை. முக்தியாகிய (விடுதலையாகிய) பேரின்பத்தைப்பெற அவற்றை விலக்கவேண்டியது மிக அவசியமாகிறது. அவை விலகினால் அன்றி அழியாத பலனாகிற முக்தி விடுதலை மோட்சம் அல்லது பந்த நிவர்த்தி உயிருக்கு உண்டாகாது. இந்த யோக ஸாதனத்தால் பந்தத்திறகுக் காரணமான இரு வினைகளையும் விலக்கிவிடலாம் என்றால் பலன் தருவதில் இதைப் போல் சிறந்தது ஒன்று உண்டோ? என்று அர்ஜுனனைக் கேள்வி கேட்டுப் பெருமையைத் தெரிவிப்பது போலவே அமைந்திருக்கிறது

சுலோகத்திலும் பாட்டிலும் 'கருமங்களிலுள்ள சாமர்த்தியம்யோகம்' என்று சொல்லப்படுகிறது இதில் 'சாமர்த்தியம்' (கௌசலம்) என்பதற்கு ஒரு உரை ஆசிரியர் அழகாக வியாக்கியானம் எழுதுகிறார் "பந்தத்தைச் செய்வது கருமங்களின் சுபாவமாயிருக்கிறது அவற்றைச் செய்தே ஆகவேண்டிய ஜீவாத்மாக்கள் பந்தத்திற்காளாகாதிருக்க வேண்டுமானால் கருமங்களைச் செய்யுப்போது பலனில் இச்சையில்லாமல் செய்யவேண்டும் ஈசுவரார்ப்பண புத்தியோடும் செய்யவேண்டும் அவ்வாறு செய்து கருமங்களை மோட்சத்திற்குச் சாதனம் ஆக்கிக் கொள்வதே சாமர்த்தியம் ஆகும்'' யோகத்தால் உண்டாகும் மற்றொரு நன்மையை அடுத்தபடியாகச் சொல்கிறார்.

எவ்வளவில் நின்மோகத்திற்
கிலக்கமாம் இதனை
இவ்வகையே புந்தி எழக்கடக்கும்-
அவ்வளவில்
கேதம் மருவுதிநீ கேட்டதிலும்
கேட்பதிலும்
மேதம் மிகும்பயனும் என்று.

(இ-ள்) எவ்வளவில்—எப்பொழுது. நின் மோகத்திற்கு இலக்கமாம் இதனை-உன்னை மோகமாகிய பாவத்திற்கு உள்ளாக்கும் இவ்வாசையை இவகையே புந்தி எழக்கடக்கும்—இந்த யோகமுறையால் அறிவு தாண்டுமோ, அவ்வளவில்—அப்பொழுது, நீ—, கேட்டதிலும் கேட்பதிலும்—இதுவரை கேட்டும் இனிமேலும் கேட்கப்போவதாயிருக்கிற உலக விஷயங்களில், மேதம் மிகும் பயனும் என்று—துன்பத்தைப் பெருக்கும் பலனே (அவற்றால்வரும்) என்று உணர்ந்து, கேதம் மருவுதி—(அவற்றில் நீ) வைராக்கியத்தை அடைவாய்.

3
யதாதே மோஹ கலிலம்
3 3 4
புத்தி: வ்யதி தரிஷ்யதி
3 3 3
ததா கந்தாஸி நிர்வேதம்
ச்ரோதவ்யஸ்ய ச்ருதஸ்யச

(இ-ள்) யதா—எப்பொழுது தே-உனக்கு புத்தி:—புத்தியானது மோஹகலிலம்—மோஹம் என்னும் தோஷத்தை. வ்யதிதரிஷ்யதி—தாண்டுகிறதோ. ததா—அப்பொழுது. ச்ருதஸ்ய—(உலக விஷயமாக) கேட்டதிலும், ச்ரோதஸ்யச—கேட்கப் போகிறதிலும், நிர்வேதம்—வைராக்கியத்தை கந்தாஸி-அடைவாய்.

இந்திரியங்கள் யாவும் புறப பொருள்களையே கண்டும். கேட்டும் தொட்டும், நுகர்ந்தும். சுவைத்தும் சுலபமாய் உணரக்கூடிய வகையில் அமைந்திருப்பதால் மனத்தைப் புற (உலக) விஷயங்களிலே இழுக்கின்றன அவற்றில் ஆசையையும் உண்டாக்கிவிடுகின்றன அவ்வாசையின் பலன் துக்கமாகவே முடிகிறது அத்துக்கத்தைத் தவிர்வதற்கு மனம் ஆசையை விடவேண்டும் ஆசை நீங்கப் புற விஷயங்களில் வைராக்யம் பிறக்கவேண்டும். அகப்பொருளை (தன்னை)க காணமாட்டாமல் புறப பொருளையே கண்டு உணர்பவனுக்கு வைராக்கியம் தோன்றுவது மிக அரிதான காரியமாகும். பெற அரிதான வைராக்கியத்தையும் காரியசித்தி அடைந்தாலும் அடையாவிட்டாலும் சமமாயிருந்து கருமங்களைச்செய்யும் யோகத்தால் அடையலாம் என்று மற்றுமோர் நன்மை இதனால் சொல்லப்பட்டது. யோகத்தால் வரும் பிறிதோர் நன்மையை மேலும் சொல்லுகிறார்.

ஓதுமென்பால் கேள்வி உற்றமைந்த
புந்தி உயிர்
மீது சமாதிக்கண் மிகச்
சலியாப்—போதில்நீ
அந்தி யோகத்து உணர்வை
மன்உறுதி ஆங்கதுகாண்
புந்தி யோகத்தின் புணர்ப்பு.

(இ-ள்) ஓதும் என்பால்—பலவற்றைச் சொல்லும் என்னிடம், கேள்வி உற்று அமைந்த புத்தி—கேட்பதனால் தெளிவு பெற்ற உன் புத்தி உயிர்மீது சமாதிக்கண் மிகச் சலியாப் போதில்—ஆத்மாவிடத்தில் நிலைபெற்று சிறிதும் சலனமற்ற நிலையில் அந்தி யோகத்து உணர்வை உறுதி—முடிவான ஆத்ம யோக ஞானத்தை அடைவாய் புந்தி யோகத்தின் புணர்ப்பு—(என்றால் இது வரை சொல்லப்பட்ட)சாங்கியயோகத்தின் பயன் அதுகாண்—அதுவென்று தெரிந்துகொள்.

3
ச்ருதி விப்ரதி பந்நாதே யதா
2
ஸ்தாஸ்யதி நிச்சலா
4 3 3 4
ஸமாதா வசலா புத்தி:
3 3
ததா யோகம் அவாப்ஸ்யஸி

(இ-ள்) ச்ருதி விப்ரதி பந்நா—(என்னிடத்தில்) கேட்பதனால் மிகவும் தெளிவுற்றதாய், அசலா—ஏகரூபமாயிருக்கின்ற தே புத்தி:—உன் புத்தியானது ஸமாதௌ—ஸமாதியில், யதா நிச்சலா—எப்பொழுது அசைவின்றி ஸ்தாஸ்யதி—நிலைக்கின்றதோ ததா—அப்பொழுது. யோகம்— ஆத்மஞானத்தை. அவாப்ஸ்யஸி—அடைவாய்.

ஆத்ம தரிசனம் பெறுவதை மிகக் கடினமான காரியமாக வேதாந்தங்கள் கூறுகின்றன வேத மூலத்தை மனப்பாடம் செய்ய வேண்டும் அதன் பின் வேதப்பொருளையறிந்து விதித்த கர்மங்களைச்செய்து பாபத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும். பாபம் நசித்துப் பரம சுத்தனாய் இந்திரியங்களை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்திப் பிரணவத்தையே சொல்லி. காணும் பொருள்களையெல்லாம் நெடுங்காலம் பகவத் ஸ்வரூபமாகத் தியானம்செய்யவேண்டும். ஆத்ம தரிசனம் பண்ணுவதற்கு இப்படிப படிப்படியாக விதிக்கப்பட்டவற்றைச் செய்ய ஒரு ஆசார்யனை அடைந்து குருகுல வாசம் செய்து அவர் முன்னிலையிலே தியானம் பயிலவேண்டும் இத்தனை முயற்சிகளும் பலிக்க பூர்வ ஜன்ம புண்ணியம் வேண்டும் இத்தனை காரியங்களும் முறையே நிறைவேறினால் அன்றிப் பெற முடியாத ஆத்மஞானத்தையும் இந்தச் சுலபமான யோகத்தால் பெறலாம் என்றால் இதைவிட உயர்ந்தது ஒன்று உண்டோ?

——

குடும்ப வைத்தியம்

'குச்சா மாமா'

முன்காலத்தில், (நாகரிகத்தின் நிலை தற்போதுள்ள அளவிலில்இல்லாதபோது) நம் நாட்டில் பலவிதமான பழக்க வழக்கங்களும்,அறிவின் பெருக்கும்-பண்பின் நிறைவும் இருந்தது. 'தன் கையே தனக்குதவி' என்ற பழஞ்சொல்லைத் தழுவியும்,"...ஒன்றும் இன்றே செய்க இன்றும் இன்னே செய்க. நாளை நாளை என்பீராகில் கூற்றுவன் வருவான்..." என்பதை யொட்டிய வகையிலும்,முன் ஜாக்கிரதையுள்ள நம் முன்னோர், தக்க சமயங்களில் செய்த சில யுக்தமான காரியங்களால் பெரிதாகக்கூடிய இன்னல்களையும் தடுக்க வல்லவராயிருந்தனர். இதனால் நமக்குண்டான நன்மைகள் பல. இன்றோ, பல்வேறுகாரணங்களாலும் நாம் அவற்றையெல்லாம் மறந்தவராக அற்ப விஷயங்களுக்குங்கூட வேறொருவரின சகாயத்தை அபேக்ஷிக்கும் பரிதாபமான நிலைமைக்கு வந்திருக்கிறோம் ஆயினும் பண்டைய பழக்கங்களின் பெருமையை அறிந்த சில அறிவாளிகள் நாம் மறுபடியும் அப்பழக்கங்களை யேற்று, தேர்ச்சிபெற வேண்டுமென்று உபதேசிக்கின்றனர். இதில் ஏதாவது ஒரு துறையில், (வறட டுபதேசத்தை நிறுத்தி) செயற்கையில் புகுத்த முனைதல் அவசியம். நமதில்லங்களில் நம் தாய்மார்கள் பழகிவந்த "கை வைத்தியம்" என்ற சொல்லால் தெரிவிக்கப்பட்ட முறைகளை ஒருவாறு புதுமைப் படுத்தி, தற்போதைய சகோதரிகளுககுப் புகட்டி, அவரை நாம் பாட்டிமார்களைப் போல் காலக்கிரமத்தில் மாற்ற வேண்டுமென்ற நல்லதொண்டு புரிய இப்பகுதி ஏற்பட்டிருககிறது

கீழ்க்கண்ட சில "கைவைத்திய" மருந்துகள் ஒவ்வொரு வீட்டிலும் அவசியமிருக்க வேண்டியது.

தலைவலி. ஜலதோஷம். சளி தும்மல் கொஞ்சம் ஜுரம் இவற்றிற்கு: ஏலரிசி, லவங்கம். வெற்றிலையின் காம்பு ஆகியவற்றை சமபாகமாக எடுத்து பாலில்அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் தளிப்பிச்சு சூட்டோடு) பற்றிட்டு தணலால் சூடுபடுத்தலாம். இதனால் ஜலதோஷம் முறிவதல்லாமல் ஜுரமும் குறையும். அதிமதுரம் முசுமுசுக்கை. ஜடாமாஞ்சி, சித்திரத்தை இவற்றின்கஷாயத்தைக் குடிப்பதால் ஜலதோஷம் இருமல் சளி, ஜுரம் இவை போகும்.

[சமனிடையாக ஷி சரக்குகளை எடுத்துப் பொடித்து— 1-பலம் சரககுக்கு ஒரு ஆழாக்கு ஜலம் விட்டு 2 அவுன்ஸ் அள்வாகக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ½ முதல் 1 அவுன்ஸ் வரையில் 3 அல்லது 4 வேளை கொடுக்கலாம்]

அதிகமான உஷ்ணத்தினாலோ, உள் நாக்கு நீண்டிருப்பதாலோ உண்டாகும் வரட்டு இருமலுக்கும், இரவில் படுத்தால் உண்டாகியும் எழுந்து உட்கார்நதால் சற்று தணிவதாயும் உள்ள இருமலுக்கும—

தனித்த சித்தரத்தையின் ஒரு சிறு துண்டை நசுக்கி வாயில் அடக்கிக்கொள்ள நெஞ்சு கமரலுடன் உண்டாகும் இருமல் நிற்தும்.

கடுக்காய் ஒன்றைத் தணலிலிட்டுச் சுட்டு அதன் தோலின் ஒரு துண்டை மேற்சொன்ன விதமே அடக்கிக் கொள்ளலாம்.

அதிமதுரத்தின் ஒரு சிறு துண்டையும் அப்படியே அடக்கிக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்கேற்படும் கக்குவானென்ற இருமலில் தலைச்சன் ஈத்து சினையிலிருக்கும் பசுவின் மூத்திரத்தை ½ முதல் 1 ஸ்பூன் வரையில் தினம் ஒருவேளையாக இரண்டு அல்லது மூன்று நாளைக்குக் கொடுக்க நோய் மிகவும் சாந்தப்பிராயமாகும்— பிறகு இம் மருந்தை நிறுத்தி விடவும். ஆயினும் கக்குவான் படிப்படியாய் குறைந்துகொண்டே வந்து வெகு சிலநாடகளினுள் குணமாயவிடும்.

அம்மை முதலியவைகளில் அடிபட்டுத் தேறிய குழந்தைகளுககு இரண்டு மூன்று குளிகள் கழிந்த பிறகும் நீடித்திருக்கும இருமலுக்கு—கண்டங்கத்திரியின் வேர், பூனைக்காலி வேர் இவற்றின் கஷாயத்தில் சிறுகல்கண்டின் பொடியும் சேர்த்துத் தினம் 2 அல்லது 3 வேளை குடிப்பிக்கலாம்.

கருங்காலிக் கட்டையை நைய இடித்து—ஜலத்திலிட்டு எட்டிலொன்றாய்ச் சுண்டக்காய்ச்சிய கஷாயத்தில், கல்கண்டின் பொடியும் சேர்த்து வயதிற்குத் தக்கபடி வேளைக்கு 1 ஸ்பூன் முதல் 1 அவுன்ஸ் வரை தினமும் 2 அல்லது 3 வேளை, குடிக்க நெடுநாட்களாயுள்ள இருமலும் குறையும். வளர்ந்தவருககு, இருமலுடன் துப்பும் சளியில் ரத்தம கலந்திருந்தாலும், ரக்தமே துப்பினாலும் ஆடாதோடையின் இலையை ஆவியில் வாட்டிப் பிழிந்த ரஸத்தில் ஒரு ஸ்பூன் முதல் அரை அவுன்ஸ் வரையில் கொஞ்சம் தேனும் கூட்டி அடிக்கடியுமாககொடுக்க, ரத்தம் உடனே நிற்கும். இருமலும் குறையும்.

ஆடாதோடையின் **வேரின்** கஷாயத்தையும் கொஞ்சம் தேனுடன் கலந்து சில நாள் வரையில் தினம் 2 அல்லது 3 வேளை குடித்து வர இருமலும் கிரமமாகக் குறைந்து குணமாகிவிடும்.

சகல விதமான இருமலுக்கும், முக்கியமாக இழப்புடன் கூடிய சுவாசகாசத்திற்கும் (ஆஸ்த்மா) தானிக்காயின் தோலைப் பொடி செய்து 1 முதல் 2 சிடிகியளவாய் தினம் 3 அல்லது 4 வேளை கொடுக்கலாம்.

நாட்பட்ட இருமலினால் பலம் குறைந்து தேகம் மெலிந்திருப்பரேல், மூங்கிலுப்பைப் பொடி செய்து 2 முதல் 4 சிடிகியளவு பாலில் காய்ச்சி கற்கண்டின்



எரி எனும் ஏரியிலிருந்து ஓகியோ நதிவரை 130 மைல் நீளத்துக்கு இரும்பு கலந்த மண்ணை ஏந்திச் செல்ல உத்தேசிக்கபபட்டுள்ள குழாய் வடிவமுள்ள சாதனம். படத்தில் காணப்படுவது அதன் அமைப்பின் தோற்றம்.

பொடியும் கூட்டி உட்கொள்ள மிகவும் நல்லது. குழந்தைகளானல் பசுவின் பாலைவிட வெள்ளாட்டின் பால் மிகவும் உத்தமமாகும்.

அடிக்கடியும் ஜலதோஷம் பிடித்தல், சளி, இருமல் இவையுண்டாதல் அதனலேயே எண்ணெய் தேய்த்துக் குளிக்க முடியாததான சரீர தத்துவத்தை உள்ளவர் துாபைப் பூவையோ, வில்வத்தின் இலையையோ, நகப் என்ற கடைச்சரக்கையோ, அகில் கட்டையின் பொடியையோ எண்ணெயிலிட்டுக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்வித்து, அகில் கருங்காலி கட்டைகளின் பொடியைத் தணலில் தூவியெழுப்பிய புகையால் முடியை உலாத்தி, சூட்டோடு கூடிய இலேசான ஆகாரமுண்டு, வெயில் கொள்ளாமல் பகலுறங்காமல் இரவில் விழிக்காமலிருப்பதால், மேற்சொன்ன உபத்திரவங்களுண்டாகா.

சிறு விளம்பரங்கள்

வெட்டுகள், காயங்கள், புண்கள் & ரணங்கள்

உலகப் புகழ்பெற்ற ஜாம்-பெக் உபயோகித்தால் குணமடையும்



உலகின் மிகச் சிறந்த கிருமிநாச மருந்து ஜாம்-பெக் அதன் மருந்து எண்ணெய்கள் சருமத்துக்குள் புகுந்து வேலை செய்வதால்வேகமாகவேநிவாரணமளிக்கும் பாதிக்கப்பட்ட கிரந்திகளுக்கு ஜாம்-பெக் சமனமூட்டி விஷம் தீண்டப்பட்டு கிருமி நிறைந்த சருமத்தை சுத்தப்படுத்தி குணமாக்கும். மிருகக்கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

சருமநோய்கள், காயங்கள். பூச்சி கடிகள். புண்ணுகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி டி மதராஸ்.

ஜீவான்ஜன்



ரசாயனக் களிம்பு

மிருகக் கொழுப்பு சேராதது

ஜலதோஷம், மார்சளி உடம்பு வலி முதலிய சகல வேதனைகளுக்கும் நிவாரணமளிக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:

K.K. பிள்ளை & கோ

ராயப்பேட்டை, மதராஸ் 14.

பிரபல ஸ்தாபனங்களிடமிருந்து விளியோகஸ்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

MARIE

Dep

CREAM

ஓர் அருமையான வாசனை மெழுகு. சுத்தமானது. கெடுதலற்றது. பயமின்றி உபயோகிக்கலாம். உடனே பலன். வேரிலிருந்து மயிரை உதிர்த்துவிடும். நீண்டகாலமநிறகும.

பவுடர் தேவையானுல்,

மேரி டெப் பவுடர்ஸ் கேளுங்கள்

மெழுகு ஒரு டியூப் ரூ. 1/15 ஒரு ஜார் ரூ. 1/8

பவுடர் ஒரு பாட்டில் ரூ. 1/4

மேரி அன்டாய்னெட் டி பாரீஸ்

தயாரிப்பு

சர்தேஸாய் & கம்பெனி

பௌமன் சேம்பர்ஸ், மெடோஸ் தெரு.

போர்ட், பம்பாய்.

குகன்

சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

சிறு விளம்பரங்கள்

பிரசுரமான க்ருதிகள்

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்.

காயகசிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

•

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24 க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமாசாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனை தான் இருக்கும்.

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோடு, சென்னை 2.

அறிக்கை

கீழ்க்கண்ட இடங்களில் 1-3-49 முதல் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எமது ஏஜெண்டுகளின் விலாசங்களைக்கொடுத்துள்ளோம். அவர்களிடம் எமது பத்திரிகைக்குரிய சந்தாத் தொகையைச் செலுத்தி சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பெங்களூர் ஸிடி:

ஸ்ரீ. K. S. கோபாலசாமி ஐயங்கார்,
177, ஸர் புத்தண்ணசெட்டி ரோடு.
சாமராஜபேட்டை, பெங்களூர் ஸிடி

பெங்களூர் கண்டோன்மெண்ட்

ஸ்ரீ. K. R. ஸ்ரீனிவாச ராவ்.
தேவி நியூஸ் ஏஜன்சி,
57, இப்ரஹீம் சாயபு தெரு,
பெங்களூர் கண்டோன்மெண்டு.

•

சர்க்குலேஷன் மானேஜர்.
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்.
மவுண்ட்ரோடு, சென்னை.

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

அறிவிப்பு

கீழே கொடுத்துள்ள விலாசதாரரை எமது தினசரி வாரப் பதிப்புகளுக்கு ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னவரிடம் சந்தா செலுத்தி சந்தாதாரர்களாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு கோருகிறோம்.

கொழும்பு

ஸ்ரீ ஆர். தியாகராஜன்,
29, மிட்சோஸ்சந்து, பேட்டா. கொழும்பு
சர்க்குலேஷன் மானேஜர்
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்,
மவுண்டரோட், சென்னை

சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்
N.R. ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி... சேலம்



கவியரசி ஸ்ரீமதி ஸரோஜினியின் பிரேத ஊர்வலம் பண்டித நேரு வலப்புறத்தில் நிற்கிறுர். கடைசி முறையாக ஸரோஜினியின் முகதரிசனத்துக்காக லட்சக்கணக்கில் மக்கள் கூடினர்.



சென்றவாரம் சென்னை, மீனம்பாக்கம் விமானகூடத்தில் 'ஜெட்' விமானம் என்னென்ன விதமாகவெல்லாம் இயங்கும் என்பதை நடத்திக்காட்டினுர்கள். கண் இமைப்பதற்குள் இது வாயுவேகமாகப் பறக்கிறது. பொதுமக்கள் இதில் செய்து காட்டப்பட்ட வேலைகளைக்கண்டு வெகுவாக ஆச்சர்யமுற்றனர். மணிக்கு சுமார் 600 மைல் வேகத்தில் கூட இது பறக்கும் சக்தி கொண்டதாம்.

பழிக்குப்பழி

ராசு

மன்மதபுரம் என்ற ஊரை புத்தியில்லாத ஒரு அரசன் ஆண்டு வந்தான். ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து முழுமூடன் என்ற பெயரை அவனுக்கு வைத்திருந்தார்கள். ஏன் என்ருல் அவனைப்போன்ற மூடர்கள் உலகத்திலேயே கிடையாது. அவன் மிகவும் கொடுமையான மனது படைத்தவன். அவன் இட்டதே சட்டம். அவனை யாராவது எதிர்த்துப் பேசினுல் அந்த இடத்திலேயே அவர்களை தன்னுடைய வாளினுல் கொன்றுவிடுவான் அவனுடைய கொடுமைக்குப் பயந்து ஜனங்கள் எல்லோரும் அவன் சொல்படியே நடந்து வந்தார்கள் எந்த சமயத்திலும் எப்பேர்ப்பட்ட சட்டத்தையும் மாற்ற அவனுக்கு அதிகாரம் உண்டு

அதே ஊரில் சந்தனதாஸன் என்றவியாபாரி ஒருவன் இருந்து வந்தான். அவன் இருந்த வீடு மிகவும் பழைமையானது. ஆதலால் புது வீடு ஒன்றைக் கட்ட பக்கத்திலுள்ள நிலத்தில் ஏற்பாடுகளைச் செய்தான் வீடும் கொஞ்சம் கொஞ்சமாக கட்டப்பட்டு வந்தது. ஒரே ஒரு அறைதான் பாக்கி. அன்று வேலைக்காரர்கள் ஒரு பக்க சுவரைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். இன்னும் முடியவில்லை. நேரமாய் விட்டபடியால் அப்படியே பாதியில் நிறுத்தி விட்டுப் போய்விட்டார்கள்.

அன்று இராத்திரி ஒரு திருடன் அந்த வியாபாரியின் வீட்டைக் கொள்ளையடிப்பதற்காக அங்கு வந்து சேர்ந்தான். வீட்டிற்குள் குதிப்பதற்காக அந்தச் சுவரின் மீது ஏறினுன். அந்தச் சுவரோ அன்று மாலையில்தான் கட்டப்பட்டது. தவிர, இன்னும் முழுக்க முடியவில்லை. ஆதலால் களிமண் நன்ருகக் காயவில்லை. நன்ருகக் காய்ந்தால்தானே சுவர் கெட்டியாக இருக்கும்?

திருடன் சுவரின் மீது ஏறியதும், அது பாரம் தாங்காமல் இடிந்து விழுந்துவிட்டது பாவம்! திருடன் இடிந்துவிழுந்த சுவரின் அடியில் அகப்பட்டுக்கொண்டுவிட்டான் என்ன செய்வான்! எவ்வளவோ முயன்றும அவனுல் வெளிவர முடியவில்லை. கடைசியில் மூச்சுத்திணறி இறந்து போனுன்.

மறுநாள் காலையில் இது ஜனங்களுக்குத் தெரிந்தது உடனே அரசனுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. அரசன் தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு அந்த வியாபாரியை விலங்கிட்டுக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்கள் வியாபாரியை ஈவு இரக்கமில்லாமல் கைகளுக்கு விலங்கு போட்டு 'கரகர'வென்று தெருக்களில் இழுத்துக்கொண்டு போனுர்கள்

சபையில் வியாபாரி அரசனிடம், "மகாராஜா! இந்த மனிதன் இறந்ததற்கு நான் பொறுப்பாளி அல்ல. அவன் என்னுடைய வீட்டில் திருட நினைத்து வந்தான் அதற்கு தக்க பலன் கடவுளால் கொடுக்கப்பட்டது. சுவர் நன்ருகக் காயவில்லை என்பது என் தவரு?" என்று தாழ்மையுடன் முறையிட்டான் அரசனே இதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

"அந்த மனிதன் இறந்தது வியாபாரியின் தவறினுல்தான். அவன் ஏன் பாதியாக சுவரைக் கட்டியிருந்தான்? ஆதலால் வியாபாரிக்கு மரண தண்டனை! அதுவும் இப்பொழுதே நிறைவேற்றப்பட வேண்டும்." என்று கட்டளையிட்டான் மந்திரி பிரதானிகளுக்கோ வியாபாரி குற்றம் செய்யவில்லை என்று தெரியும். ஆனுல் என்ன பிரயோஜனம்! தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டால் அரசன் தங்களைக் கொன்றுவிடுவான். ஆதலால் அவர்கள் பேசாமல் இருந்துவிட்டார்கள்.

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வெகு சீக்கிரமாக நடந்தன. இந்தச் சமயத்தில் வியாபாரிக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே மகாராஜாவிடம், "மகாராஜா! வெளியூரில் என் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் இருக்கிருர்கள். அவர்களுக்கு கடைசியாக என் நமஸ்காரங்களைத் தெரிவிக்க வேண்டும். ஆதலால் தாங்

கள் எனக்குப் புரு ஒன்று கொடுத்தால் அதன் காலில் என்னுடைய கடிதத்தைக் கட்டி அனுப்புவேன் என்னுடைய வீட்டில் ஒரு புரு ஒன்று இருக்கிறது. அதைக் கொண்டு வந்து கொடுக்கும்படி செய்யுங்கள்" என்று கெஞ்சினான்

என்ன தோன்றியதோ அரசனுக்கு, அவன் இதற்கு சம்மதித்தான் அரசன் உத்திரவுப்படி புரு உடனே கொண்டு வரப்பட்டது வியாபாரி அதன் காலில் கீழ் கண்ட கடிதத்தைக் கட்டினான் "என் அன்பார்ந்த பிள்ளைகளே! நான் இன்னும் சற்று நேரத்திற்குள் அரசனால் கொல்லப்பட்டு விடுவேன் நான் கட்டிய புது வீட்டில் திருடுவதற்காக ஒரு திருடன் நேற்று இரவு சுவரின் மேல் ஏறினான் சுவர் புதிதாகக் கட்டப்பட்டிருந்ததால் அது இடிந்து விழுந்து அவன் இறந்துவிட்டான் அதற்குப் பதிலாக அரசன் என்னைக் கொன்றுவிட உத்திரவிட்டான் இதற்கு நீங்கள் இன்னும் ஒரு மாதத்திற்குள் பழிக்குப் பழி வாங்க வேண்டும் நம் குல தெய்வம் மீது ஆணை" இந்தக் கடிதத்தை எழுதி அதன் காலில் கட்டிப் பறக்கவிட்டான் புரு பறந்து சென்றது சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த வியாபாரியின் தலை கொலைகாரர்களால் துண்டிக்கப்பட்டது

வியாபாரியின் பிள்ளைகளிடம் புரு வந்து சேர்ந்தது கடிதத்தைப் படித்துப் பார்த்தார்கள் அவர்களுக்கு முழு மூடன் மீது சொல்லமுடியாத கோபம் ஏற்பட்டது இருவரும் கலந்து ஆலோசனை செய்தார்கள் ஒரு வழி புலப்பட்டது. மறுநாளே

அவர்கள் இருவரும் மன்மத புரத்திற்குப் புறப்பட்டார்கள்

மன்மதபுரத்தில் முழுமூடன் ஒரு விசித்திர சட்டம் ஏற்படுத்தியிருந்தான் என்ன தெரியுமா? நாம எல்லோரும் பகலில் வேலை செய்வோம், இரவில் தூங்குவோம் அங்கே அப்படியில்லை பகலில் நன்ருகத் தூங்க வேண்டும். இரவில் வேலை செய்ய வேண்டும் சட்டத்தை மீறினால் அவனுக்குத் தூக்குத் தண்டனை எவ்வளவு விசித்திரமான சட்டம் பார்த்தீர்களா?

அந்தப்பிள்ளைகள் இருவரும் மன்மதபுரத்தை அடையும்

பொழுது பகல் பன்னிரெண்டு மணிக்குமேலாகிவிட்டது அவர்கள்குளக் கரையில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் ஊரெல்லாம் நிசப்தமாய் இருந்தது. ஏன் என்ருல் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு அதுதான் இரவு. அப்பொழுது ஊர்க்காவல்காரர்கள் ஐந்தாறு பேர்கள் அங்கே வந்தார்கள் இவர்களைப் பார்த்து திருடர்கள் என்று நினைத்துப் பிடித்துக்கொண்டு போய் சிறையில் அடைத்துவிட்டார்கள் இரவு எட்டு மணிக்குத் தர்பார் ஆரம்பித்தது (அவர்கள நேரப்படி பகல்) அரசர் ஒருவித விசாரணையும் செய்யாமல். "சட்டத்தை மீறி இரவில் சஞ்சரித்ததற்காக இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை, கழுவில் ஏற்றுங்கள்" என்று தீர்ப்பு அளித்துவிட்டான் மறுபடியும் அவர்களை சிறையில அடைத்துவிட்டு, கழு மரத்தைக் கொண்டு வர காவல்காரர்கள் போய்விட்டார்கள்

பார்த்தார்கள் அண்ணனும், தம்பியும். "என்னடா, ஒருவித விசாரணையும் இல்லாமல் நமக்கு மரண தண்டனைக் கொடுத்துவிட்டான் இந்த மூட அரசன் இதுமாதிரிதானே நம் பிதாவும் கொல்லப்பட்டிருப்பார் ஆதலால் நாம் இந்த அரசனை இந்த இரண்டு காரணங்களினாலும் பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்று பேசிக்கொண்டார்கள் பிறகு இருவரும் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

காவல்காரர்கள் வந்து, கதவைத் திறந்ததும் அண்ணன் "நான்தான் முதலில் கழுவில்

ஏறுவேன்” என்று கத்திக்கொண்டே கழுமரம் இருக்கும் இடத்திற்கு ஓடினான். தம்பி அவனைப் பிடித்து நிறுத்தி விட்டு “நான்தான் முதலில் கழுவில் இறப்பேன்” என்று கத்திக்கொண்டு ஓடினான். காவல்காரர்களுக்கும். அரசனுக்கும், மற்றும் கூடியிருந்தவர்களுக்கும் ஆச்சரியமாய்ப் போய்விட்டது. இருவரையும் பிடித்து நிறுத்தினார்கள் அப்படியும் அவர்கள் மீறிக்கொண்டு, “நான்தான் முதலில் இறப்பேன்” என்று கத்திக்கொண்டிருந்தார்கள். அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர்களைக் கூப்பிட்டு விஷயம் என்னவென்று விசாரித்தான். அண்ணன் பின்வருமாறு பதிலளித்தான்:

“அரசே இன்றுதான் நல்ல நாள். இதைப்போல் நூறு வருஷங்களுக்கு நல்லநாள் கிடைக்காது. இன்று யார் கழுமரத்தில் முதலில் இறக்கிறார்களோ அவர்கள் மறு ஜன்மத்தில் இந்த ராஜ்யத்திற்கு அரசனாகவும்' இரண்டாவதாக கழு



மரத்தில் இறப்பவர் மந்திரியாகவும் பிறப்பார். ஆதலால் நான் முதலில் கழுமரத்தில் இறக்கப் போகிறேன்.” தம்பியோ, தான் முதலில் விழப் போவதாகக் கேட்டான்.

அரசருக்கு ராஜ்யத்தைவிட ஆசையில்லை. உடனே மந்திரியைக் கூப்பிட்டு “மந்திரி!” நான் முதலில் கழுவில் விழுகிறேன். பிறகு நீ விழு” என்று சொல்லி



விட்டு, அரசன் கழுவில் ஏறி உயிர்துறந்தான். பின்னாலே மந்திரியும் விழப் போனான். அண்ணன் அவனைத் தடுத்து “மந்திரி! நீ கழுவில் விழக்கூடாது. என் தகப்பனாரைக் கொன்றதற்காக, பழிக்குப் பழி வாங்க. இந்த மூட அரசனைச் சூழ்ச்சியினால் நானும், என் தம்பியும் கொன்றோம். நாங்கள் சொன்னதெல்லாம் பொய் ஆதலால் நீங்கள் வேறு நல்ல அரசனைத் தேர்ந்தெடுத்து நாட்டைப் பரிபாலியுங்கள்” என்று சொன்னான்.

அங்கு கூடியிருந்த ஜனங்கள் அண்ணன்வார்த்தையைக்கேட்டு சந்தோஷப்பட்டு, அவனையே அரசனாகத் தேர்ந்தெடுத்தார்கள். தம்பி இளவரசனாகப் பட்டம் கட்டப்பட்டான். தங்கள் மூட அரசன் இறந்து, நல்ல அரசன் பட்டம் ஏற்ற தினத்தை இப்பொழுதும், அந்த ஊர் வாசிகள் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். அண்ணன் தன் புத்தியினால் அரசனையே பழிக்குப் பழி வாங்கினான்.

கர்ப்பரக்ஷா மாத்திரை

பெண்கள் கர்ப காலங்களில் இதை சாப்பிட்டுவந்தால் எவ்வித கோளாறுமின்றி சுகப்பிரசவமாகும். கர்பச் சிதைவைத்தடுக்கும். நூறு மாத்திரை ரூ. **6—4—0.** ஐம்பது மாத்திரை ரூ. **3—8—0.**

★

தசமூலாரிஷ்டம்

பிரசவமான பிறகு உடம்பைத் தேற்றிக்கொள்ள இதுபோல் கைகண்ட ஔஷதம் வேறு கிடையாது. ஹிருதய பலவீனத்திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் ஆண்களும் உட்கொண்டால் பரிபூர்ண குணம் கிடைக்கும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. **6—0—0.**

விவரங்களுக்கு:—

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாசிரமம், குமரன் வீதி, திருப்பூர்.

பிராஞ்சு : **பல்லடம்.**

அரிய சந்தர்ப்பம் ! ★ குறைந்த விலை !

விலை சகாயம்

5. H. P. — L. S. E. மேக்கர், *1440* R P M *3/50/440* வோல்ட் மோட்டார், ஆலன் & வெஸ்ட் ஸ்டார்டர் சேர்ந்தது ரூ. **560.**

10. H. P. BROOKS மேக்கர், *960* R P M *3/50/440* வோல்ட் T. E. டைப் மோட்டார், ரெயில்ஸ், புல்லி, ஸ்டார்டர் சேர்ந்தது ரூ. **1200.**

1/4. H. P. E. E. CO. மேக்கர் *1420* R P M *230* வோல்ட் சிங்கிள்பேஸ் A. C. மோட்டார் ரூ. **150.**

5. H. P. L. S. E. மேக்கர், *1440* R P M *3/50/440* வோல்ட் மோட்டார், ஆலன் & வெஸ்ட் ஸ்டார்டருடன் $2\frac{1}{2}$X" 2" சயிஸ் தண்டாயுதபாணி பம்பு சேர்ந்தது ரூ. **850.**

10. S. D. M. E. M. ஸ்டார் டெல்டா ஸ்டார்டர் ரூ. **65.**

48" சயிஸ் ரஞ்சித் சீலிங் விசிறி ரூ. **160.**

விவரங்களுக்கு :

எஸ். எம். டி. வேலு & கம்பெனி,

எலக்டிரிகல் இம்போர்டர்ஸ், சேலம் டவுன்.

தபால் பெட்டி 48.

தந்தி : 'வேலு'

இந்த பெயர் . . .

ஸுராஜ்மல்ஸ்

வைர நகை வியாபாரிகள்

உங்கள்

நகைகளுக்கு

கௌரவம்

அளிப்பவை

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.